புலவர் சரிதம்

10587

12746

MA... ...RY
DR. U.V. S... ...41.
TIRUVAN...

வாழையடி வாழை

க. செபரெத்தினம்

ARASU PUBLICATION

LITERARY BIOGRAPHY

(1962)

வாழையடி வாழை

க. சபாரத்தினம்

அரசு வெளியீடு

231, ஆதிருப்பள்ளித் தெரு,
கொழும்பு-13.

அரசு வெளியீடு: 2
முதற்பதிப்பு: செப்டெம்பர் 1962
உரிமை ஆக்கியோனுக்கே

விற்பனையாளர்கள் :

பாரதி புத்தகசாலை
66, முதலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.

பூபாலசிங்கம் புத்தகசாலை
27, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

கலாநிதி புத்தகசாலை
பிரதான வீதி,
மட்டக்களப்பு.

தமிழ்ப் புத்தகாலயம்
393, பைகிராப்ட்ஸ் ரோடு,
சென்னை-14.

ரெயின்போ பிரின்டர்ஸ் 231, ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு-13

சமர்ப்பணம்



உள்ளத் தடத்திற் குருவா யமர்ந்துறையும்
வள்ளல்விபு லானந்த மாதவனைத் — தெள்ளுதமிழ்
வாழ்வை நினைந்தே யவனடிக்கண் வைத்திந்நூல்
தாழ்வேன் தருகதமி ழென்று.



பண்டிதமணி ஐயா



புலவர்மணி ஐயா

பதிப்புரை

இலக்கியம் அவாந்திரத்தின் அறுவடையல்ல. ஒவ்வொரு நாட்டின் இலக்கியத்திற்கும் தனித்துவ மரபும் வரலாறும் உண்டு. இவற்றின் பகைப்புலத்திலேதான் ஒரு நாட்டின் இலக்கிய வளர்ச்சியை மதிப்பிட முடியும்.

ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றினை இந்நூற்றுண்டு வரை சுருங்கக் கூறும் இந்நூல், நம் நாட்டின் இலக்கியத்திற்கு அருந்தொண்டாற்றி நம் மத்தியில் வாழும் இரு பெரியார்களின் வரலாற்றினையும் கூறுகின்றது. யாழ்ப்பாணம் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களினதும் மட்டக்களப்புப் புலவர்மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை அவர்களினதும் வாழ்க்கை வரலாறு, ஒரு கால கட்டத்தின் இலக்கிய வரலாருகவே அமைந்துள்ளது. புனைகதைகளை மட்டுமே இலக்கியமாகக் கொள்ளும் நுனிப்புல் மேய்ச்சற் கருத்தொன்று சிலர் மத்தியில் நிலவிவரும் இந்நாளில், 'வாழையடி வாழை' என்னும் இக்கட்டுரை நூலைப் பெருமையுடன் வெளியிடுகிறோம்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வித்துவான் க. செபரத்தினம் அவர்கள், இதன்கண் ஈழத்தின் தமிழ்கூறும் இரு மாகாணங்களை இணைத்துள்ளார். அவர் பழைமையில் ஊறிப் புதுமையையும் போற்றுபவர். இரண்டினையும் இணைத்து, அமைதியாக இலக்கியத் தொண்டாற்றி வருகின்றார்.

நமது முதல் வெளியீடான 'தோணி' சிறுகதைத் தொகுதிக்கு பேராதரவு நல்கிய வாசகப் பெருமக்கள், இதனையும் வரவேற்று ஆதரிப்பார்களென்பது நமது நம்பிக்கை.

வணக்கம்.

அரசு வெளியீடு

என்னுரை

தமிழ்பேசும் மக்களாகிய நமது வரலாற்றினை யிட்டு, நாம் தெளிவாக அறிந்து கொள்வதற் கான ஆதாரங்களை, நம்முன்னோர் விட்டுச் செல்ல வில்லை. தமிழ் இலக்கிய நூல்களின் காலங்களை யிட்டும், தமிழ்ப் புலவர் வரலாறு பற்றியும் அபிப் பிராய பேதங்களும் மலைவுகளும் ஏற்பட்டுள்ளமை இதன் விளைவேயாம்.

முன்னோர் செய்த தவறினை, நாமும் எமது பிற்சந்ததியாருக்குச் செய்யாதிருக்க வேண்டும். இலக்கிய முயற்சிகளையும், இலக்கிய ஆசிரியர்களைப் பற்றிய உண்மை விபரங்களையும் அவ்வக்காலத்தி லேயே நாம் குறித்து வைக்க முன்வரவேண்டும்.

இவ்வெண்ணம் மனதில் எழுந்த காலை, எம் மத்தியில் வாழ்ந்துவரும் இரு தமிழ்ச் சுடர்களான, யாழ்ப்பாணம் - பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களையும், மட்டக்களப்பு - புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களையும் பற்றி எழு தும் அவா மேலோங்கியது.

எனது எண்ணம் உருப்பெற ஊக்கந்தந்தவர், பிரபல தமிழ் எழுத்தாளரும் எனது நெருங்கிய நண்பருமான திரு. எஸ். பொன்னுத்துரை அவர் களேயாவர். பல சந்தர்ப்பங்களில், அவர் பல ஆக்கபூர்வமான ஆலோசனைகளை நல்கியுள்ளார்.

பண்டிதமணி அவர்களின் இரு மாணுக்கர்களான திரு. கனக. செந்திநாதன் அவர்களும், திரு. அ. பஞ்சாட்சரம் அவர்களும் பண்டிதமணி அவர்களைப் பற்றிய பல குறிப்புகளைத் தந்துதவினுர்கள். புலவர்மணி அவர்களின் மாணுக்கரான திரு. எப். எக்ஸ். சி. நடராசா அவர்கள் மெய்வருத்தம் பாராது அச்சுப்படிகளை அவ்வப்போது பார்த்து திருத்தங்கள் செய்துதவினுர்கள். இவர்கள் மூவருக்கும் நான் என்றும் கடப்பாடுடையேன்.

அரசு பதிப்பக நிர்வாகியும், எனது நண்பருமான எம். ஏ. ரஹ்மான் அவர்கள், இதனைக் குறித்த காலத்தில் நூல்வடிவாக்கித்தர முன்வந்தார். அவருக்கு எனது இதய பூர்வமான நன்றி.

எப்பெரியோர்களைப் பற்றி எழுதுகின்றேனே, அவர்களிருவரினதும் நிறைவான ஆசீர்வாதம் எமக்குக் கிட்டியமையை நான் பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன்.

ஈழத் தமிழகத்தோர் ஏத்தும் ‘இருமணியாய்’
வாழும் வழியறிந்து வண்கலைகள்—வாழையடி
வாழை யெனவளர்க்கும் வல்லோர் தமது புகழ்
ஏழை எழுதுவதோ ஈங்கு.

மட்டக்களப்பு. க. செபரெத்தினம்
24-9-62

வாழையடி வாழை

தோற்றுவாய்

இந்தியா தேசத்திற்குள் பிரவேசித்த ஆரியர், அங்கே வேறொரு சாதியினர் வாழ்ந்து கொண்டிருக்கக் கண்டு அவர்களோடு போராடினார்களென இருக்கு முதலிய வேதங்களிலிருந்து அறியக் கிடக்கின்றது. இவ்வாறு குடியேறிய ஆரியர் மேற்படி சாதியினரை தாஸர் என்றும் அஸுரர் என்றும் பெயரிட்டு அழைத்தனர். இருக்கு வேதத்தில் அஸுரரைப்பற்றிக் குறிப்பிடு மிடங்களில் அஹி என்னும் சொல்லும் உபயோகிக்கப் பட்டுள்ளது. இச்சொல்லானது, பாம்பு (நாகம்) என்னும் பொருளையும் தருகிறது. இதனால், இந்தியாவின் பூர்வீக மக்கள் நாகர் என்னும் சாதியினரே என ஆராய்ச்சி யாளர் கூறும் கூற்று வலுவடையக் காண்கிறோம். இந்த நாகரையே, அஸுரர் அல்லது தாஸர் என ஆரியர் அழைத்திருக்கின்றனர்.

இராமாயணமானது, இலங்கையில் அஸுர வம்சத்தினர் வாழ்ந்தனரென்றும், இலங்கை வேந்தனும் இராவணனும், அஸுர வம்சத்தினனே யென்றும் கூறுகின்றது. சிங்கள மன்னர்கள் அநுராத புரத்தைத் தலைநகராக்கிக் கொள்ளுவதற்குப் பல்லாண்டு களுக்கு முன்னரே, மாந்தை நகரானது (மாதோட்டம்) சிறந்த துறைமுகமாகவும், இலங்கையின் முக்கிய நகர

மாகவும் விளங்கியது. உரோமர், கிரேக்கர், அராபியர், சீனர் முதலிய அந்நியநாட்டினர் இங்குவந்து வியாபாரம் செய்துள்ளனர். நாகரிகம் மிக்க நாகரே இங்கு வாழ்ந்த மக்களாவர். மேலும், அக்காலத்திலே நாகர் என்னும் இச்சாதியினர் நாகதீபத்திலும், கல்யாணியிலும் வசித்தனரென்பதற்குப் போதிய சான்றுகளுள.

ஈழத்தின் புராதனவரலாற்றைக் கூறும் மகாவம்சத்தில், புத்தபகவான் லங்காவுக்கு மூன்றுமுறை வந்தாரென்றும், அவ்வருகைகளில் ஒன்று நாகதீபத்திற் கான தென்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. நாகதீபமென்பது, தற்போது நயினாதீவு என அழைக்கப்படுமிடமே யென்றும், அஃதன்றி, யாழ்ப்பாணக்குடாநாடு முழுவதுமே யென்றும், இருவேறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. கல்யாணி என்பது, தற்போதைய களனி கங்கை மருவிய மேற்குக்கரைப் பிரதேசத்தையே குறிப்பதென்பர். நாகதீபத்தின் அரசகுடும்பத்து உறவினர் கல்யாணியிலும் இருந்தனரெனவும், கல்யாணியின் ஒரு பகுதியானது கி. மு. இரண்டாம் நூற்றாண்டளவில் அழிந்ததெனவும் மகாவம்சம் கூறுகிறது.

இவற்றிலிருந்து இலங்கையின் பூர்வீகமக்கள் நாகரே என்பதும், இவர்கள் இலங்கையிலே தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்தவர்களென்பதும் பெறப்படுகின்றது. நாகர் அல்லது அஸுரர் என அழைக்கப்பட்ட இம்மக்கள், திராவிடரே என ஆராய்ச்சியாளர் கூறுவர்.

ஈழத்தில் வாழ்ந்து வந்த நாகர், தென்னகத்து மக்களுடன் கலந்துவாழும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. காலத்துக்குக்காலம் ஏற்பட்ட இத்தகைய தொடர்புகளால், நாகர்கள் தமிழ்நாகரிகத்துடன் இரண்டறக்

கலந்தனர். இதன் விளைவாக, இவர்கள் தமிழ்ப் புலமை யிலும், நாகரிகத்திலும் சிறந்து விளங்கினார்கள்.

சங்கம் வைத்துத் தமிழ்வளர்த்த புலவர் பெருமக்களுள் ஒருவராகக் கூறப்படும் முடிநாகராயர் என்னும் புலவரும், மருதனிலநாகனார், நன்னாகனார் முதலிய புலவர்களும், ஈழத்து நாகர் குலத்தவ ராயிருத்தல் வேண்டுமென்றும், அவர்கள் ஈழத்திலிருந்து தமிழகம் போந்து, வாழ்ந்து, தமிழ்ப்பணியில் பங்கு கொண்டிருக்கலாமென்றும் ஒரு காத்திரமான கருத்து நிலவிவருகிறது. இக்கருத்தினையிட்டு, இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் சிலரிடையே அபிப்பிராய பேதமிருந்தபோதிலும், அகநானூறு, நற்றிணை, குறுந் தொகை முதலிய சங்கநூல்களில் காணப்படும் சில செய்யுள்களின் ஆசிரியரான ஈழத்துப்பூதந்தேவனார் என்னும் புலவர், ஈழத்தவரே என்பதில் ஒருமைப்பாடே காணப்படுகின்றது.

சங்கச்சான்றோர், எமது ஈழநாட்டைப் பற்றிய குறிப்புகளைத் தங்களது பாக்களில் பொதிந்துள்ளனர். பட்டினப்பாலையிலே **'ஈழத்துணவும் காழகத்தாக்கமும்'** என வருவதனை இங்கு ஓர் உதாரணமாகத் தருதும். பிற்சான்றோரும் இவ்வாறு ஈழநாட்டைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளாரென்பதற்கு, **'கடல்சூழிலங்கைக் கயவாகு வேந்தனும்'** எனச் சிலப்பதிகாரத்தில் வருவதைக் காட்டுதும்.

இக்காலப்பகுதிக்குப் பிற்பட்ட காலப்பகுதிகளில் ஈழநாட்டைப் பற்றிய குறிப்புகளோ, ஈழத்தில் நடை பெற்ற தமிழ் முயற்சிகளைப்பற்றி அல்லது புலவர்களைப் பற்றி எழுதப்பட்ட செய்திகளோ கிடைப்பதாயில்லை. இவை ஈழத்திலே பிற்காலத்திலெழுந்த பாலிமொழி

ஆதிக்கத்தினுல் மறைக்கப்பட்டபோதிலும், சைவசமய மானது, ஈழத்திலே செழித்தோங்கியிருந்ததென்பதற்கு ஏழாம் நூற்ருண்டில் வாழ்ந்த சம்பந்தசுவாமிகளும் ஒன்பதாம் நூற்ருண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பாடியுள்ள தேவாரங்கள் சான்று தருகின்றன. திருகோணமலையையிட்டு சம்பந்தசுவாமி களும், மாந்தையிலுள்ள திருக்கேதீச்சரத்தையிட்டு சம்பந்தசுவாமிகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பாடி யுள்ளனர். இவர்களிருவரதும் தேவாரங்களில், இப் புண்ணிய தலங்களிரண்டினதும் பெருமையும், அவ் விடங்களின் அமைப்பும் இயற்கைச் செழிப்பும் அழகாகக் காட்டப்பட்டுள்ளன.

கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலை — என, சம்பந்தசுவாமி

கள் திருகோணமலையையிட்டுப் பாடியுள்ளார்.

அங்கத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே —

என, சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கேதீச்சரத்தை யிட்டுப் பாடியுள்ளார்.

இந்நாயன்மாரிருவரும் இலங்கை வந்ததாகச் செய்திகளில்லை. தேவாரங்களைப் பாடுவதற்குத் தமக்குத் தேவையான தலவிபரங்களைப் பிறவழிகளிலேதான் பெற்றிருக்க வேண்டும். அவர்களது காலத்தில், சைவ நெறி பூண்ட தமிழர்கள் இப்பகுதிகளில் வாழ்ந்தன

ரென்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் உண்மையாகும்.

பதின்மூன்றும் நூற்ருண்டில், யாழ்ப்பாணத்திலே தமிழரின் சுயாதீனமான தனி இராச்சியமொன்று உதயமானதோடு, தமிழரின் வரலாறும் தெளிவடைய லாயிற்று. இத்தமிழரசின் காலத்து இலக்கிய முயற்சி களைப் பற்றிய தெளிவான செய்திகள் நமக்குக் கிடைத்துள்ளமை நமது பாக்கியமே.

ஆரியச் சக்கரவர்த்திகளெனும் பெயரோடு, இத் தமிழ் இராச்சியத்தை ஆட்சிசெய்த அரசர்கள், தமிழ் மொழிக்கு அருந்தொண்டாற்றியுள்ளனர். வரோதய செகராசசேகரன் என்னும் அரசன் தானே பெரும்புலவனுய் விளங்கியதோடு, தமிழ்ச் சங்கமொன்றினை நிறுவித் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தும் வந்தான். இச்சங்கத்தின் புலவர்கள் அரசனின் தூண்டுதலின்பேரில் பலநூல்களை ஆக்கியதோடு பழைய நூல்களையும் தேடிச் சேர்த்தனர். இந்நூல்களனைத்தும், அரசனுல் கட்டப்பட்ட 'சரசுவதி மகால்' என்னும் நூல்நிலையத்தில் வைக்கப்பட்டுப் பாது காக்கப்பட்டன. இந்நூல்நிலையமானது கோட்டை மன்னரின் படையெழுச்சியால் அழிக்கப்பட்டமையை நாமடைந்த துர்ப்பாக்கியமெனவே கூறவேண்டும். செகராசசேகரமாலை என்னும் சோதிடநூலும், செகராச சேகரம் என்னும் வைத்தியநூலும், கணக்கதிகாரம் என்னும் கணிதநூலும், தட்சணகைலாச புராணம் என்னும் புராண நூலும் செகராசசேகரன் காலத்திலேயே இயற்றப் பட்டவையாம்.

இவனுக்குப் பின்னர் அரசுகட்டிலேறிய மார்த்தாண்ட பரராசசேகரன் என்னும் அரசன் காலத்திலே பரராச சேகரம் என்னும் வைத்தியநூல் ஆக்கப்பட்டது. இம் மன்னனின் மருகனுன அரகேசரி என்பான் பெரும்

புலவனுக விளங்கி இரகுவம்சம் என்னும் நூலினை இயற்றினுன். இந்நூல், வடமொழியிலே மகாகவி காளிதாசன் எழுதிய இரகுவம்சத்தை முதனூலாகக்கொண்டு ஆக்கப்பட்டிருப்பினும் இது தன்னகத்தே தனிச்சிறப்புக்களைக் கொண்ட ஒரு காவியமாகவே இருக்கிறது.

பதினைந்தாம் நூற்றுண்டிலே யாழ்ப்பாண இராச்சியமானது போத்துக்கேயரின் ஆட்சிக்குள் அகப்படலாயிற்று. அந்நிய ஆட்சியின் இரும்புப் பிடிக்குள் சிக்கியதன் விளைவாகத் தமிழ்மொழியின் வளர்ச்சி பெருமளவில் பாதிக்கப்பட்டதோடு, தமிழர்களின் வரலாற்றிலும் இருள்சூழத் தொடங்கியதெனலாம். இதன் மத்தியிலும் ஒரு சிலர் தமிழ்மொழியைப் பேணி வளர்ப்பதில் ஈடுபட்டிருக்கின்றனரென்பதை அறியும்போது நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. இவ்வாறு தமிழ் வளர்த்த பெரியோர்களுள், திருநெல்வேலியைச் சேர்ந்த **ஞானப்பிரகாசதேசிகர்** என்பார் பெரும்புலவராகத் திகழ்ந்தார். ஆறுமுகநாவலரின் மூதாதையினரான இவர், பறங்கியரின் தமிழ்ப்பண்புக்கு ஒவ்வாத சில நிகழ்ச்சிகளைத் தாங்கிடமுடியாது, தமிழ்நாடேகினுர். அங்கே, சிதம்பரத்தில் தமது வாழ்நாளைக் கழித்தார். வடமொழியிலே சித்தாந்தசிகாமணி, பிரமாணதீபிகை முதலிய நூல்களை ஆக்கிய இப்புலவர் தமிழ்நூல்கள் சிலவற்றிற்கு உரை எழுதியும் உள்ளார். இவற்றுள், சிவஞானசித்தியாருக்கு இவரால் எழுதப்பட்ட உரையானது சிறப்புடையதெனக் கற்ருேர் பாராட்டுகின்றனர்.

போத்துக்கேய-ஒல்லாந்தர் காலத்திலே வேறு சிலரும் தமிழ்மொழியை வளர்த்துள்ளனர். மருதப்பக் குறவஞ்சி, தாவீதின் சங்கீதங்கள், சத்தியத்தின் செயம் முதலிய நூல்களை எழுதியவரும் பன்மொழிப் புலவராய்

விளங்கியவரும், கிறிஸ்தவ வேதாகமத்தின் புதியேற் பாட்டை முதன்முதலில் தமிழிலே மொழிபெயர்த்தவரு மான பிலிப்பு தே மெல்லோ என்பாரும், சந்தியோகுமை யோர் அம்மானை பாடிய பேதுருப் புலவரும்; கிள்ளைவிடு தூது, பிள்ளையார் கதை முதலிய நூல்களின் ஆசிரியரான சுண்ணாகம் வரதபண்டிதரும்; யோசேப்புப் புராண மென்னும் நூலினையும், நன்னூலுக்கு உரையொன்றினை யும் எழுதிய கூழங்கைத்தம்பிரானும், அவரது மாணவராயிருந்து யாழ்ப்பாண வைபவமாலை இயற்றிய மயில் வாகனப்புலவரும், மறைசை அந்தாதி, கல்வளை அந்தாதி, பருளைவிநாயகர் பள்ளு முதலியவற்றை அழகுதமிழில் சிறப்புடன் பாடிய பெரும்புலவராம் சின்னத்தம்பிப் புலவரும், நல்லைவெண்பா, நல்லை அந்தாதி, நல்லைக் குறவஞ்சி முதலியவற்றின் ஆசிரியரான சேனாதிராச முதலியாரும், இக்காலகட்டத்தில் வாழ்ந்து தமிழ்ப் பணியாற்றிய புலவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

பொதுவாகத் தமிழ் உரைநடை இலக்கியத்தின் பொற்காலமெனப் போற்றப்படுவது ஐரோப்பியர் காலந்தானெனினும், போத்துக்கேய ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களில் இலங்கையின் இலக்கிய முயற்சிகள் நத்தை வேகத்தில் சென்றுகொண்டிருந்ததென்பது சுட்டத் தக்கதே. அதேசமயம், தமிழ்மொழி வளர்ச்சியிலே விரும்பத்தக்க வேகமும் வீச்சும் ஐரோப்பியரான ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்டதனை நாம் குறிப்பிட்டே ஆகவேண்டும். இதற்கான காரணங்களில் ஆங்கிலேயரது ஆட்சி முறையையும், ஆங்கிலக்கல்வி யையும் முக்கியமானவையாகக் குறிப்பிடலாம். இப் புதிய சாதகமான சூழ்நிலையில் தோன்றிய புலவர்களும் அறிஞர்களும் தமிழ்வளர்ச்சியில் பெரும் ஈடுபாடு கொண்டு உழைக்கலாயினர்.

ஆங்கிலேய ஆட்சிக்காலப் புலவர்களுள், காலத்தால் முந்தியவரும், ஞானசிரியர் போதகாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர் என்றெல்லாம் போற்றப் படுபவருமான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டியவர்களாவர். '........தமிழ்மகள் யாழ்ப்பாணமென்னும் நாடகமேடையில் தனது பூரண வனப்புத்தோன்ற நடித்தகாலம் ஆறுமுகநாவலர் கால மாகும்' என்று பிற்கால அறிஞர் துதிக்குமளவிற்கு நாவலரின் கைகளில் தமிழன்னை வண்ணக்கோலம் புனைந்தாள். தமிழினை முறையாகக் கற்ற இவர்கள், அக்காலத்து மிஷனரிமார்களுள் சிறப்பாகத் தமிழ் மொழியைக் கற்றிருந்த பேர்சிவல் ஐயரிடம் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் ஆங்கிலமொழியினையும் கற்று, ஆங்கிலத்தில் திறமை வரப்பெற்றார். இத்திறமையினை, அவர்கள் பேர்சிவல் ஐயருடன் இணைந்து கிறிஸ்தவ வேதத்தினை தமிழில் மொழிபெயர்த்தமை நன்கு எடுத்துக்காட்டுகின்றது. நாவலரவர்களின் பிற்காலப் பணி சிறந்து விளங்கியமைக்கு, அவர்கள் ஐயரவர் களிடம் பெற்றுக்கொண்ட பயிற்சியும், வைத்திருந்த நெருங்கிய தொடர்பும் பெரிதும் காரணமாயமைந்தன.

கிறிஸ்தவமதமானது இலங்கைத் தமிழர்களை வசீகரிக்கத் தொடங்கியதனால், மதமாற்றம் பெரு மளவில் நடைபெற்றது. இதனைக்கண்ட நாவலரவர்கள் வீறுகொண்டெழுந்தார்கள். தம் மதம் அழிந் தொழிந்து போகாவண்ணம் தடுத்திட ஊக்கமுடன் உழைத்தார்கள். வெற்றியுமடைந்தார்கள்.

கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதை மட்டுமே நோக்கமாகக்கொண்டு தமிழ்நாடு வந்த என்றிக் ஐயர், தத்துவபோத சுவாமிகள், வீரமாமுனிவர், சீகன்பால்கு ஐயர் முதலியோர் எவ்வாறு மதத்தைப்பரப்பியபோது,

தமிழையும் வளர்த்தார்களோ அதேபோன்று, நாவலரவர்களும் சைவத்தை வளர்க்க முயன்றபோது சிறந்த முறையில் தமிழும் உரம்பெற்றது.

நாவலரவர்களின் காலத்தவர்களேயான **கு. கதிரைவேற்பிள்ளை, சி. வை. தாமோதரம்பிள்ளை** என்னும் பெரியார்களிருவரும் ஆங்கிலம் கற்றும் உயர் பதவிகளை வகித்தவர்கள். தாம் பெற்றுக்கொண்ட அறிவினைத் தமது தாய்மொழியின் வளர்ச்சிக்காகவே இவர்கள் பயன்படுத்தினர்.

நிகண்டுகளை ஒப்புநோக்கி வீரமாமுனிவரால் எழுதப்பட்ட சதுரகராதியே தமிழில் எழுந்த முதல் அகராதியாகும். இதனைத் தொடர்ந்து வெளிவந்தவற்றில் மானிப்பாய் அகராதியும், உவின்சுலோ பாதிரியாரின் அகராதியும், மேலைப் புலோலி நா. கதிரைவேற்பிள்ளையவர்களது அகராதியும் சிறந்த முறையில் வெளிவந்தன. இவற்றைத் தொடர்ந்து புதுமுறையிலே சொற்களின் தோற்றம், இலக்கிய ஆட்சி முதலியவற்றைக் காட்டிச் சிறந்ததோர் அகராதியினை கு. கதிரைவேற்பிள்ளையவர்கள் ஆக்கினார்கள். இதனை மதுரைத் தமிழ்ச் சங்கத்தினர் தமது சங்கத்தின் பெயரில் வெளியிட்டனர்.

சங்கநூல்களைத் தேடியெடுத்து அவற்றைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டவர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களேயாவர். இவர், தொல்காப்பியம், இறையனாரகப்பொருளுரை, வீரசோழியவுரை, கலித்தொகை, சூளாமணி, தணிகைப் புராணம் முதலியவற்றைப் பதிப்பித்த பரோபகாரியாவர்.

இவர்களைப்போலவே சிவசம்புப்புலவர், சபாபதிநாவலர், பொன்னம்பலபிள்ளை, குமாரசுவாமிப்புலவர், பூபாலபிள்ளை, கனகசுந்தரம்பிள்ளை, ம. க. வேற்பிள்ளை, சுவாமி ஞானப்பிரகாசர், கணேசையர், சோமசுந்தரப்புலவர், நவநீதகிருஷ்ண பாரதியார், விபுலாநந்த அடிகள் முதலிய சான்றோர்கள் வழிமுறையாகத் தமிழ்மொழியை வளர்த்து வந்திருக்கிறார்கள்.

ஈழத்தமிழகத்தினது கடந்த கால்நூற்றாண்டுகாலத் தமிழ் வளர்ச்சியிலே, தங்கள் வாழ்க்கையைப் பின்னிப் பிணைத்து மரபுபேணி மொழி வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ள பெருமைக்குரிய பெரியோரிருவர் எம்மத்தியில் வாழ்ந்து வருவதைக் குறித்து நாம் பெருமைப்பட வேண்டும். இவர்களிருவரும் யாவரோவெனின் அவர்கள் தாம் யாழ்ப்பாணத்துப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும், மட்டக்களப்பு புலவர்மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை அவர்களுமாவர். இவர்களிருவரும் வடக்கிலங்கையிலும், கிழக்கிலங்கையிலுமிருந்துகொண்டு ஈழத் தமிழ்ப் பயிரை உரிமையுடன் வளர்த்து வருகிறார்கள்.

நாவலர் என்ற மாத்திரத்தே அச்சொல்லானது, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களை மட்டுமே குறிப்பிட்டு நிற்றல்போல, பண்டிதமணி, புலவர்மணி என்னும் சொற்கள் முறையே கணபதிப்பிள்ளை அவர்களுக்கும், பெரியதம்பிப்பிள்ளையவர்களுக்குமே, ஈழத் தமிழகத்தில் உரிமை பூண்டு நிற்கின்றன.

பிறப்பு

1899ஆம் ஆண்டும், யாழ்ப்பாணத்து மட்டுவிலும், மட்டக்களப்பு மண்டூரும் புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். பண்டிதமணியும் புலவர்மணியும் பிறந்தது தால் ஏற்பட்டதே இந்தப் புண்ணியமென்க.

சங்க நூல்களைப் பதிப்பிக்கும்பணியில் ஈடுபட்டு ழைத்துத் தமிழன்னையை மகிழ்வித்துவந்த தமிழறிஞர் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள், இயற்கையெய்தப் போகும் காலம் சமீபித்துவிட்டதை அறிந்துதான் கணபதிப்பிள்ளையவர்களையும், பெரியதம்பிப்பிள்ளை யவர்களையும் தமிழன்னையானவள் 1899ஆம் ஆண்டில் ஈன்றெடுத்தனள் போலும்.

மட்டுவில் மருதடிப் பிள்ளையாரில் பக்தியுடைய வராய் விளங்கிய சின்னத்தம்பியவர்களே பண்டித மணியின் தந்தையாவர். தாயார் பெயர் வள்ளியம்மை. மண்டூர்க் கந்தனில் ஈடுபாடுடையவரும், கந்தசுவாமிக் கோயிலின் முகாமையாளராக முப்பத்தைந்தாண்டுகள் முறையான பணியாற்றியவருமான ஏகாம்பரப்பிள்ளை யவர்களின் மூத்த புதல்வனே புலவர்மணி. சின்னத் தங்கம் அம்மையாரே இவரது தாயார்.

இயற்கையாகவே, இறைவனில் பக்திபூண்டிருந்த தந்தையரிருவரும், தர்மசிந்தையிலும் நல்லொழுக்கத் திலும் சிறந்து விளங்கினார்கள். இவர்களிருவரும் பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம், கந்த புராணம் முதலிய சமயநூல்களை ஐயந்திரிபறக்

கற்றிருந்தனர். சின்னத்தம்பியவர்கள், மட்டுவில் உரையாசிரியர் வேற்பிள்ளையவர்களிடம் பாடங்கேட்ட பெருமையினையும் பெற்றவர்.

கல்வியில் நாட்டமுடையவர்களாய் விளங்கிய தந்தையரிருவக்கும் பிள்ளைகளாகப்பிறந்த கணபதிப் பிள்ளையவர்களும், பெரியதம்பிப் பிள்ளையவர்களும் பெரும் கல்விமான்களாக விளங்கவேண்டியது முறைமை யன்றோ!

இளமைக்கல்வி

நீண்டகாலமாக பிறநாட்டாரின் ஆட்சியில் அல்ல லுற்றுக் கிடந்தனர் தமிழர். அவர்கள் வரலாற்றிலே, தமிழ்ப் புலமையானது மங்கி மறைந்துவிடாது வளர்ந்து வந்தமைக்குக் காரணம், பண்டுதொட்டு குருசீட பரம்பரையில் வந்த கல்விமுறையென்றே கூறவேண்டும். ஆழ்ந்தகன்ற கல்வியைப்பெறுவதற்குரிய சிறந்ததோர் வழியாக இஃது அக்காலத்திலிருந்து வந்தது. 'சி. க.' பிள்ளையும், 'ஏ.பெ.' பிள்ளையும் குருசீட முறையில் கல்வி கற்கும் பேறு பெற்றிருந்தனர்.

'பிள்ளை' யவர்களிருவரும் தங்களது ஆரம்பக் கல்வி யைத் தங்கள் தங்கள் தந்தையர்களிடமிருந்து பெற்றுக் கொண்டதன் பின்னர், உரையாசிரியர் வேற்பிள்ளை யவர்களது மகனும், கற்பனையின் எல்லையாகவும் சொற்பொழிவுத் தோன்றலாகவும் விளங்கிய மகாலிங்க சிவத்தாரிடம் 'சி. க.' அவர்களும், வித்துவான் சந்திரசேகர உபாத்தியாயரிடம் 'ஏ. பெ' அவர்களும் பாடங்கேட்டுத் தங்கள் தமிழறிவினை நன்கு வளர்த்துக் கொண்டார்கள்.

'சி.க' அவர்களின் தாயார் மரணமடைந்ததால், மட்டுவிலில் வசித்துக்கொண்டிருந்த இவர்களது குடும்பம், தனங்கிளப்பிற்கு இடம் பெயர்ந்து செல்ல வேண்டியதாயிற்று. இதனுல் இவரது முறையான தமிழ்க்கல்வியானது தடைப்பட்டது. முறையான கல்வியில் தடையேற்பட்டபோதிலும், படிக்கவேண்டுமெனும் பெருவிருப்புக் கொண்டிருந்த கணபதிப்பிள்ளையவர்கள், வசதி கிடைக்கும்போதெல்லாம் தமது அறிவினை விருத்தி செய்துவரலானுர். தக்க ஆசிரியர் ஒருவரை அடைந்து, அவரிடம் பாடங்கேட்டு முறையான கல்வியைப் பெற்றிட வேண்டுமெனும் ஆசையானது, அவரது மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது. தமது ஆசை நிறைவேறும் நாளை அவர் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

வித்துவான் சந்திரசேகர உபாத்தியாயர் 'ஏ.பெ' அவர்களது வீட்டில் தங்கிநின்றே, 'ஏ.பெ' அவர்களுக்கும் மண்டூரிலிருந்த வேறு மாணுக்கர் பலருக்கும் பாடஞ் சொல்லிக் கொடுத்து வந்தார். இந்நாட்களில் 'ஏ.பெ' அவர்கள் தாயாரும் இறந்துபோனுர். இதனுல், தொடர்ந்து தமது வகுப்புகளை வைக்கமுடியாத நிலையினை உபாத்தியாயரவர்கள் அடைந்தனர். இதனுல் பெரியதம்பிப் பிள்ளையவர்களது முறையான தமிழ்க் கல்வியும் தடைப்படலாயிற்று. தமிழ்க்கல்வி தடைப்படவே, ஏகாம்பரமவர்கள் தமதுமகனை கல்முனையிலிருந்த ஆங்கிலபாடசாலையில் சேர்த்துவிட்டார். தமிழ்மொழியில் பற்றுமிக்கவராய், அம்மொழியையே கற்க வேண்டுமென்னும் வேணவாக்கொண்டிருந்த பெரியதம்பிப் பிள்ளையவர்கள், தந்தையாரின் விருப்பத்திற்கிணைய ஆங்கிலபாடசாலையில் சேர்ந்தார்.

காவிய வகுப்பு

முறையான தமிழ்க்கல்வி தடைப்பட்ட நிலையிலிருந்த 'பிள்ளை'யவர்களிருவரதும் வாழ்க்கையிலே 1917ஆம் ஆண்டில் ஒரு முக்கியமான திருப்பம் ஏற்பட்டது. இந்த ஆண்டிலே தான், யாழ்ப்பாணத்து நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் காவிய வகுப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

இக்காவிய வகுப்பை நிறுவியவர்கள், அக்காலத்திலே யாழ்ப்பாணத்தின் பெருந்தூண்களாய் விளங்கிய இரண்டு பெரிய மனிதர்களாவர். அவர்கள் தாம் நாவலரையாவின் தமையனார் புத்திரரும் குழந்தைப் பருவந்தொட்டு, இருபத்துநாலு வயதுவரை நாவலரவர்களின் சந்நிதியில் வளர்ந்தவருமாகிய கைலாசபிள்ளையவர்களும், 'குணநாடி குற்றமுநாடி மிகைநாடி மிக்க வற்றால், ஒவ்வொருவரையும் ஒவ்வொரு நூலையும் அளக்கும் ஆற்றல் வாய்ந்த சங்கப் பலகை' என 'சி.க' அவர்களினால் விதந்தேற்றப்படும் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரவர்களுமாவர்.

நாவலரவர்களுக்குப் பிறகு தமிழையும் சைவத்தையும் தம்மிரு கண்களாகக் கொண்டு, அவற்றை வளர்க்கும் பணியில் விருப்புடன் இறங்கிய இப்பெரியார்களிருவரும், இதற்காக எத்தனையோ முயற்சிகள் செய்தார்கள். கடைசி முறையாக இவர்கள் செய்த முயற்சிதான் இந்தக் காவிய வகுப்பு. காவிய வகுப்பினையாவது சரிவர நடத்தி, நாவலரையா அவர்களது கனவினை—தமிழையும் சைவத்தையும் ஆழமாகப் போதித்திட வேண்டுமென்னும் எண்ணத்தினை, நிறைவேற்றிவிட

வேண்டுமென விழைந்த இவர்கள், காவிய வகுப்பின் ஆரம்பத்தினையிட்டு இந்து சாதனப் பத்திரிகையிலே,

> 'நாவலர் பாடசாலையில் உள்ள காவிய வகுப்பிற் படிக்க மாணவர்கள் தேவை; உணவு, புத்தகங்கள், இருப்பிடம் முதலியன இலவசம்.' என்னும்

விளம்பரத்தினை வெளியிட்டனர். இவ்வகுப்பில் சேர் வோரின் பிற செலவுகளுக்கென மாதந்தோறும் ஆறு ரூபாவும் வழங்கப்படும் ஒழுங்கு இருந்ததிலிருந்து, அக் காலத்திலே, தமிழ் மொழியைப் போதிப்பதற்கு இவ் வறிஞர்கள் எவ்வளவு முயன்றிருக்கின்றனரென்பது விளங்குகின்றது.

இக்காவிய வகுப்புத்தான் கணபதிப்பிள்ளையவர்களை யும், பெரியதம்பிப்பிள்ளையவர்களையும் இணைத்துவைத்து, அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு ஆழமானதொரு அத்திவாரமாயமைந்ததோடு அவர்களை இன்றுவரையும் இணைபிரியாத நண்பர்களுமாக்கியது.

கணபதிப்பிள்ளையவர்கள் காவியவகுப்பில் சேர்ந்தது ஒருகதை.

காவிய வகுப்பினைப்பற்றிய விளம்பரம் வெளியான நாட்களிலே, உரையாசிரியர் வேற்பிள்ளையவர்களது இளைய மகனும், 'சி. க'வின் நெருங்கிய நண்பருமான நடராசா அவர்கள், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார். தனங்கிளப்பிலே தணியாத தமிழ்ப்பசியுடனிருந்த 'சி. க'வின் நிலையை நன்கறிந் திருந்த இவர், காவியவகுப்பினைப் பற்றிய விளம்பரத் தைக் கண்டதும் தனங்கிளப்புக்குச் சென்று, காவிய வகுப்பினையிட்டு கணபதிப்பிள்ளையவர்களிடமும் அவர்தம் தந்தையாரிடமும் விளக்கிக்கூறினார். இச் செய்திகேட்ட இருவரும் களிபேருவகையெய்தினர். காவிய வகுப்புக்கான மாணவர்களைத் தெரிவு செய்வ தற்கு வைக்கப்படும் பரீட்சைத்தினத்தன்று, 'சி. க'

வினை அனுப்பிவைப்பதாகத் தந்தையார் கூறினார்.

பரீட்சைக்கென்று குறிக்கப்பட்ட தினத்தன்று கணபதிப்பிள்ளையவர்கள் வராததைக்கண்டு ஏமாற்ற மடைந்த நடராசா அவர்கள், இன்னுமொருநாளைக் குறிக்கும்படி மனேஜர் கைலாசபிள்ளையவர்களிடம் கேட்டுக்கொண்டு, 'சி.க' வை தனங்கிளப்பிலிருந்து அழைத்து வர ஏற்ற ஒழுங்குகளைச் செய்தார்.

பரீட்சைத் தினத்தன்று 'சி.க' வினை அழைத்துக் கொண்டு, நடராசா அவர்கள் நாவலர்பாடசாலைக்குச் சென்றார். பரீட்சை தொடங்கிவிட்டது. நேர்முகப் பரீட்சை. பரீட்சை நடாத்தியவர் குமாரசுவாமிப் புலவரவர்கள். பரீட்சையின் முடிவிலே,'படிப்புத்தெரியாது, வகுப்பில் சேர்வதற்குத் தகுதியற்றவர்' என்னும் பெறுபேறு அறிவிக்கப்பட்டது. இம்முடிவினைக் கேட்டுப் பெரிதும் வருந்திய நடராசா அவர்கள், கைலாசபிள்ளையவர்களைத் தனிமையிற் கண்டு, 'சி.க' வினது நிலையினை நன்கு விளக்கி, ஒருமாதமாகுதல் பரீட்சார்த்தமாக வைத்திருந்து பார்க்கும்படி பரிவுடன் கேட்டுக்கொண்டார். நடராசா அவர்களது தந்தையாரான வேற்பிள்ளையவர்களிடம் பாடங்கேட்ட கைலாசபிள்ளையவர்கள், இவ் வேண்டுகோளை உதாசீனஞ் செய்யமுடியாத நிலையினரானார். கணபதிப்பிள்ளையவர்கள் காவிய வகுப்பில் சேர்க்கப் பட்டார். ஒருமாதம் கழிந்தபின் 'சி.க' வைப் பார்க்கப் போன நடராசா அவர்களிடம்,

'அற்புதமான விவேகி, படிப்பில் ஊக்கமும் உயர்ந்த குணமும் உள்ள பையன், அவரைக் கொண்டு வந்து தந்ததற்காக உமக்கு மிகவும் நன்றி.'- என கைலாசபிள்ளையவர்கள் 'சி.க' வைப் பற்றி புகழ்ந்துரைத்தாராம்.

பெரியதம்பிப்பிள்ளையவர்கள் காவிய வகுப்பில் சேர்ந்தது பிறிதொரு கதையாகும்.

மட்டுவிலைச் சேர்ந்தவரும், 'சி.க' பிள்ளையினது குடும்பத்திற்கு நெருங்கிய சொந்தக்காரருமான தம்பி முத்துப்பிள்ளையென்பார், புத்தக வியாபார நோக்கமுடன் மட்டக்களப்புக்கு அடிக்கடி வந்துபோகத் தொடங்கினர். இவ்வாறு வரும் நாட்களிலே, மண்டூருக்கும் போக வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. அங்கே 'ஏ.பெ' பிள்ளையவர்களது வீட்டினைத் தங்குமிடமாகக் கொண்டு, தமது புத்தக வியாபாரத்தைக் கவனித்து வந்தார். இவ்வாறு இவர் மண்டூரிற் தங்கி நிற்கும் காலங்களில், பெரியதம்பிப்பிள்ளையவர்களது தமிழார்வத்தையும், தமிழினை முறையாகப் படிக்கவேண்டுமென ஆசை கொண்டிருந்த அவர்தம் உள்ளத்தையும் இவரால் அறிய முடிந்தது. 'சீரு சென்றுயினும் கல்விசேர்' என்னும் முதுமொழியினை நன்கு அறிந்திருந்த 'ஏ.பெ' பிள்ளையவர்களை, தம்பிமுத்துப்பிள்ளை அவர்களின் தொடர்பானது வடபுலம் செல்லத் தூண்டியது. ஏகாம்பரப்பிள்ளை அவர்களும் தமது மகன் யாழ்ப்பாணம் சென்று படிப்பதற்குத் தடைசொல்லவில்லை.

காவிய வகுப்பின் ஆரம்பத்தையும், அஃது ஆரம்பிக்கப்பட்டு ஒருமாதந்தான் என்பதையும் அறிந்திருந்த தம்பிமுத்துப்பிள்ளையவர்கள், தாம் யாழ்ப்பாணம் சென்றபோது 'ஏ.பெ' பிள்ளையையும் அழைத்துச்சென்று தமது சொந்தக்காரராகிய நடராசா என்பாரிடம் ஒப்படைத்து, அவரைக் காவிய வகுப்பில் சேர்த்து விடுமாறு கேட்டுக்கொண்டார். கணபதிப்பிள்ளையவர்களைச் சேர்த்தவரும் இதே நடராசா அவர்களே. 'அவரை'ச் சேர்த்த இவர், 'இவரை'யும் சேர்க்க வேண்டிய நியதி இருந்தது.

நடராசா அவர்களில், 'சி.க' பிள்ளையில் திறமைகுறித்து அபிமானம் வைத்திருந்த கைலாசபிள்ளையவர்கள், பெரியதம்பிப்பிள்ளையவர்களையும் காவிய வகுப்பில் சேர்க்கத் தடைசொல்லவில்லை. பெரியதம்பிப்பிள்ளையவர்களும் காவிய வகுப்பில் சேர்க்கப்பட்டார்.

காவிய வகுப்பில் தாங்களிருவரும் சேர்ந்தமைபற்றி மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை வெளியீடான 'கலைச் செல்வி' *என்னும் மலருக்கு, 1955ம் ஆண்டிலே தாம் எழுதிய கட்டுரையில், பண்டிதமணியவர்கள் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:*

'ஆங்கிலமோகம் தலைக்கு மீறித் தாண்டவமாடிய அந்தக்காலத்திலே - தகுதியுள்ளவர்கள் தமிழைப் புறஞ்செய்த அந்தக்காலத்திலே - படிப்பு வாசனையின்றியிருந்த என்னையும் அவர்கள் அந்தக் காவிய வகுப்பில் சேர்க்க நேர்ந்தது. இன்னுஞ் சிலர் அவ் வகுப்பிற் சேர்ந்தார்கள். மட்டக்களப்பிலிருந்தும் ஒருவர் வந்து சேர்ந்தார். அவருக்கு ஆங்கில அறிவும் உண்டு. கவிதை புனையும் ஆற்றல் இயற்கையில் அவர்பால் அமைந்திருந்தது. அங்கே தகுதி வாய்ந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் அவர். ஆங்கிலத்தை மேலும் விருத்திசெய்து புருஷ இலக்ஷணமான உத்தியோகமொன்றைப் பெற்றுக் கொள்ள விரும்பாமல் தமிழ் படிப்பதற்கென்று அவர் அங்கிருந்து இங்கு வந்தது எங்களுக்குப் பெரிய ஆச்சரியமாயிருந்தது. அவர்தாம் ஏ. பெரிய தம்பிப்பிள்ளை; புலவர்மணி.'

காவிய வகுப்பின் ஆசிரியர்

ஸ்ரீ. வை. தாமோதரம்பிள்ளையவர்களுக்கும் வேறு பலர்க்கும் ஆசிரியராய்த் திகழ்ந்த, முத்துக்குமார கவிராயரவர்களின் வமிசத்தில் பிறந்த, குமாரசுவாமிப் புலவரவர்களே காவிய வகுப்பின் ஆசிரியராவர். வித்துவ பரம்பரையில் பிறந்தவரான புலவரவர்கள், மல்லாகம் ஆங்கிலபாடசாலையிற் படித்ததோடு, பண்டித சிகாமணி முருகேசு பண்டிதரிடம் இலக்கண இலக்கியங்களும், நாகநாத பண்டிதரிடம் சமஸ்கிருதமும் பாடங்கேட்டு முறையான அறிவு வரப் பெற்றவராவர். கவிபாடுவதிலும், கட்டுரை எழுதுவதிலும், சொற்பொழிவாற்றுவதிலும் வல்லுநராய் விளங்கிய புலவரவர்கள், ஆறுமுகநாவலரவர்களிடமும் தமது சந்தேகங்கள் சிலவற்றைக் கேட்டுத் தெளிந்ததோடு அன்னாரது பாராட்டினையும் பெற்றுள்ளார்.

புலவரவர்கள் துணுவைப்பதிகம், மாவைப்பதிகம், அத்தியடிவிநாயகரூஞ்சல், அமராவதிபூதூர்பாலவிநாயகர்பதிகம், மேகதூதக்காரிகை, முதலிய பல நூல்களை இயற்றியதோடு, திருகோணமலை கனகசுந்தரம் பிள்ளையவர்களுடன் சேர்ந்து, கம்பராமாயணம் பாலகாண்டத்திற்கு ஓர் அரும்பத உரையும், அகப்பொருளுக்குப் புத்துரையொன்றும் எழுதியுள்ளார். தண்டியலங்காரப் புத்துரை, யாப்பருங்கலக்காரிகைப் புத்துரை, இலக்கியச் சொல்லகராதி, தமிழ்ப்புலவர் சரித்திரம், இதோபதேசம், சிசுபாலசரிதம் முதலியவையும் புலவரால் இயற்றப்பட்டவையே.

இத்தகைய புகழ்படைத்த புலவர் பெருமானவர்கள், ஞாபகசக்தியும் நுண்மாணுழைபுலமும் வாய்க்கப் பெற்றிருந்ததோடு தாம் கற்றனவற்றையும், அறிந்தனவற்றையும் மற்றவர்களும் அறிந்திடவேண்டுமென்னும் பெருநோக்குடையவராயும் திகழ்ந்தார்.

புலவரவர்கள் காவிய வகுப்பின் ஆசிரியர்பிராஞயமர்ந்ததும், அவர்களுடைய மாணுக்கர்களாக 'சி.க' பிள்ளையும் 'ஏ.பெ' பிள்ளையும் வந்து வாய்க்கப் பெற்றதும் சிறப்புடையதொன்றேயாம். நல்லாசிரியரும், நன் மாணுக்கர்களும் வாய்க்கப்பெறின், அதன் பெறுபேறுகளை அளவிடவும் முடியுமோ?

காவிய வகுப்பின் கல்விமுறை

ஆசிரியருக்கும் மாணவர்க்குமுள்ள தொடர்பானது பற்ருேடுகூடியதாகவோ, இறுக்கமான அன்புடன் இணைந்ததாகவோ அமைந்திராத தற்காலக் கல்விமுறைக்கு. முற்றிலும் வேறுபட்டவொரு கல்விமுறையே அக்காலத்திலிருந்தது. மாணுக்கரின் தகுதியறிந்து, ஆசிரிய - மாணவ பற்றினை - அன்பினை அடிப்படையாகக் கொண்டு, தூய்மையான சூழலிலே, வெகு நிதானமாகக் கற்பிப்பதே அக்கால கல்வி முறையாக இருந்தது. குருசீடமரபான பரம்பரையிலே அமைந்த இத்தகைய கல்வி முறையில், பரீட்சைக்குத் தோற்றுவதற்கென படிப்பிக்கும் வழக்கமும் படிக்கும் வழக்கமும் இருக்கவில்லை. மொழியினைத் துறைபோகக்கற்று, நிறைவான புலமையினைப்பெற்றுக் கொள்ளுவதையும், பிற்கால வாழ்க்கையைப் பயனுடையதாய் ஆக்கிக்கொள்ளுவதற்கு வேண்டிய பயிற்சியினைப் பெறுவதையுமே நோக்கமாகக் கொண்டு, அதற்கேற்ற கல்வியானது போதிக்கப்பட்டு வந்தது.

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக',

என வள்ளுவப்பெருந்தகை வலியுறுத்திக்கூறும் கல்வியின் நோக்கத்தினை இங்கு அவதானிக்க முடிகிறது.

இந்த அடிப்படையிலமைந்த காவிய வகுப்பிலே, மாணவர்களுக்கு நிறைவான அறிவைக் கொடுப்பதற் குரியவகையில் பாடங்கள் ஒழுங்கு படுத்தப்பட்டு போதிக் கப்பட்டன. நிறைந்த பலனைப்பெற இதனால் மாண வர்களுக்கு வழியேற்பட்டது.

காவிய வகுப்பிலே, தற்போது வழக்கிலுள்ளதைப் போன்ற பரீட்சைகளெதுவும் இல்லாதுவிட்டாலும், மாணாக்கரின் பெறு பேற்றினை அறிவதற்குமட்டும், அக்காலத்திலே யாழ்ப்பாணத்தில் **சேர்.பொன்.அருணாசலம்** அவர்களைத் தலைவராகக் கொண்டிருந்த, **செந்தமிழ்ப் பரிபாலன சங்கமானது**, சில பரீட்சைகளைக் காலத்துக்குக் காலம் நடாத்தி வந்தது. பேரறிஞர்கள் பலரை உறுப்பினர்களாகக் கொண்டிருந்த இச்சங்கத்தின் சிறப்புக்கூட்டங்களிலே, பொதுமக்களின் முன்னிலையில் **'கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே'** என்னும் முறையில் வாய்முறையாக மாணவர்கள் பரீட்சிக்கப்பட்டனர். திறமைகாட்டும் மாணவர்கள் பாராட்டுதல்களோடு பரிசுகளும் பெற்றுக்கொள்வர்.

மேற்படி சங்கத்தினர், நாவலர் பாடசாலையிலே ஒருநாள் பரீட்சையொன்றினை நடாத்தினார்கள். அப் பரீட்சைக் குழுவுக்கு பெரும் கல்விமானாய் விளங்கிய **சேர். கனகசபை** அவர்கள் தலைமை தாங்கினார்கள். பரீட்சை மண்டபத்தைப் பேரறிஞர்களும், பண்டித வித்துவான்களும் அலங்கரித்துக் கொண்டிருந்தனர். விபுலாநந்த அடிகளாரும் வீற்றிருந்தார்கள்.

அறிஞர்கள் வினாவிய வினாக்களுக்கெல்லாம் சிறந்த முறையில் விடையளித்து, கணபதிப்பிள்ளையவர்கள் முதற்பரிசினையும், பெரியதம்பிப்பிள்ளையவர்கள் இரண்டாம் பரிசினையும் பெற்றுக் கொண்டார்கள். 'சி.க' தாம் பெற்றுக்கொண்ட சீவக சிந்தாமணியையும், 'ஏ.பெ' தாம் பெற்றுக்கொண்ட சிலப்பதிகாரத்தையும், இன்றும் பெருமையுடன் பேணிவைத்துள்ளனர். தமது மாணக்கர் சிறந்த முறையில் விடையளித்து, பரிசில்கள் பெற்றுக் கொண்டதைக் கண்ட புலவரவர்கள்,

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்'

என்னும் நிலையினரானார்கள். புலவரவர்கள் தங்கள் மாணாக்கர்களனைவரிலும், இவ்விருவர்மாட்டே மிக்க அன்புடையவராயிருந்தார்களென்பதையிட்டு அன்னாரின் புத்திரரான கு. அம்பலவாணபிள்ளையவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

இங்கும் அநேக மாணவர்கள் யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலும், வெளியூர்களிலுமிருந்து வந்து கல்வி பயின்றனர்...அவருட்சிலர் இருபாலை மு. வேதாரணிய தேசிகர், உடுவில் வ. மு. இரத்தினேஸ்வர ஐயர்... மட்டுவில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, மட்டக்களப்பு ஏ. பெரியதம்பிப்பிள்ளை என்போர். இவர்களில் ஈற்றில் காட்டப்பட்ட இருவரும் மேற்படி வித்தியாசாலையிலன்றித் தந்தையார் வாதநோயாற் பீடிக்கப்பட்டிருந்த காலத்து இல்லத்திலும் வந்து தொடர்ச்சியாகக் கற்றவர்கள்; தகப்பனாரின் அன்புக்கும் உரியவராகவிருந்தவர்கள்.

[ஈழகேசரி வெள்ளி விழாமலர்]

பண்டித மயில்வாகனனாரின் தொடர்பு

'பிள்ளை'யவர்களிருவரும் காவியவகுப்பின் மாணக்கர்களாயிருந்த காலத்தில், மட்டக்களப்பைச் சேர்ந்த பண்டிதர் மயில்வாகனனார் என்னும் அறிஞர், யாழ்ப்பாணத்துப் பெரிய கோயிற் பள்ளிக்கூடத்திலே (St. Patrick's College) விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றிக்கொண்டிருந்தார்கள். [இவர்களே பிற்காலத்தில் விபுலாநந்த அடிகளாரெனப் பெயர்பெற்று விளங்கிய பெரியார்.] பாடசாலையிலே கற்பிக்கும் நேரம் தவிர்ந்த நேரங்களில், தாம் தங்கியிருந்த 'மரகதமடம்' என்னும் இல்லத்திலே, தம்மிடம் வரும் மாணக்கர்களுக்குத் தமிழறிவினை ஊட்டிக்கொண்டிருந்த, இப்பெரியாரது தொடர்பு 'பிள்ளை'யவர்களிருவருக்கும் கிடைத்தபோதிலும், அத்தொடர்பினால் பிற்காலத்திலே பெரும்பயனடைந்தவர் பெரிய தம்பிப்பிள்ளையவர்களேயாவர்.

குமாரசுவாமிப் புலவர், பண்டித மயில்வாகனனார் என்னும் இருபெரும் அறிஞர்களிடமும் 'ஏ.பெ'கொண்டிருந்த தொடர்பானது, அவரது கல்வியறிவினை அகலமடையச் செய்ததோடு ஆழமுமாக்கிற்று. 'ஏ.பெ'பிள்ளையிடம் இயற்கையாகவே அமைந்திருந்த கவித்துவ ஆற்றலும், இத்தொடர்பினாலேயே வெளிப்பட்டது. இக்காலத்திலேதான் இவரது கன்னிமுயற்சியான 'மண்டூர்ப் பதிகம்' பாடப்பட்டது.

'ஏ.பெ.' அவர்களின் மதமாற்றம்

காவிய வகுப்பில் படித்துக்கொண்டிருந்த பெரியதம்பிப் பிள்ளையவர்கள் 1921ஆம் ஆண்டிலே மட்டக்களப்புக்குத் திரும்பிவந்து, உபாத்திமைத் தொழிலில் நாட்டங்கொள்ளலானர். அவருக்கு, சேர் பொன். இராமநாதனல் நிறுவப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரியில் இடம்கிடைப்பதாக இருந்தபோதிலும், நுணுவில் அமிர்தாம்பிகை சைவ வித்தியாசாலையின் ஆசிரியர் பதவியையே அவர் மனம் நாடிற்று. இங்கு படிப்பிக்கும் காலத்திலே, 'சாவகச்சேரி இந்து வாலிப சங்க'க் கட்டிடத்திலேயே தங்கினர்.

உயர்சாதி இந்துக்களின் பிரபுத்துவ இம்மைகளில் அல்லலுற்று, மக்களுள் மாக்களாக வாழவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டுள்ள, துர்ப்பாக்கியசாலிகளான தாழ்த்தப்பட்ட மக்களுடன், தீண்டாமையெனும் கொடுமை உச்சநிலையிலிருந்த அந்தக் காலத்திலே, பெரியதம்பிப்பிள்ளையவர்கள் சமத்துவமாகவே பழகலானர். அச்சமூகத்தைச் சேர்ந்த ஆறுமுகம் என்பாரைத் தமது உற்ற நண்பராகக் கொண்டாடினரென்றல் 'ஏ.பெ'பிள்ளையினது சமரச நோக்கிற்கு வேறு சான்றுகள் தான்வேண்டுமா? இவரது இப்போக்கினை, சாதிவெறியில் திளைத்திருந்த இந்து வாலிப சங்கத்தினர் வன்மையாகக் கண்டித்துவந்தனர்.

சமய அறிவிலும், சங்கீத ஞானத்திலும், பிறகலைகளிலும் பாண்டித்தியம் பெற்றுவிளங்கிய ஆறுமுகம்

அவர்கள் இயற்கையெய்தியகாலே, தமது நட்பின் சின்னமாக 'ஏ. பெ' அவர்கள் பத்துவெண்பாக்களாலான இரங்கற் பாவினைப் பாடிக்கொடுத்தனர். அவற்றுள் ஒரு செய்யுள் வருமாறு;

ஒழுக்கத் துயர்குலமாம் ஓங்கு புகழுண்டாம்
இழுக்கத் திழிகுலமாம் என்றே-விழுப்பத்து
நூற்குலத்தை யெல்லாம் நுணுகியறிந்த ஆறுமுகன்
மேற்குலத்த னுனன் விரைந்து.

தாழ்த்தப்பட்ட மக்களுடன் ஏற்றத் தாழ்வின்றி 'குணத்தளவே யாகும் குலம்' என்னும் உறுதியுடன் பழகி வந்த 'ஏ.பெ' பிள்ளையின்மீது ஏற்கனவே மனவெறுப்புடனிருந்த இந்து வாலிபர் சங்கத்தாரின் ஆத்திரத்தை இரங்கற்பாக்கள், மேலும் கூட்டிவிட்டன. இச்சங்கத்தின் செயலாளராக அந்நாட்களில் கடமையாற்றிய முதலியார் சிவகுரு என்பார், பெரியதம்பிப்பிள்ளையவர்களை வன்மையாகக் கண்டித்தார்.

இந்து மார்க்கத்திலே, சமரசத்திற்கு-சாதிபேதமற்ற சமத்துவநிலைக்கு - இடமில்லையா என்று 'ஏ. பெ' துயருற்றார். இஃது அன்னாரின் உள்ளத்திலே அமைதியின்மையை ஏற்படுத்தலாயிற்று. இதன் எதிர்ப்பலிப்பாக கிறிஸ்தவ வேதமும், கிறிஸ்தவ ஆலயங்களில் காணப்பட்ட சாதிபேதமற்ற சமரசநோக்கும்-போக்கும் 'ஏ.பெ' பிள்ளையினை வசீகரித்தது. இந்த நிலையில் பெரியதம்பிப்பிள்ளையவர்கள் கிறிஸ்தவ சமயத்தின் பக்கம் சாய்ந்தார். இவரின் ஆற்றலைப் பயன்படுத்திட விரும்பிய கிறிஸ்தவ சங்கத்தினர், இவரை இந்தியாவிலுள்ள பசுமலை என்னுமிடத்தில் அமைந்திருந்த வேத

சாஸ்திரக் கலாசாலைக்கு, 1922-ஆம் ஆண்டில் அனுப்பி வைத்தனர்.

வேத சாஸ்திரக் கல்லூரியிலே படித்துக்கொண்டிருக்கும்போது 'ஏ.பெ' பிள்ளையவர்கள் தமது தமிழ்ப் புலமையினை வெளிப்படுத்தவும், வளர்த்துக் கொள்ளவும் ஏற்ற சந்தர்ப்பங்களைப் பெற்று வந்தார். இவரது திறமையினை யறிந்துகொண்ட கல்லூரி அதிபரும் பேராசிரியர்களும் இவரைப் பெரிதும் மதித்து வந்தார்கள்.

இக்காலத்திலே 'வேதாகமத்தின் இந்திய விளக்கம்' என்னும் பொருள்பற்றி, இந்தியா, பர்மா, இலங்கை முதலிய தென்கிழக்காசிய நாடுகளுக்கென வைக்கப்பட்ட ஒரு பகிரங்க எழுத்துப் போட்டியிலே 'ஏ.பெ' பிள்ளையவர்களே முதலிடம் பெற்றதானது, அன்னாரின் புகழை மேலும் வளர்த்திட உதவியது. கிறிஸ்தவ மதமானது, கீழைத்தேய பாரம்பரியங்களுடனும் கலாசாரத்துடனும் இணைக்கப்பட்டு மக்கள் முன்பாகக் காட்டப்படவேண்டுமென விரும்பிய 'ஏ.பெ' பிள்ளை அவர்கள், பக்திச்சுவையினை வெளிப்படுத்தக்கூடிய கிறிஸ்தவ தேவாரங்கள் பலவற்றைப் பாடினர்; பாடல்கள் பலவற்றை ஆக்கினர். இவற்றுள், திரு அவதார கீதங்கள், குருபரதரிசனத் திருவேட்கை, கிறிஸ்தவ சபையின் துயிலுணர்ச்சி முதலியன மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டவையாம். 'ஏ.பெ' பிள்ளை வெளிப்படுத்திக் காட்டிய பக்திச்சுவைக்கு, குருபரதரிசனத் திருவேட்கையிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் பாடலை உதாரணமாகத் தரலாம்:

தானுன அன்பரும்பித் தருமம் பூத்துத்
தாவாத இனிமைதரு பரமானந்தத்
தேனுறு பெருக்கெடுத்துக் கரை புரண்டு

திருவருளாம் தெள்ளமுதம் கொளித்து வீச
நாஞர்வ முடனள்ளி உண்ண ஊட்டி
நரகமதை நீக்கி நித்திய ஜீவனியும்
கோஞகும் ஒருசீவ விருட்சம் தன்னைக்
குருபரனைக் கண்டு கண்கள் குளிர்வதென்றே.

கிறிஸ்தவ பெரும் புலவரான பாளயங்கோட்டை, கிருஷ்ண பிள்ளையவர்களின் 'இரட்சணிய யாத்திரீக'த்தின் முதற்பாகத்திற்கு வேதசாஸ்திரக் கல்லூரி ஆசிரியரொருவரோடு சேர்ந்து 'ஏ. பெ' பிள்ளையவர்கள் சிறந்ததோர் உரை எழுதியுள்ளார்.

சமத்துவசமரசம் காணப்படுகிறதென நினைத்து கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிக்கொண்ட பெரியதம்பிப் பிள்ளையவர்கள், அங்கே கிறிஸ்தவ மேலிடத்தாரின் மத்தியில் சாதிவித்தியாசம் பார்த்தலும், சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கு மதிப்புக் கொடுத்தலும் நிலவிடக்கண்டு திகைத்தார். வேதசாஸ்திரக் கல்லூரியில் தமக்கு ஏற்பட்ட ஓர் அனுபவ மூலம் இதனை அவர், பிரத்தியட்சமாக அறிந்துகொண்டார்.

யாழ்ப்பாணத்திலிருந்து 'தாழ்ந்த சாதியினர்' என அழைக்கப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த தேவதாசன் என்பார் வேதசாஸ்திரக் கல்லூரியில் சேர்வதற்காகப் புறப்பட்டார். இவர் பசுமலை சென்றடையு முன்னரே, யாழ்ப்பாணத்திலிருந்த கிறிஸ்தவ ஊழியர்களும், உயர் சாதிக் கிறிஸ்தவ மக்களிற் சிலரும் இவ்விடயம் பற்றி 'ஏ.பெ' பிள்ளையவர்களுக்கு கடிதம் எழுதி, தேவதாசனை ஒதுக்கி நடத்தும்படி கேட்டுக்கொண்டார்கள்.

சாவகச்சேரியில் ஆறுமுகம்; பசுமலையில் தேவதாசன். ஒன்று இந்துவாலிபர் சங்கம்; மற்றது கிறிஸ்தவ ஊழியர் சங்கம். அங்கும் சாதி வித்தியாசம், உயர்வு தாழ்வு; இங்கும் அதே நிலை. 'ஏ.பெ' பிள்ளையின் மனதில் திரும்பவும் அமைதியின்மை ஏற்படலாயிற்று. சமத்துவ சமரச சமூகம் ஏற்படவே மாட்டாதா?

பண்டித பரீட்சையும் – கணபதிப்பிள்ளை அவர்களும்

'ஏ.பெ' பிள்ளையவர்கள் காவிய வகுப்பினை விட்டு விலகிய போதிலும், 'சி.க' பிள்ளை மட்டும், தொடர்ந்து புலவரவர்களின் மாணவராயிருந்து பாடங்கேட்டு வரலாயினர். புலவரவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த இறுதிக் காலத்திலும், அவர்களில்லம் சென்று, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொண்டே 'சி.க' பிள்ளையவர்கள் படித்து வந்தார்.

புலவரவர்களின் போதனையினாலும், அருள்நோக்கினாலும், நிறைவான அறிவினைப் பெற்றுக்கொண்ட உணர்ச்சி ஏற்பட்ட கணபதிப்பிள்ளையவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டித பரீட்சை எடுத்தாலென்ன என்று எண்ணலானார். பரீட்சைகளைப்பற்றி நல்லபிப்பிராயம் வைத்திராதவரும், பரீட்சைகளுக்கென்று படிப்பிக்கும் வழக்கமற்றவருமான புலவரவர்கள் 'சி.க' பிள்ளையின் எண்ணத்தினை அறிந்ததும் சிறிது கோபமடைந்தார்கள். "உனக்கு யார் இந்தப் புத்தி சொன்னது?" என்று கேட்டுக் கொண்டே 'சி.க' பிள்ளையின் புத்தகங்களைப் பொறுக்கி எடுத்து, அவரிடம் ஒப்படைத்து, "சரி வரலாம், பண்டிதச் சோதனைக்கு வேண்டிய அறிவு முன்னமே

வந்துவிட்டது,'' என்று கூறினர். முன்பு ஒருபோதுமே கோபித்தறியாத புலவரவர்களின் உள்ளத்தைப் புண் படுத்தி விட்டோமே என்பதையுணர்ந்த 'சி.க' பிள்ளை தனது தவறினைத்திருத்திக் கொண்டார். பரீட்சை எண்ணத்தை விடுத்து, புலவரவர்களிடம் தொடர்ந்தும் பாடங்கேட்டு வரலானர்.

புலவரவர்கள் 1922-ஆம் ஆண்டில் இறைவனடி சேர்ந்தார். புலவரவர்களின் இடத்தில், வித்துவான் சுப்பையாபிள்ளை என்னும் அறிஞர், காவிய வகுப்பின் ஆசிரியராக, கைலாசபிள்ளை அவர்களால் நியமிக்கப் பட்டார். 'சி.க'பிள்ளையவர்கள் தாம் படித்து முடிவடையாதிருந்த தொல்காப்பியத்தின் சிலபகுதிகளை, வித்துவானவர்களிடம் படித்து முடித்துக் கொண்டார்.

தமிழ்ப் புலமையினை நிறைவாகப் பெற்றுக்கொண்ட கணபதிப்பிள்ளையவர்களை, பண்டித பரீட்சையெடுக்கும் படி நண்பர்களும் உறவினர்களும் வற்புறுத்தினர்கள். இதனல் 'சி.க'பிள்ளையவர்கள் 1925-ஆம் ஆண்டிலே பரீட்சையெடுத்து மிகத் திறமையுடன் சித்தியடைந் தார். யாழ்ப்பாணத்திலே பண்டிதபரீட்சையில் தேறிய முதலாவது ஆண் மகன் இவர் என்பது குறிப்பிடத் தக்கதே.

அக்காலத்திலே, மதுரைத்தமிழ்ப்பண்டித பட்டம் பெற்ற ஈழத்தறிஞர்கள் நால்வரேயிருந்தனர். மேற்படி பரீட்சையொன்றிருப்பதை அறிந்து, பரீட்சையெடுத்து, முதன் முதலாகப் பண்டித பட்டம் பெற்றவரான மட்டக்களப்பு மயில்வாகனனர்; பருத்தித்துறை வ. குமார சுவாமிப்புலவரின் பேத்திகளான பாலாம்பிகை, பத்மாசனி; பண்டித மயில்வாகனனரிடம் பாடங்கேட்ட வவுனியா இராசையனர் ஆகியோரே அந்நால்வர். 'சி. க' பிள்ளை ஈழத்தின் ஐந்தாவது பண்டிதரானர்.

கணபதிப்பிள்ளையவர்களது பெருமையினைப் பாராட்டுவதற்காக நடைபெற்ற விழாவிலே, வரிசை நோக்கியறிந்து பாராட்டுபவரெனப் பெயர் பெற்றிருந்த கைலாசபிள்ளையவர்கள், 'சி.க' பிள்ளையினைப் பெரிதும் பாராட்டி தங்கப்பதக்கமும் வழங்கினார். அறிஞரான மகாலிங்க சிவமவர்களும், கணபதிப்பிள்ளை அவர்களைப் பாராட்டியதோடு, மட்டுவிலில் நடந்த விழாவொன்றிலே தங்கப்பதக்கமொன்றனையும் வழங்கினார்.

பதவியேற்றல்

ஆசிரிய பயிற்சியினைப் பெற்றுக்கொள்ளாத ஆசிரியர்கள், பண்டிதபட்டம் பெற்றிருந்தபோதிலும், குறைவான சம்பளமே பெற்றுவந்தனர். ஆகவே, பண்டிதர் கணபதிப்பிள்ளையவர்களையும் ஆசிரிய பயிற்சி பெறுவதற்காக, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சேரும்படி, காவிய வகுப்பில் அன்னாரைச் சேர்த்தவரான நடராசா அவர்கள், தூண்டினார்கள்; மகாலிங்க சிவமவர்களும் ஊக்கப்படுத்தினார்கள். கைலாசபிள்ளையவர்களும் சம்மதிக்கவே 'சி. க' பிள்ளை ஆசிரிய கலாசாலையில் சேர்ந்தார். இரண்டு வருடப் பயிற்சியையும் முடித்துக்கொண்டு வெளிவந்த அன்னாரின் சேவையை திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை அவாவிநின்றது. 1929-ஆம் ஆண்டிலே அவ்வாசிரிய கலாசாலையில் தமிழ்ப் பேராசானாய்ச் சேர்ந்த பண்டிதரவர்கள், ஓய்வு பெறும் வரை அப்பதவியினையே வகித்து வந்தார்.

மயிலிட்டி திரு. சி. சுவாமிநாதன் அவர்களை அதிபராகவும், 'ஒருசமயி, ஒழுக்கவரம்பு' என்றெல்லாம் போற்றப்படும் திரு. பொ. கைலாசபதி அவர்களை உப அதிபராகவும், பண்டிதர் திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களைத் தமிழ்ப்பேராசிரியராகவும் கொண்டிருந்த சைவாசிரிய கலாசாலையானது, ஓர் உயர்தரக் கலாசாலையாகவே திகழ்ந்தது.

வேதசாஸ்திரக் கல்லூரியிலே குழம்பிய உள்ளத்தோடு, அமைதியற்ற நிலையிலிருந்த பெரியதம்பிப் பிள்ளையவர்களுக்கு, பசுமலை உயர்நிலைப் பள்ளியின் தமிழ்ப்பண்டிதரும், நூலாசிரியருமாய் விளங்கிய சுப்பிரமணிய சர்மா என்பார், ஒருநாள் ஒருபுதினம் சொன்னார். 'தாம் தமது வாழ்நாளிலே கேட்டனுபவியாததும், இனிமையும் பொருளும் பொதிந்து, தலைசிறந்ததாய் விளங்கியது மான ஒரு சொற்பொழிவை, மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே கேட்டதாகவும், அச்சொற்பொழிவாளர் ஈழத்தின் மட்டக்களப்பைச் சேர்ந்த சுவாமி விபுலாநந்தரென்னும் பெயரினரென்றும்' சர்மா கூறினார்.

'காந்தத்தால் இழுபடும் இரும்பைப்போல' 'ஏ.பெ'பிள்ளையவர்கள் மதுரையிலிருந்த மங்கம்மாள் சத்திரத்தை அடைந்தார். அங்குதான், டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்களுக்குப் பொற்கிழி வழங்குவதற்கென ஒழுங்கு செய்யப்பட்ட விழாவிலே, ஈழத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளவும், மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றவுமென வந்திருந்த விபுலாநந்த அடிகளார் தங்கியிருந்தார்கள்.

பெரியதம்பிப்பிள்ளையினை அங்கே கண்ட சுவாமிகள் ஆச்சரியத்தினால், அவரை அப்படியே தழுவிக்கொண்டார்கள். இதனால் 'ஏ.பெ'யின் உள்ளத்தில் தெளிவேற்

பட்டது; அமைதியுண்டானது. கண்ணபிரானின் கீதா உபதேசம்பெற்று, மனத்தெளிவுபெற்ற அருச்சுனனைப் போல், சுவாமிகளின் சாந்தம்தவழும் அருள்நோக்குப் பெற்று மனத்தெளிவு பெற்றதாக, 'ஏ.பெ' உணர்ச்சியுடன் குறிப்பிடுவார்.

இலங்கையிலே, இராமகிருஷ்ண சங்கத்தின் சார்பில் தாங்கள் மேற்கொண்டிருக்கும் வேலைகளில், உதவியாக இருக்கும்படி, பெரியதம்பிப் பிள்ளையவர்களை சுவாமிகள் கேட்டுக்கொள்ளவே 'ஏ பெ' இலங்கை திரும்பினார். இராமகிருஷ்ண சங்கத்தின் அமைப்பும், அதன் சாதிபேதமற்ற சமத்துவக் கொள்கையும், பணிசெய்வதையே இலட்சியமாக வரித்துக்கொண்ட முறைமையும் பெரியதம்பிப்பிள்ளையவர்களுக்கு மன அமைதியைக் கொடுத்தது.

விபுலாநந்த அடிகளாரால், இராமகிருஷ்ண சங்கத்தின் சார்பில் பொறுப்பேற்கப்பட்ட, திருகோணமலை இந்துக் கல்லூரியின் தமிழாசான் பதவியை, பெரியதம்பிப்பிள்ளையவர்கள் 1926—ஆம் ஆண்டில் ஏற்றுக்கொண்டனர். இதன் பின்னர், மட்டக்களப்பு அர்ச். அகஸ்தீன் ஆசிரிய கலாசாலையில் தமிழ்ப் பேராசிரியனாய்க் கடமையாற்ற வேண்டிய சந்தர்ப்பம் இவருக்கேற்பட்டது. தமது நண்பரான 'சி. க.'வைப்போன்று இவரும், ஆசிரிய காலாசாலையொன்றில் கடமையாற்றவேண்டியது நியதிபோலும்! இக்கலாசாலையானது சில வருடங்களின் பின், கத்தோலிக்க சகோதரர்களின் நேரடி நிர்வாகத்தின் கீழ் வந்ததன் விளைவாக 'ஏ. பெ' பிள்ளையவர்கள், மட்டக்களப்பு அர்ச். சிசிலியா பெண்கள் பாடசாலைக்கு மாற்றப்படலாயினர். சில பல காரணங்களால் 'ஏ.பெ' பிள்ளை இப்பதவியினையும் விட்டு உதவித் தபாலதிகாரியாகக் கடமையாற்ற வேண்டியதாயிருந்தது. தமிழறிஞரொரு

வருக்குத் தபாலதிகாரிப்பதவி எவ்வாறு பொருந்தும்? சிறிது காலத்தின் பின், திரும்பவும் அர்ச். அகஸ்தீன் ஆசிரியர்கலாசாலையில் கௌரவ தமிழ்ப் பேராசானாய் அமர்ந்திடும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது. அக் கலாசாலையானது, அரசினரின் கட்டளைப்பிரகாரம், யாழ்ப்பாணம்-கொழும்புத்துறைக்கு மாற்றப்பட இருந்த காலம்வரை, அதாவது 1947-ஆம் ஆண்டுவரை அங்கிருந்து தமது கடமையைச் செவ்வனே செய்து, பின்னர் மட்டக்களப்பு அரசினர் கல்லூரியிலே தமிழ்ப் பேராசானாயமர்ந்து ஓய்வு பெறும்வரை சேவை செய்துள்ளார்.

'சி. க' அவர்களின் மனமாற்றம்

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்

எனத் தமிழ் மறையானது வலியுறுத்திக் கூறுவதற் கமைய, ஏற்றகாலத்திலே கணபதிப்பிள்ளையவர்கள், தமது மனநிலையை இறையுணர்ச்சியில் வழிப்படுத்தத் தொடங்கி விட்டார். மொழியைக் கற்று, கலைகளிற் தேர்ந்து அறிவைப் பெருக்கிய போதிலும், ஆத்மதாக மானது நீங்காத நிலையிலேயே இருந்து வருவதை, சைவாசிரியர்கலாசாலையில் தம்மோடு கடமையாற்றிய, உபஅதிபர் கைலாசபதியவர்களின் நெருங்கிய சேர்க்கை யினால் உணரப்பெற்ற 'சி. க' பிள்ளையவர்கள் 'சிந்திப் பரியதும் சிந்திப்பவர்க்குச் சிறந்த செந்தேன் முந்திப் பொழி வதும் முத்திகொடுப்பது' மாயுள்ள இறைவன் தாள்களைச் சரணடைந்தார்.

ஐம்புலன்களையும் அறிவு நெறியில் வழிப்படுத்திய வரும், சிறந்த சிந்தனையாளரும், நிறைந்த ஆராய்ச்சி யாளரும், சைவ சித்தாந்தங்களைத் துறைபோகத் தெளிந்தவரும், நாவலரையா அவர்களின் நோக்கங்களை நன்கு விளங்கியவருமான கைலாசபதி அவர்களில் 'சி. க' பிள்ளைக்கு நிறைந்த மதிப்பு. 'வறுத்தவித்து' எனவும், 'பழுத்துக் கனிந்த கனி' எனவும், 'அந்தர் முகநோக்குள்ளவர்' எனவும், 'ஞானப்பாலுண்ட சைவத்திருவாளர்' எனவும் போற்றப்பட்ட கைலாசபதி அவர்களைத் தமது 'ஞானகுரு' வாகவே 'சி. க' பிள்ளை கொண்டுள்ளார். வயசில் இளையவராகி, உடனாசிரியராய்க் கடமை பார்த்தும், கைலாசபதி அவர்களை ஒருபோதுமே இவர் பெயர் சொல்லி அழைக்க மாட்டார். 'வைஸ் ஐயா' என்றோ அல்லது 'வைஸ் பிறின்சிபல்' என்றோ தான் குறிப்பிடுவார். 'பணியுமாம் என்றும் பெருமை' என வள்ளுவர் வரையறுத்த இலக்கணமாக 'சி. க' பிள்ளை அவர்கள் விளங்குவதை இது குறித்துக் காட்டிநிற்கக் காண்கிறோம்.

கைலாசபதியவர்களிடம் ஏறக்குறைய ஐந்து வருடங்களாக, வேதாகம சாஸ்திரங்களையும் தத்துவக் கருத்துக்களையும், அவதானிப்புடன்கற்ற கணபதிப் பிள்ளையவர்களின் மனதில் பெரியதோர் மாற்றம் நிகழ்வதாயிற்று. இலக்கியச் சூழ்நிலையில் மட்டுமே வாழ்ந்த இவர், சமயஉலகிற்குள் காலடிவைத்து வைதீக சைவசித்தாந்தியாகவும் மாறலானார். தாம் 'வைஸ் பிறின்சிபல் ஐயா' விடம்பெற்றுக் கொண்டதையிட்டுக் கூறும்போது,

'நான் இதுகால பரியந்தம் ஏதாவது நல்ல கருத்துக் களைக் கூறியிருக்கிறேனேயாயின், அவை உப அதி பருடையனவே. கருவி நூல்களாகிய உடலை நாவலர்

வித்தியாசாலையிலும், தத்துவஞானமாகிய உயிரை உபஅதிபரிடமுமிருந்து பெற்றேன்,' என்று நன்றியறிதலுடன் கணபதிப்பிள்ளையவர்கள் கூறுகிறார்.

'சி.க'பிள்ளைக்கும் தமக்கும் ஏற்பட்ட தொடர்பையிட்டு கைலாசபதியவர்கள் பின்வருமாறு கூறுகிறார்:

> 'ஏதோ பொருளைப்பற்றி சிலபல நூல்களையும் தழுவி அறிகிறதற்கு நான் முயன்றிருக்கலாம்? யோசனைகள், ஆராய்ச்சிகள் நடத்தியிருக்கலாம். அந்தயோசனைகளையும் ஆராய்ச்சிகளையும் எடுத்துச் சொல்ல சிலர் பலர் சந்தித்திருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த யோசனைகளை ஆராய்ச்சிகளைச் சொல்லுகிற முறையாலே அந்த யோசனைகள் ஆராய்ச்சிகள் விருத்திப்பட சீர்ப்படக் கூடிய முறையும் அமைந்தது. அந்த யோசனைகளை ஆராய்ச்சிகளை எடுத்துச் சொல்லச் சந்தித்த முக்கியஸ்தர் ஒருவர் பண்டிதரவர்கள்—பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள். பண்டிதரவர்களும் நானும் கூடி ஒரு மிக்கச் சீவித்திருக்கிறோம். சிலபல நூல்களை ஆராய்ந்திருக்கிறோம்; ஆட்களைப்பற்றியும் ஊர்ச் சங்கதிகளைப்பற்றியும் பேசியிருக்கிறோம், ஒவ்வொரு காலத்திலே.'

வெறும் இலக்கண இலக்கிய அறிவு மாத்திரம் நற்பேற்றினை நல்காது; இலக்கண இலக்கியங்கள் கற்று, அதன் மூலம் பெற்றுக்கொண்ட அறிவானது, சமயமாகிய பேரறிவுடன் சேர்ந்த பின்பே, உயிர்பெற்று உதவ வல்லது என்பதை உணர்ந்து சிவநெறியில் சார்ந்து, சிவனது திருவடி நீழலில் சாந்திபெற்று, அமைதியான வாழ்க்கை நடாத்துவதற்குத், தம்மை வழிநடத்திய கைலாசபதியவர்கள் காலமானபோது 'சி.க' பிள்ளை பாடிய,

'ஆண்டறுபத் தொன்று நிகழ்கார்த் திகையபரம்
பூண்ட சதுர்த்தி புனர்பூசம்—மாண்டவத்துக்
கைலாச மாமுனிவன் காயபந் தந்தவிர்ந்து
கைலாச மேற்செல் கதி'

என்னும் செய்யுளிலே அன்னாரின் குருபக்தி வெளிப்பட்டு நிற்கக் காண்கிறோம்.

'சி.க' பிள்ளையவர்கள் தமது வாழ்க்கையிலேற்பட்ட மாற்றத்தை அனுசரித்து நடப்பதற்கு, அன்னார் புனிதமாகக் கடைப்பிடித்தொழுகிவரும் பிரமச்சரிய விரதமும் பல்லாற்றானும் உதவுவதாயிற்று.

கணபதிப்பிள்ளையவர்களிலேற்பட்ட இம்மாற்றமானது, அவர் படைத்த இலக்கியங்களில் எவ்வாறு பிரதிபலிக்கிறதென்பதைப் பின்னர் கண்டு கொள்வாம்.

குணநலப் பண்பு

எளிமை, தாழ்மை, தூய்மை, வாய்மை-இவற்றின் திருவுருவங்களாகத் திகழும் இப்பெரியாரிருவரும், அன்பின் இலக்கணங்களாகவும் விளங்குகின்றனர். நன்னெறி ஒழுக்கமும், சமரசப் பண்பும் கொண்ட இவர்கள் கோபித்ததைத் தாங்கள் காணவேயில்லையென இவர்களோடு நெருங்கிப் பழகியவர்கள் கூறுவது, முற்றிலும் உண்மையான கூற்றேயாம். 'செக்கும் சரி, சிவலிங்கமும் சரி' என்னும் மந்த புத்தியுள்ளோரும், அழுக்காறு கொண்டலையும் சவலைத்தன்மையோரும், ஒருவேளை குறைகாண முற்படுவாரே தவிர, மற்றவர்களனைவரும் இவர்களின் தொடர்பினை விழைந்திடவே முற்படுவர்.

குறைகாண முயல்வோரையும் மன்னித்து, அவர்களின் தவறினை மறந்துவிடும் குழந்தையுள்ளம் கொண்ட இவர்கள் பழகுவதற்கு எளியர்கள்; இனியர்கள்.

தாங்கள் அறிந்தனவற்றை மற்றவர்களும் அறிந்திட வேண்டுமென்னும் பரந்த மனப்பான்மையுடைய இவ்விருவரும் உதவிசெய்வதில் முன்னணியில் நிற்கிறார்கள். இவர்களது உதவிபெற்று, உயர்பதவிகள் வகிப்போர் பலர் இருக்கிறார்கள்.

பைந்தமிழ்த் தொண்டு

தமிழ்ப் புலமை பெறுவதற்காகக் கற்று, புலமை கைவரப்பெற்ற கணபதிப்பிள்ளையவர்களும், பெரியதம்பிப்பிள்ளையவர்களும், தமிழ்ப் பேராசான்களாய் அமர்ந்ததன் பின் தங்களால் முடிந்த வரையும் தமிழ்த் தொண்டாற்றினார்கள்; ஆற்றியும் வருகிறார்கள். முதற்கண், இவர்கள் ஆசிரியர்களாயிருந்து செய்தபணியும், அதனைத் தொடர்ந்து பேச்சு, எழுத்து, கவிதை மூலம் செய்த, செய்கின்ற பணிகளும் தமிழன்னையைக் களிப்பூட்டக் காண்கிறோம்.

கல்விப் பணி

அழுக்காற்றில் வெந்து, தன்னலம்மிகுந்து குறுகிய மாண்பினராக வாழும் சிறுமதியாளர்களை உருவாக்கி வரும் இந்த நவயுகத்திலே, 'ஆசிரியர்-மாணவர் பரம்பரை'யென்று உரிமையுடன் கூறும் எமது தமிழ் மரபு மங்கி மறைந்து போகும் இக்காலத்திலே, மாணவர் பரம்பரையினை உரிமையுடன் கொண்டிருக்கும் பெரியார்கள் சிலருள், குமாரசுவாமிப் புலவரவர்களின் மாணவர்களாகிய 'சி.க' பிள்ளையும், 'ஏ.பெ' பிள்ளையும் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" எனும் முதுமொழிக் கொப்ப, தமிழ் எழுத்துக்களை மிகமிக அழகாகப் போதித்து, மாணவர்களை மாண்பினர்களாக்கிவிட்ட

இப்பெரியார்களிருவரையும், 'எம் தெய்வம்' என மாண வர்கள் பக்திவிநயத்தோடு போற்றிக் கொள்கிருர்கள்.

'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே'

என்று ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் எனும் பாண்டிய அரசன் கூறியவாறும், 'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்றவாறும் விதந்தேற்றப்படும் கல் விச் செல்வத்தை, சிறந்த ஆசிரியர்களிடம் வழிமுறை யாகப்பெற்றுக்கொண்ட இவர்களிருவரும் 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனும் பொதுநோக்கு டன் கல்விப் பணியில் ஈடுபட்டார்கள்.

நிறைவான புலமையும், சிறப்பான நாவன்மையும், ஒப்பற்ற சிந்தனு சக்தியும் ஒருங்கே அமையப்பெற்ற இப்பெரியார்களிருவரும் தானங்களில் சிறந்ததாகக் கருதப்படும் 'வித்தியா தானத்தை' நிறைவாக வழங்கி யுள்ளனர். இவர்களது தொடர்பினைப் பெற்ற மாண வர்கள் அதனை ஒரு வரப்பிரசாதமாகவே போற்றுகின்ற னர்.

எந்த நூலையும் தங்குதடையின்றி இலகுவில் அறிந்துகொண்டு, தாம் கண்டவற்றைப் பாகாகத் திரட்டியெடுத்துத் தங்கள் மாணுக்கர்களுக்கு வழங்கி, மாணுக்கர்கள் அவற்றினை உள்ளவாறு உணர்ந்து அனு பவித்து மகிழ்வடைவதைக் காணும்போது,

'தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்'

என்னும் நிலையினை அடைவார்களாமென, நன்றியறி தலோடு மாணவர்கள் கூறுகிருர்கள்.

இலக்கிய இரசனையற்ற மாணுக்கனெருவனைக் கூட இலக்கிய இரசிகனுக்கி விடக்கூடிய சீர்மைமிகு திறமையினையுடைய இவர்களிருவரையும் ஆசிரியர்களாகப் பெறும் பேறுபெற்றவர்கள் மெய்யாகவே பாக்கியசாலிகள். இவர்களிருவரதும் இலக்கிய பாடங்கள் இன்பச் சூழலிலும், உற்சாகத்தோடு கூடிய உளப்பாங்கிலும் களைகட்டித் துலங்குமெனக் கூறுவதில் அவர்களது மாணவர்கள் பெருமைப்படுகிருர்கள்

இலக்கணமென்ருல், பயந்து ஓடி ஒழித்திடும் மாணவர்களுள்ள காலத்திலே, இலக்கணத்தையும் இலக்கியமாகவே சுவையுடனும் கற்பனை நயமுடனும் புகட்டி மாணவர்களுக்கு இலக்கணத்தில் ஈடுபாட்டை உண்டாக்கியுள்ளார்கள். விஞவும் விடையுமாகத் தொடங்கி, இடையிலே கதைகளையும் கூறிக்கொண்டு, மாணவர்கள் தாங்கள் இலக்கணம் படிக்கிருேம் என்ற உணர்வின்றி விருப்புடன் செவி மடுக்கச் செய்வதில் இவர்களிருவரும் தனித்திறமை பெற்றவர்கள். இலக்கண சூத்திரங்களை அவசியமின்றி உபயோகியாது, மாணவர்களது அன்ருட வாழ்க்கைச் சூழலிலிருந்து பெறப்படும் உதாரணங்களின் மூலமாக இலக்கணம் படிப்பிக்கப்படுவதனுல், படித்தவை எத்தனை வருடம் சென்ருலும் மறக்கமுடியாதனவாகிவிடும்.

இவர்களுடைய வகுப்புகளிலே, பண்டிதர்களோ வித்துவான்களோ இருந்தாலும், சாதாரண அறிவுடைய மாணவர்கள் இருந்தாலும், எல்லோரும் ஒரு சேரப் பயன்படும் வகையிலே, புதிய புதிய உத்திகளைக் கையாண்டு படிப்பிக்கும் ஆற்றல் பெற்ற இவர்களிருவரதும் சான்ருக படிப்பிலே பாண்டித்தியமடைந்து,

பட்டங்கள்பெற்று விளங்கும் மாணவர்கள் பலரைக் காட்டலாம்.

'சி. க' பிள்ளையும், 'ஏ. பெ' பிள்ளையும் தாங்கள் ஆசான்களாய் அமர்ந்த கல்லூரிகளில் மாத்திரமன்றி, தனிப்பட்ட வகுப்புகள் வைத்தும், படிப்பித்து வந்தார்கள். தமிழ் படிக்க விரும்புபவர்களை ஊக்குவித்துத் தம் இல்லங்களையும் கலைக்கோயில்களாக்கி உதவி புரிந்து வருகிறார்கள். இவ்வாறான உதவிபெற்று பண்டிதர்களாயும், வித்துவான்களாயும் விளங்குபவர்கள் பலருளர். உதாரணத்திற்கு, 'சி. க' பிள்ளையிடம் பாடங் கேட்டு, அறிஞராய் விளங்கும் கா. பொ. இரத்தினம் அவர்களையும், 'ஏ. பெ' பிள்ளையிடம் பாடங்கேட்டு அறிஞராய் விளங்கும் எப். எக்ஸ். சி. நடராசா அவர்களையும் குறித்துக் காட்டலாம்.

பேச்சுத்துறை

இலக்கிய இலக்கணப் புலமையினையும், 'நுண்மாண் நுழை புலத்தினையும்' குருசீடபரம்பரையின் மூலம் பெற்றுக் கொண்ட இவர்களிருவரும், நயம்பட உரைக்கும் நாவன்மையினை இயல்பாகவே பெற்றிருக்கிறார்கள்.

தமிழ்விழாவா? சங்கங்களின் வருடாந்தக் கூட்டமா? இலக்கிய மாநாடா? எழுத்தாளர் அவையா? எதுவானாலும் இவர்களிருவரதும் சமுகத்தினாலும் சொற்பொழிவுகளாலும் அவை புகழ்பெற்றிட முந்திக் கொண்டன. இன்றைய நிலையுமிதுவே. இலங்கை

வானொலி நிலையத்தாரும் இவர்களைப் பயன்கொண்டு, மக்கள் பயனடைந்திடவேண்டிய ஒழுங்குகள் செய்துள்ளனர்.

இவர்கள் பங்குகொண்டு சொற்பொழிவாற்றாத விழாக்களேதும் நடைபெற்றிருந்தால் அவை சிறப்புறு விழாக்களாக அமையா. பண்டிதர் கணபதிப்பிள்ளை அவர்களும், பெரியதம்பிப்பிள்ளைப்பண்டிதரும் அவ்வளவு தூரம் தமிழ்பேசும் மக்கள் தம் நெஞ்சில் இடம் பெற்று விட்டனர்.

இவர்களிருவரதும் பேச்சுக்கள் சுவை மிகுந்து பொருள் பொதிந்து கேட்பாரைப் பிணிக்கத்தக்கதாய் கவர்ச்சியுடனிருப்பதே இவர்களுக்குப் பல்லாயிரக் கணக்கான இரசிகர்களை ஈட்டிக் கொடுத்திடக் காரணமாயிருந்ததெனலாம்.

சங்க இலக்கியப் புதையலை அகழ்ந்தெடுத்துத் தருவதில் திறமை பெற்றிருக்கும் இவர்கள், இளங்கோ அடிகளாரின் சிலம்பினையும், நாயன்மார்களின் பக்திப் பாடல்களையும், கம்பனின் காவியத்தையும், காளமேகப் புலவரின் சிலேடை நயம்மிக்க அங்கதச் செய்யுள்களையும், சிவசம்புப் புலவரின் பிரபந்தங்களையும், பாரதியின் கவிதைகளையும் விரித்துக் கூறுவதில் நிகரற்றவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களது இலக்கியச் சொற்பொழிவுகள் ஆழமான புலமையின் வெளிப்பாடாக இருப்பதை அவதானிக்கலாம்.

இவர்களிருவரும் சொற்பொழிவுகளாற்றும் பொழுது, சிறியோர் முதல் பெரியோர் வரை புரியக் கூடிய முறையிலே சில விகடக் கதைகளையும் கையாளு

கின்றனர். இக்கதைகள் சிறந்த முறையில் கையாளப் படுவதனுல், பிரசங்கப் பொருளை மக்கள் இலகுவாக விளங்கிக்கொள்ள வாய்ப்பேற்படுகிறது.

இவர்களது சொற்பொழிவுகளைக் கேட்டோர், இரு வரதும் பேச்சுநடையிலே காணப்படும் வித்தியாசத்தைக் கண்டு கொள்ளத் தவறமாட்டார்கள்.

'சி. க' பிள்ளையின் பேச்சானது நகைச்சுவையும், அங்கதக்கிண்டலும் விரவ வருவதோடு, யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழும் கம்பீரமான பண்டிதத் தமிழும் கலவிக் களிநடனம் செய்வதைக் கண்டுகொள்ளலாம். பழமை யான நடையிலும் அவர்பேசுவார், முற்றிலும் புதுமை யான நடையிலும் பேசுவார்.

'ஏ. பெ' பிள்ளை பழமையான பண்டித நடையை மட்டுமே கையாண்டு வருகிருர். பண்டித நடையென்று கூறியபோதிலும், அஃது எளிய, தூய சொற்களைக் கொண்ட நடையாக இருப்பதனுல் பொதுமக்கள், அன்னுரின் சொற்பொழிவுகளை விரும்பிக் கேட்கிருர்கள்.

பேச்சுநடைகளில் வேறுபாடிருப்பினும், இவர்களின் சொற்பொழிவுகள்யாவும் உயர்ந்த தரமுடையன வாகவே இருக்கின்றன. பேசவேண்டுமெனும் கடமைக் காகப் பேசும் வழக்கமற்ற இவர்கள், அவசியம் நோக்கி, தேவைகருதி தாங்கள் சொல்லவேண்டியது எதுவுமிருந் தால் மட்டுமே பேசுவார்கள். இக்காரணம் பற்றியே இவர்களது சொற்பொழிவுகள் மக்களைக் கவர்ந்து வருவதோடு, அருமை பெருமைகளாகவும் பேணப்பட்டு வருகின்றன. இவர்களின் சொற்பொழிவுகள் அவர்களது தனித்துவ முத்திரை பெற்றனவாய் விளங்கிவருகின்றன. இவற்றைத் தொகுத்து நூல் வடிவாக்கினுல் பல அறிவு நூல்களை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

எழுத்து

'நல்லதொரு காலத்தில் நன்னிலத்தில் விளைந்த நல்லெண்ண விளைவு, முதலிற் பேச்சிலும், பேசிப் பேசி முதிர்ந்து கனிந்தபிறகு எழுத்திலும் வருவதே முறை'

என்று கொழும்பிலே கூட்டப்பட்ட அகில இலங்கை எழுத்தாளர் மகாநாட்டினையொட்டி, 'சி.க' பிள்ளை அவர்கள் எழுத்தாளர் உலகிற்கு விடுத்த செய்தியில் குறிப்பிட்டமைக்கமைய, பேசிப் பேசி முதிர்ந்து கனிந்த பிறகு எழுதத்தொடங்கிய 'சி.க' பிள்ளையும் 'ஏ.பெ' பிள்ளையும் அழகிய தமிழிலே அருமையாக எழுதி வருகின்றனர்.

பொழுது போக்கிற்காகவோ, பத்திரிகைகளில் தங்கள் பெயர் அச்சாகிப் பார்க்க வேண்டுமென்பதற்காகவோ, புகழடைவதற்காகவோ எழுதி இடத்தினை நிரப்புவதை இவர்களிருவரும் அடியோடு வெறுத்து வருகின்றனர். பேசவேண்டுமென்பதற்காகப் பேசிப் பழகாதது போலவே எழுதும் நிர்ப்பந்தத்திற்காக எழுதும் வழக்கமும் இவர்களிடம் கிடையாது. சிறந்த சிந்தனையாளர்களான இவர்களிருவரும் தக்க கருத்துகள் தோன்றினல் மட்டுமே எழுதுவார்கள். இவ்வாறு எழுதும்போது சொற்செட்டும் பொருட்செறிவுமே பிரதான அம்சங்களாக இவர்களால் கவனிக்கப்படும். இதனல் இவர்களது எழுத்துக்களில் உயர்ந்த கருத்துகள் நிறைந்திருப்பதையும், சிந்திக்கும்தோறும் சிந்தனையை மென்மேலுமுயர்த்தக்கூடிய சிறந்தபொருள் பொதிந்திருப்பதையும் காணக்கூடியதாயிருக்கிறது.

இவர்களிருவரதும் கட்டுரைகளை வெளியிடுவதில் பத்திரிகைகளினதும், சஞ்சிகைகளினதும் ஆசிரியர்கள் பெருமைப்பட்டனர். இவர்களின் கட்டுரைகளைத் தாங்கி வரும் விசேடமலர்கள் பெருமைப்பட்டன. சமயக் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள், பெரியார்களின் வரலாறுகள்—முதலிய பலவகைப்பட்ட கட்டுரைகளை இவர்கள் எழுதியுள்ளார்கள். யாழ்ப்பாணத்துத் தமிழறிஞர்களையிட்டு 'சி.க'பிள்ளையும், மட்டக்களப்புத் தமிழறிஞர்களையிட்டு 'ஏ பெ'பிள்ளையும் எழுதிய கட்டுரைகள் பெரிதும் போற்றத்தக்கவையாம். கலைக்களஞ்சியத்தார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களையிட்ட கட்டுரையினை கணபதிப்பிள்ளையவர்களிடமிருந்தும், அருட்திருவிபுலாநந்த அடிகளாரையிட்ட கட்டுரையினை பெரியதம்பிப் பிள்ளையவர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்டமை வெகு பொருத்தமான செயலேயாம்.

பேச்சுநடையினைப் போன்றே, எழுத்தினது நடையிலும் இவ்விருவருக்குமிடையில் குறிப்பிடத்தக்க வித்தியாசத்தைக் கண்டு கொள்ளலாம்.

கணபதிப்பிள்ளையவர்கள் தமது கட்டுரைகளை ஒரே நடையில் எழுதுவதில்லை. புதுப்புதுப்பாணிகளில் எழுதிப் பார்ப்பதில் அவருக்கு ஒரு திருப்தி. அவரது எழுத்தானது புதிய ஒரு நடையாக அமைந்திருக்கிறது. புதிய நடை என்று கூறும்போது, அது பழமையான, அதாவது பண்டிதபரம்பரை நடைக்கு முற்றிலும் முரணான நடையல்ல. புதியனவற்றைப் பின்பற்றும் நேரத்தில், ஆன்றோர் வழக்கொடு முரணலாகாதென்னும் உயரிய கோட்பாட்டினை 'சி. க.' பிள்ளை வரித்துக் கொண்டவராகக் காணப்படுகிறார். அவரது பேச்சில் காணப்படுவதைப் போன்ற, பழமையும் புதுமையும் இணைத்த ஓர் உரைநடையையே அவர் கொண்டிருக்கிறார். அந்த நடை

யானது, பழமைக்கு முரண்படாமலும், புதுமைக்கு அணி செய்தும் காலத்துக்கு ஏற்றவண்ணமாக கணபதிப்பிள்ளை அவர்களால் உபயோகிக்கப்பட்டு வரக் காண்கிறோம்.

பின்வரும் உதாரணங்கள் 'சி.க' பிள்ளையவர்களது பலவகைப்பட்ட வசனநடைகளை நாம் அறிந்திட உதவக் கூடும்.

> 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது நூலாயின், அஃது இலக்கியங்கண்டபின் காணும் இலக்கணவரிசையைச் சேர்ந்த தன்றாம். ஆகவே அதன் வழிவந்த வழிநூலும் அந்நெறியினதேயாம். முனைவனும் முனிவர்களும் கண்ட நூல்கள் இலக்கியங்கள் உதிப்பதற்கு முந்தியனவாய் இலக்கியங்கண்டு இயம்பும் இலக்கணத்தின் வேறானவாய் அமைவனவாதல் வேண்டும்'

மேலே காட்டிய உதாரணமானது, கம்பீரமான பண்டித பரம்பரை நடையிலெழுதப்பட்டிருத்தலைக் காட்டுகின்றது.

பின்வரும் உரைப்பகுதியானது சிறிய வசனங்களைக் கொண்டு எழுதப்பட்ட புதுமையான இலக்கிய நடையாக இருக்கிறது.

> 'நாரதர் பூமிக்கு வருகிறார். ஒருதினைக்கொல்லையை அணுகுகிறார். அங்கே ஒரு பரண். அதிலே பச்சைப் பசியபெண். அப்பெண்ணின் வாயிலிருந்து ஆலோலம் வருகிறது. இந்த இசை நாரதரை இழுக்கின்றது. வீணையை மீட்டிக்கொண்டே நாரதர் காலைத்தூக்கி நடக்கிறார்; கொல்லையை எட்டிப்பார்க்கிறார். அந்த ஆலோலம் இசைத்த பெண்ணை ஒரு, வெறுங்குறப்

பெண் என்று நாரதர் தீர்த்துவிடவில்லை. அவர்காட்சி நவையறு காட்சி.'

கணபதிப்பிள்ளையவர்கள் கையாண்ட குறுநடைக்குப் பின்வரும் உதாரணத்தைத் தரலாம்.

'மாங்கல்ய தாரண தருணம். வாத்தியங்கள் கோஷிக்கின்றன. மாப்பிள்ளையும் எழுந்து விட்டார். மாங்கல்யமும் நல்ல மாங்கல்யம். ஒரே ஒருகுறை. மணப் பெண் வரவில்லை. விலக்கு. எப்படியிருக்கிறது திருமணவைபவம்.'

பின்னுல் காட்டப்படும் உதாரணங்கள், அருமையான யாழ்ப்பாணச் சொற் பிரயோகங்களோடு கூடிய பேச்சுத் தமிழ் நடையிலே 'சி. க' பிள்ளையினுல் எழுதப் பட்டிருக்கின்றன.

'காதலைப் பற்றிப் பலபல கோணங்களிலிருந்து பார்க்கச் சுவைக்க நாவலருக்குத் தெரியாது. அந்தப் பண்டத்தில் தமக்கு மனமில்லையென்று நாவலர் சொல்லவில்லை. ஹிட்லருக்கு, சுபாஸ்சந்திரபோஸுக்கு எப்படிக் காதல் நாடகங்களில் களிக்க நேரமில்லையோ, அப்படி நாவலருக்கும் அதில் மினைக்கெட நேரமில்லை......சொல்லும் பொருளும் அவற்றிற்கான ஓசையும் ஒருங்கு ஒத்துமுடிய வெட்டு ஒன்று துண்டு இரண்டாய் வசனஞ் செய்து சொல்லும் நாவலருக்கு ஆகா! சந்திரவதனம்! என்று காதல் வசனம் பண்ண நேரமேது?'

'ஆறுமுக நாவலர் சைவ விஞவிடை எழுதத்தான் வந்தவர்; கந்த புராணம் பெரிய புராணம் பரப்பத்தான் வந்தவர்; வள்ளுவர் கோவையார் வெளி

வர்த்தான் வந்தவர். இப்படிப்பட்ட நாவலருக்கு முதலாம் பால பாடம் எழுத நேர்ந்தது. பூசனிக்காய், பூசணிக்காய், பூசுணைக்காய்களி லிருந்து பிரித்து ஒரு பூசினிக்காய் அதில்வைக்க நேர்ந்தது....இலங்கைப் பூமிசாஸ்திரம் கூட எழுத வேண்டி வந்தது. கனக்க ஏன் சொல்லவேண்டும். சைவ-ஆங்கில பாடசாலை முதன் முதல் ஆரம்பித்த வரும் ஆறுமுக நாவலரே. தமிழ் வளர்க்க ஆறு முக நாவலர் வந்தவராளுல் ஆங்கில பாடசாலை எதற்கு? நாவலர் தமிழ் வளர்க்கவரவில்லை. சமயம் வளர்க்க வந்தவர். சமய தூஷணம் பரிகரிக்க வந்த வர். உயிரை வளர்க்க உடல் தானே வளர்ந்தது: உயிர் சமயம், உடல் பாஷை.'

ஸ்ரீமத் கைலாச பிள்ளையவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டமையால், கிண்டல் நடையாக எழுது வதிலும் 'சி.க.' பிள்ளையவர்கள் திறமை பெற்றிருந்தார். இதற்குப் பின்வரும் இரண்டு உதாரணங்களைத்தரலாம்.

'நாவலர் காலம் வெள்ளை அரசாங்கத்தின் ஆரம்ப காலம். ஒரு நாட்டைச் சூறையாடுவதில் பறங்கி யர் ஒல்லாந்தரின் முறை வேறு, வெள்ளையரின் முறைவேறு. வெள்ளையரின் முறை அடுத்துக் கெடுக் கிற முறை; வேரிலே வெந்நீர் ஊற்றுகிற முறை. வேருெருு வகையாகச் சொன்ளுல் தோளிலிருந்து செவியைக் கடிக்கிற முறையென்றும் கூறலாம்...... ஒருநாள் இந்த வெள்ளை அரசாங்கத்தின் வெற்றி கரமான முறை எங்கோ ஓரிடத்தில் படுதோல்வி அடைந்தது உண்டு. அந்த இடம் யாழ்ப்பாணமே'

'சிவாத்துவிதம் என்ருெரு சமயம்; அது இன்றைக்கு இருபத்து நாலாஞ் சமயம். இப்பொழுதைய

சித்தாந்திகள் ஏற்றுக்கொண்டார்கள். அது அகச்சமய உச்சமாய்விட்டது. இதற்கு நிமித்த காரணம் பரிஞ்ம வாதம் என்று பெயர். இந்தப் பொய்யான மெய்யை மெய்யென்று சொல்லுவது அந்தச் சமயம். மாயாவாதி ஆன்மாவைப் பிரமம் என்பான்; சிவாத்துவாதி உடம்பையும் பிரமம் என்கிருன்; அவன் தூளி; இவன் நிறுதூளி. இவன் அவனுக்கு அண்ணன்; உலோகாயுதனில் மோசமானவன். சிவாத்துவிதி சித்தாந்தம், அவசித்தாந்தம் என்று சங்கற்ப நிராகரணத்தில் நல்ல அடிகொடுத்திருக்கிருர், உமாபதி சிவம்.

நாவலரையா, குமாரசுவாமிப் புலவர் முதலிய பெருமக்கள் கையாண்டு வழிமுறையாக வந்த கண்டனமெழுதும் நடையிலும், 'சி.க' பிள்ளையவர்கள் ஆற்றல் பெற்றிருந்தார். உண்மையை மறைக்க விரும்புவோருக்கும், சிறந்ததை சிறந்ததெனஒப்ப ஒருப்படாதோருக்கும் 'சி. க' பிள்ளையவர்கள் கண்டனகாரராயிருக்க வேண்டியதாயிற்று. ஈழத்தமிழகத்தின் பெருமையினை, வேண்டுமென்றே சிறுமைப் படுத்திட முயன்றவர்கள், 'சி. க' பிள்ளையவர்களிடம் தப்பித்துக்கொள்ள முடியாத நிலையினராய் இருந்திருக்கிருர்கள். தமிழ்த்தாத்தாவென போற்றிப் புகழப்படும் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்தாமும், இவரிடம் தப்பித்துக்கொள்ள முடியாத நிலையிலிருந்தார். ஐயரவர்கள் தாம் எழுதிய மீனுட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரத்தின் முதலாம் பாகத்திலே, நாவலரவர்கள் தாம்பதிப்பித்த நூல்களுக்கு பிள்ளையவர்களிடம் சிறப்புப்பாயிரம் வாங்கிக்கொள்ள, பெருமுயற்சி செய்தாரெனக் குறிப்பிட்டு விட்டார். மகாமகோபாத்தியாயரின் மகாசரித்திரத் திரிப்பைக் கண்ட

'சி. க.' பிள்ளையவர்களின் உள்ளம் கொதித்தது. சாமிநாதையரவர்களின் பிழையான செயலினைக் கண்டிக்கலானார். அக்காலத்தில் திருச்செந்தூரில் இருந்தவரும் பெரும் அறிஞரும், நாவலரவர்களின் சிஷ்ய பரம்பரையினருமான சுவாமிநாத பண்டிதரென்பார் இறந்துபோனார். அன்னாருக்கு இரங்கற்பா பாடும் முகத்தால் டாக்டர் ஐயரவர்கள் கண்டிக்கப்பட்டார். 335 வரிகளைக்கொண்ட அந்த இரங்கற் பாவிலே, 'சுவாமிநாதப்பண்டிதமணியே! நீ போய் விட்டபடியால் சாமிநாதப் பெயர் தலையெடுத்துவிட்டது. அவர் துணிவாக உன் பெருங் குரவனாகிய நாவலர் பெருமானைக் கேலி செய்கிறார். நீயிருந்திருந்தால் இப்படி நடக்குமா?' என்று வெகு சாமர்த்தியமான முறையில் ஐயரவர்கள் பதம் பார்க்கப்பட்டார்.

இதைவிட, சேற்றூர் அருணாசலக்கவிராயர் இயற்றிய ஆறுமுகநாவலரவர்கள் சரித்திரத்தைப் பதிப்பிக்குங்கால், 'சி. க' பிள்ளையவர்கள் எழுதிய சிறப்பானதொரு முன்னுரையிலே,

> '.............ஆனாலும் ஐயரவர்கள் 1-ம் பாகம் முகவுரை XVI-ம் பக்கத்தில் சிலர் தமக்குப் பொய்யான சில சரித்திரங்களையுஞ் சொல்லித் தம்மை அணுப்பிவிட்டார்களென்றும் எழுதியிருக்கின்றார்கள். இப்படி அணுப்புப்பட்ட கதைகளில், பரிமேலழகர் உரைக்கும், திருக்கோவைக்கும், தருக்கசங்கிரகத்துக்கும் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் சிறப்புப் பாயிரம்வாங்கி, நாவலர் அவர்களுக்கு இராமசாமிப்பிள்ளை கொடுக்கச்செய்த உபாயக்கதையும் ஒன்று போலும். நாவலரவர்கள் தாம் முன் அச்சிட்ட நன்னூல் விருத்தியுரை, சைவதூஷணபரிகாரம் முதலிய நூல்களுக்கும், பின் அச்சிட்ட இலக்கணக் கொத்து, பிரயோக விவேகம்,

பாரதம், கந்தபுராணம், சேனுவரையம் முதலிய வற்றிற்கும் எவரிடமாவது சிறப்புப்பாயிரம் பெற விரும்பவில்லை. அங்ஙனமாகவும் ஐயரவர்கள் முதற் பாகம் உ௨௭-ம் பக்கத்தில், 'ஆறுமுகநாவலர் நூற் பதிப்புகளுக்குச் சிறப்புப்பாயிரமளித்தது' என்ருரு விஷயம் எழுதியிருக்கிருர்கள்..............................
இது மெய்தானு? இராமசாமிப்பிள்ளையுடைய சூழ்ச்சியா - ஐயரவர்களுக்குச் சொன்னவர்களது அனுப்பு வார்த்தையா - என்பது ஆராயத் தக்கது. எல்லரு மாயுமிருக்கலாம்;'

எனவும் எழுதியுள்ளார். இடைப்பிறவரலாக ஒரு வார்த்தை. பிழைநடக்கக் காணும்போது கண்டனகாரராகிவிடும் 'சி.க' பிள்ளை, ஒருவரது திறமையைப் போற்றிப் புகழ்வதில் முந்திக் கொள்பவராயும் இருக்கிருர். 'சி. க' பிள்ளையின் கண்டனத்துக்காளான டாக்டர் ஐயரவர்களது, உருவப்படத்திறப்பு விழாவொன்றினை, யாழ்ப்பாணம் கலா நிலையத்தார் கொண்டாடியபோது, 'சி.க' பிள்ளையும் அவ்விழாவில் கலந்து கொண்டதோடு, ஐயரவர்களின் உரைநடைச் சிறப்பினையும், அன்னரது சீரியதமிழ்ப்பணியினையும் போற்றிப் புகழவும் செய்தார். ஒருவரது சிறிய குறைக்காக, அவர்செய்த பெரும்பணியினை மதியாதுவிடல் மடமையாமெனும் சிறந்த கொள்கையினை 'சி.க' பிள்ளையவர்கள் கொண்டிருந்தார்.

சங்கநூல்களைப் பதிப்பிக்கும் பணியிலே முதலில் ஈடுபட்ட பரோபகாரி, சி. வை. தாமோதரம்பிள்ளையாவர். இவர்கள் முதலில் தொல்காப்பியத்தைப் பதிப்பித்து, அதன்பின்னர் கலித்தொகை முதலிய நூல்களைப் பதிப்பிப்பதில் ஈடுபட்டார்கள். பழந்தமிழ்நூல்களைப் பதிப்பித்த முதற் பதிப்பாசிரியரெனும் இவர்களது பெருமையினை, பிற்காலத்திலே தென்னகத்தின் தமிழறி

ஞர்களிற் சிலர், டாக்டர் சாமிநாதையரவர்களுக்குக் கொடுக்க முயன்றுர்கள். ஐயரவர்களது தூண்டுதலின் பேரிலேயே தாமோதரனுரும் சங்கநூல்களைப் பதிப்பிக்க முயன்றுர்களென்று, கூறவும், எழுதவும் தலைப்பட்டார்கள். தவறுதலான இக்கூற்றினை - வேண்டுமென்றே செய்யப்படும் இச்சூழ்ச்சியினை - ஈழத்தறிஞர்களின் புகழைக் குறைக்கமுயன்ற இப்போக்கினை - ஈழநாட்டின் பெருமையைச் சிறுமைப்படுத்தும் இப்பழியினை ஈழத்தில் வாழ்ந்துகொண்டிருந்த பண்டிதர்களும், பாவலர்களும், அறிஞர்களும் அறிந்தும் அறியாதது போலிருந்தனர். உண்மைக்காக வாதாடும் ஒரே ஒரு 'குற்றத்திற்காக' கண்டனகாரரெனப் பட்டஞ் சூட்டப்பட்ட 'சி.க' பிள்ளையவர்களே இங்கும் கண்டனகாரராக வேண்டியிருந்தது. 'சி. க' பிள்ளையவர்கள் கணேசையர் நினைவுமலரிலே பின்வருமாறு எழுதியுள்ளார்:

'டாக்டர் சாமிநாதையர் அவர்கள், பிள்ளையவர்களின் தூண்டுதலின் பயனுக 1887-இல் சீவக சிந்தாமணியைப் பதித்து வெளியிட்டார்கள். பிள்ளை அவர்களைப் பின்பற்றி எழுந்த பதிப்பாசிரியர் சாமிநாதையரவர்கள். சாமிநாதையர் பிறந்தது 1855-ஆம் ஆண்டு. ஐயரவர்கள் பிறக்க முன்னமே 1853-ஆம் ஆண்டில் சென்னையிலே பார்சிவல் பாதிரியாரால் நடாத்தப்பட்ட தினவர்த்தமானிப் பத்திரிகைக்குப் பத்திராசிரியராய்ப் பிரசித்தி பெற்றவர் தாமோதரம்பிள்ளை. 1857-ஆம் ஆண்டு சென்னை சர்வகலாசாலை முதன் முதல் நடத்திய B. A. பரீட்சையிற் சித்தியெய்தியவர் தாமோதரம் பிள்ளை. இப்படிப்பட்ட பிள்ளையை ஐயரவர்களுக்குப் பிந்தியவர், ஐயரைத் தொடர்ந்து தாமும் பழைய நூல்களைப் பதிப்பிக்க ஆசைகொண்டவர் என்ற கருத்துப்பட ஆர். பி. சேதுப்பிள்ளை எழுத்தி

லும், பேச்சிலும் வெளியிட்டு வருவது அடாது. அது தாமோதரம்பிள்ளையின் கீர்த்தியைக் கிரகணஞ் செய்வதாயிருக்கிறது.'

கணபதிப்பிள்ளையவர்கள் எழுதும் கண்டனங்கள், ஆதாரம் நிறைந்தனவாயும், நடுவு நிலை பிறழாதவை யாயும், தர்க்கரீதியாகவும் நாவலரையா, குமார சுவாமிப் புலவர் ஆகியோரது கண்டனங்களைப் பெரிதும் ஒத்திருந்தமையால், கண்டிக்கப்பட்டோர் மறுப்புரைத் திட முடியாத நிலையிலிருந்தனர்.

இலக்கிய நலன் ஆய்வுக் கட்டுரைகளையும் 'சி.க'பிள்ளை எழுதியுள்ளார். பண்டைத் தமிழிலக்கியங்களில் குற்றங் காணக் கூடாதென்னும் கொள்கை நிலவிய அக்காலத் திலே 'குணம்நாடி குற்றமும்நாடி அவற்றுண்-மிகைநாடி மிக்க கொளல்' என்னும் வள்ளுவர்வாக்கிற்கு எதிரான ஒரு மனோபாவம் மண்டிக்கிடந்த அக்காலத்திலே, தாம் ஆராய்ந்து உணரப்பெற்ற முடிவுகளை ஒழிவு மறை வின்றிக் கூறுவதிலும் எழுதுவதிலும் கணபதிப்பிள்ளை யவர்கள் தைரியம் மிக்கவராயிருந்தார். பிழையைப் பிழை என ஒப்பமறுக்கும் போலிக்கூச்சம் இல்லாத வராகிய இவர், சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தா மணி என்னும் பெரும்காப்பியங்கள், பொருட் பிறழ்வுடையன என்று எடுத்துக்காட்டியபோது, தமிழறிஞர்களிடையே பரபரப்பும் அதிர்ச்சியும் ஏற் பட்டபோதிலும், அதனை வேறு ஆதாரங்கள் காட்டி மறுத்துரைக்கவோ கண்டிக்கவோ ஒருவரும் முன்வர வில்லை. இஃது அன்னாரின் ஆராய்ச்சியோடு கூடிய திறனாய்வுக்கு ஓர் உதாரணமாகும்.

பெரியதம்பிப்பிள்ளையவர்களின் வசனநடையானது, அவர்தம் பேச்சினைப்போன்று ஒரே தன்மையான

நடையாகவே இருந்து வருகிறது. மரபு பேண வேண்டுமென விழையும் இவர்,

'எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே'

என்பதற்கியைய பழைய பாரம்பரிய நடையிலேயே எழுதிவருகிறார். அதில் மாற்றமே இல்லை. அவர்தம் பேச்சிலே காணப்படுவதைப் போலவே, எளிய தூய சொற்களை 'ஏ.பெ'பிள்ளையவர்களது உரைநடையிலும் காணக்கிடக்கின்றன. அவரது எழுத்திலே ஓசைச்சிறப்புப் பொருந்தியிருக்கக் காண்கிறோம்.

பின்வரும் உதாரணமானது 'ஏ. பெ' பிள்ளையின் உரைநடையின் தன்மையைப் புலப்படுத்துகின்றது:

'இலக்கிய மென்னுஞ்சொல் இருவகைப் பொருளில் வழங்கும். ஒன்று இலக்கணமுடையது இலக்கியமென்னும் வழக்கு; மற்றது இலட்சியமுடையது இலக்கிய மென்னும் வழக்கு. இலட்சியங்கள் பல; பல்வேறு வகையின. மக்களின் அறிவாற்றல் குண நடை முதலியவற்றிற்கேற்ப, இலட்சியங்கள் பலதரமுடையனவாக அமைந்திருக்கும். இத்தகைய பல்வேறு இலட்சியங்களைத் தத்தம் இயல்புக்கிணங்கக் கடைப்பிடித் தொழுகும், அல்லது கடைப்பிடித்தொழுக முயலும் தனிமனிதர் பலர் தம்முள் ஒன்று கூடிய கூட்டமே சமூக அமைப்பிற்கு அத்திவாரமாகின்றது. சமூகத்திலுள்ள பலர் தத்தம் இயல்புக்கேற்ற ஒவ்வோர் இலட்சியத்தைக் கடைப்பிடித்தொழுகுதலாலேதான் உலகம் இனிது நடைபெறுகின்றது. சிறிதாயினும் சரி; பெரிதாயினும் சரி; சமூகத்தை உருவாக்கி, உலகம் நன்கு நடைபெற உதவுகின்ற

இலட்சியங்கள் சமூகத்தின் சிறந்த அணிகலன் களாயமைந்துள்ளன. இத்தகைய இலட்சியங்களிலே நாம் சமநோக்கம் படைத்தவர்களாய் வாழ்தல் வேண்டும். இலட்சியங்களுக்குள்ளே இது உயர்ந்தது; இது தாழ்ந்தது எனவேறுபாடு கற்பித்தல் ஆகாது. இவ்வாறு வேறுபாடு கற்பிப்போர் சமூகத்தின் அடிப் படை அமைப்பினையே நிலைகுலையச் செய்கின்ற வராவர்.

உரைநடையிலே 'சி. க.' பிள்ளையும் 'ஏ. பெ.' பிள்ளை யும் வல்லவர்களாயிருந்தபோதிலும், இதனை அதிகம் பயன்கொண்டு வளர்த்தவர் கணபதிப்பிள்ளை அவர்க ளென்றே கூறவேண்டும்.

மொழியாக்கமானது ஒரு மொழியைக் கற்று, அதில் புலமையடைவதோடு அமைந்துவிடாது, கற்றவற்றை மற்றோரும் அறிந்து பயன்பெறுவான் வேண்டி, அம் மொழியில் புதிய நூல்களை இயற்றுவதிலும் அதிகம் தங்கியிருக்கிறதென்பதை, அறிஞர்கள் ஏற்றுக்கொள் வார்கள். 'சி. க' பிள்ளையவர்கள் நூல்களாக எதையும் எழுதாது விட்டாலும், நூல்வடிவு பெறத்தக்க நூற் றுக்கணக்கான கட்டுரைகளை எழுதியுள்ளார். ஆயிரக் கணக்கான சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார். இவற் றுள் ஒரு சிலவற்றைத்தொகுத்து நூல்களாக வெளி யிட்டுள்ளனர். இலக்கிய வழி, கதிர்காம வேலவன் பவனிவரு கிறன், சைவ நற்சிந்தனைகள், பாரத நவமணிகள், கந்த புராண கலாசாரம், கந்தபுராண போதனை என்னும் ஆறு நூல்கள் இற்றைவரை வெளிவந்துள்ளன. இந்நூல்கள் யாவும் 'சி. க.' பிள்ளையின் நிலையான மொழியாக்கப்பணிகளாக இருக்கின்றன இன்னும் சில நூல்கள் விரைவில் வெளியிடப்படுமென்பதை அறியும்போது நாம் மகிழ்ச்சி யடையாதிருக்க முடியாது. திருவருட்பயன் என்னும்

சிறந்த நூலுக்கு கணபதிப்பிள்ளையவர்கள் எழுதிய அரியதோர் உரையானது, நூல்வடிவுபெறக் கூடுமாயின், சைவசமயத்தின் பல உண்மைகளை, சாதாரண மக்களும் எளிதில் அறிந்துகொள்ள வாய்ப்பேற்படும்.

மேற்கூறிய நூல்களுள் முதலாவதாகக் குறிப்பிட்ட, இலக்கிய வழி என்னும் நூலானது, தூய இனிய நடையிலே எழுதப்பட்டு, தமிழ்பேசும் மக்களனைவருக்கும், ஒப்பற்ற இலக்கிய விருந்தாகவும், உண்மையான இலக்கிய வழியாகவும் அமைந்திருக்கக் காண்கிறோம்.

இந்நூலினையிட்டு, சென்னையிலிருந்துவரும் பிரபல ஆங்கில ஏடான ஹிந்து எழுதும்போது,

> 'பண்டிதமணி அவர்கள் தனிப்பாடல்கள், காவியங்கள், பள்ளுப் பிரபந்தங்கள், நாடகங்களிலுள்ள தத்துவார்த்தமான உபகதைகள் ஆகியவற்றிலே தான் கண்ட நயத்தை உலகமக்களும் துய்த்தின்புறுமாறு, தூய-இனிய நடையிற் கட்டுரைகளாகத் தொகுத்து இலக்கிய வழியில் அளித்துள்ளார்...புலமையும் புதுமையும் சுவைநலமுந் துமுறும்படி ஆசிரியர்க்கே உரித்தான நடையில் எழுதப்பட்டுள்ளது...இந்நூல் படிப்போருக்கு ஒரு சிறந்த இலக்கிய விருந்தாக அமைந்துள்ளது,'

என்று எழுதிய மதிப்புரையானது இந்நூலின் பெருமையினையும், தன்மையினையும் புலப்படுத்தி நிற்கிறது.

இலக்கிய வழியிலேயுள்ள, சிவகாமியின் சரிதையிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் உதாரணம், அந்நூலிலே 'சி. க' பிள்ளையவர்கள் கையாண்டிருக்கும்

அழகிய தமிழ் நடைக்குச் சான்ருக இருக்கிறது:

'அவளுடைய முகத்தில் பூரண சந்திரன் பிரகாசிக்கின்றது. சூற்கொண்ட மேகச் சடைக்கட்டு அவிழ்ந்து-சரிந்து-தாழுகின்றது. கண்களாகிய கமலங்கள் ஒன்ருெடொன்று உறழ்ந்து பிறழுகின்றன. பவள வாயிலே கொவ்வை இதழ்கள் துடிக்கின்றன. இடையிலே மின்னல் துவழ்கிறது. கண்களில் முத்தம் துளிக்கிறது. கைகளாகிய தாமரைகள் கூம்புகின்றன'.

பண்டிதர் கணபதிப்பிள்ளையவர்களது சிறந்த படைப்பான இலக்கிய வழியானது, இன்னமும் பாடநூலாக்கப்படாதிருக்கிறது. வானொலியிலும், பத்திரிகைகளிலும் வந்தவைகளை வைத்துக்கொண்டே அது புத்தகமாக்கப்பட்டிருப்பதனுல் அதனைப் பாடநூலாக்குவதை 'சி. க.' பிள்ளையவர்களும் விரும்பவில்லை. பாடநூல் அதற்குரிய முறையில் அமையவேண்டுமென்பது அவர் கருத்து. அக்கருத்தினை மனதில்வைத்து, இப்பொழுது, இலக்கிய வழியானது 'சி. க.' பிள்ளையவர்களினுல் திருத்தஞ் செய்யப்பட்டு இருக்கிறது. ஈழத்தின் இலக்கிய பரம்பரையைத் தொட்டுக் காட்டிச் சொக்கவைக்கும் நீண்ட முகவுரையும், இரசனைக் குறிப்பும் புதிய சில பாடங்களும் சேர்க்கப்பட்டிருக்கும் இந்நூலானது விரைவில் அச்சாகி வெளிவந்து பாடநூலாக்கப்படும் நன்னுளை எதிர்பார்க்கலாமல்லவா?

யாழ்ப்பாணத்தின் கலாசாரமானது கந்த புராணத்தை மூலமாகக்கொண்ட கலாசாரமேயென்பதை ஆதாரபூர்வமாக விளக்கும் கந்தபுராணகலாசார

மென்னும் நூலிலேயுள்ள, கந்த புராணப் பெருமையெனும் பகுதியிலே,

> '...........இப்படிப்பட்ட சிறப்புகள் வாய்ந்த கந்த புராணம் இந்தயாழ்ப்பாணத்திலே, பழைய காலத்திலே ஒவ்வொரு சைவாலயத்திலும் மடாலயங்களிலும் வருடந்தோறும் விதிப்படி பொருள் சொல்லப்பட்டு வந்தது. வருடத்தில் மூன்று மாச காலம் கந்தபுராண காலமாயிருக்கும். படித்துப் பொருள் சொல்லும் முறை யாழ்ப்பாணத்திற்கே உரிய ஒரு தனிப்பட்ட முறை...............இதனாலே செந்தமிழ் வழங்கும் சைவ சித்தாந்த உணர்ச்சியும் வளர்ந்து வரலாயது'

என எழுதப்பட்டிருக்கும் கருத்தும், **கண்ணூறு** என்னும் பகுதியிலே,

> 'இருபத்தாறு வயசு நிரம்பிய கெம்பீரமான ஒரு வாலிபர் கந்தபுராண உணர்ச்சி வீறுகொள்ள இந்த யாழ்ப்பாணத்திலிருந்து தாய்நாட்டை நோக்கி நடக்கின்றார்; அங்கே சைவத்துக்கும் தமிழுக்கும் உறைவிடமான திருக்கைலாசபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் அந்த வாலிபரை வரவேற்கின்றது. சித்தியாருக்கு உரைகண்டவருள் ஒருவரான ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவ் வாலிபரை ஒரு உபந்நியாசம் செய்யும்படி குறிப்பிடுகின்றார். வாலிபர் புட்கலாவர்த்த மேகமாய் மாறிப் பிரசங்கமழை பொழிகின்றார். அவருடைய பேச்சு அதியற்புத அதிமதுரச் சுத்தச் செந்தமிழாயிருந்தது. பேச்சின் கருத்துச் சுத்தாத்துவித சைவ சித்தாந்தத்தின் சிகரமாய் மிளிர்ந்தது. ஆதீனம் ஆராமைமிக்கு அந்த இளம்வாலிபரை '**நாவலர்**'

என்று வாழ்த்தியது. நாவலருக்குச் சைவ சித்தாந்த உணர்ச்சி எங்கிருந்து வந்தது? கந்தபுராணத்தி லிருந்தே வந்தது. அதை அவர் அறியாமலே இருக்கலாம். கந்தபுராணம் நாவலர் இரத்தத்தில் ஊறியிருந்தது,'

என்று எழுதியிருப்பதும், யாழ்ப்பாணக் கலாசாரம், கந்தபுராண கலாசாரமே என்பதனை வெகு அழகாகக் காட்டிநிற்கின்றன.

கந்தபுராணபோதனை என்னும் நூலிலே 'சி.க' பிள்ளை அவர்கள் அறத்தின் இயல்பையும், அறத்தால் மனமாசு நீங்கிய வழி அறிவு தூய்மை எய்தி மெய்ப்பொருளைக் காணும் என்பதையும், கண்டவழி ஓர் உயிர் அடையும் இன்பத்தின் தன்மையையும், பிரமா விஷ்ணு சூரபன்மன், வள்ளிநாயகி தெய்வநாயகி முதலியவர்களையும் அவர்களோடு தொடர்பான சம்பவங்களையும் வைத்துக் கொண்டு வெகு அழகாகக் கூறுகிருர். கந்தபுராணத்தின் சிறப்பினைக் காட்டும் இந்நூலானது ஒவ்வொரு சைவ சமயியிடமும் இருக்க வேண்டிய சமயநூலாகும்.

மேற்கூறிய கட்டுரைகளை எழுதுவதோடு 'சி. க' பிள்ளை அமைந்து விடவில்லை. சிறுகதை, நாவல், நாடகம் என்னும் துறைகளிலும் அவர் ஈடுபட்டுள்ளார். டால்ஸ் டாயின் கதைகளைத் தழுவி 'இவர் யாத்திரிகர்,' 'செருப்புக் கட்டியின் கதை' என்ற இரண்டு சிறு கதைகளையும், சொந்தமாகச் சில சிறு கதைகளையும் 'சி. க' பிள்ளை எழுதியுள்ளார். அவரது 'இருசகோதரர்கள்' என்னும் நாவலானது 1940-ஆம் ஆண்டில் எழுதப் பட்ட போதிலும் அது முடிவடையாமலே இருக்கிறது. 'நளன்தூது,' 'வால்மீகிதானே' முதலிய இலக்கிய நாடகங் கள் சிலவற்றையும் இவர் எழுதியுள்ளார்.

செய்யுள்

கவிதை புனையும் ஆற்றலிலும் கணபதிப்பிள்ளையவர்களும் பெரியதம்பிப்பிள்ளையவர்களும் சிறந்த புலவர்களாய் விளங்குகின்றார்கள். சங்கச்சான்றோர் நடையிலும், பிற்சான்றோர் நடையிலும், பாரதியின் புதுமை நடையிலும் செய்யுளாக்கிடும் ஆற்றல் நிறைவாக இவர்களிருவரிடத்திலும் காணப்பட்ட போதிலும், 'சி. க' பிள்ளையவர்கள் இதில் அதிகம் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. தனிச்செய்யுள்களை மட்டுமே அவர் இயற்றியுள்ளார்.

'சி. க' பிள்ளையவர்கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த முக்கியஸ்தர்களுள் சோமசுந்தரப் புலவருமொருவர். புலவரவர்களின் பாடல்களுக்கு 'சி. க' பிள்ளை எழுதிய விமர்சனங்கள் புதிய போக்கிலமைந்தவையாயிருக்கின்றன. புலவரவர்களின், இலங்கை வளம், நாமகள் புகழ்மாலை முதலியவற்றுக்கு பண்டிதரவர்கள் சிறந்த முகவுரைகள் எழுதியுள்ளார். இத்தகைய நீண்ட காலத் தொடர்புடைய புலவரவர்கள் நோய் வாய்ப்பட்டிருந்த காலத்தில், அவர் மனைவியாரான சின்னம்மையார் செய்த தொண்டுகளைப் பாராட்டி 'சி.க' பிள்ளை பாடிய பின்வரும் செய்யுளைக் கண்ட புலவரவர்கள் பெரிதும் மகிழ்ந்தார்.

பின்தூங்கி முன்னெழூஉம் பெற்றியுரைத் தார்தேவர்
உன் தாரத் துறக்க முண்டுகொலோ — குன்றுமே

தண்ணென் தமிழ்ப்புலவோய் தாயானுள் கையிருக்கக்
கண்ணுக்கு வேண்டும் கவி.

'சி.க' பிள்ளையவர்கள் தமது மாணவர்களோடு உரையாடிக் கொண்டிருந்த காலை, நகைச்சுவையுடன் வேதாந்த தத்துவம்பற்றிப் பாடிய,

கயிற்றர வொன்று தோன்றிக் கானனீர் பருகி விம்மி
முயற்றரு கொம்பர் பல்கி முயன்றுசெய் தவத்தின் சீரால்
மயற்கையி னீங்கி முன்போல் மாறியக் கயிறேயாகும்
இயற்கையே தத்துவம் காண் இது சொன்ஞன் மலடி
மைந்தன்.

என்னும் பாடலும் சிறப்புடனமைந்திருக்கக் காண்கிறோம்.

கலைப்புலவர் நவரத்தினமவர்கள் இயற்கையெய் தியபோது, 'சி.க' பிள்ளை பாடிய இரங்கற்பாவானது அவரது கவித்துவ ஆற்றலைப் புலப்படுத்தி நிற்கிறது:

கலைப்புலவர் தாமேயோ காலகதி யாஞர்
நிலைப்புலவர் யாரே நிலத்தில் — பலப்பலநூல்
கற்ருர் ஒருவரைக் காட்டுதற் கென்செய்வோம்
எற்றே யாழ்ப்பாணம் இனி.

இச்செய்யுளிலுள்ள 'எற்றே யாழ்ப்பாணம் இனி' *என்னும் சொற்ருெடரில் பொதிந்து விளங்கும் உணர்ச்சி யோட்டமும், பொருளாழமும் நோக்குதற்குரியன.*

'கவிதை புனையும் ஆற்றல் இயற்கையில் அவர்பால் அமைந் திருந்தது' *என்று 'சி.க' பிள்ளை சிலாகித்துக் கூறும்*

பெரியதம்பிப்பிள்ளையவர்கள், கவிதை புனைவதில் இக் காலத்திலே ஈடு இணையற்றவராக இருந்துவருகிறார். யாழ்ப்பாணத்திலே மாணவராயிருந்த காலத்தில் குமாரசுவாமிப்புலவர், பண்டிதர் மயில்வாகனனார் என்னும் இரு பெரும் புலவர்களிடம் பாடங்கேட்டமையும் அப்பெரியார்களிருவரோடு தொடர்பு கொண்டிருந்தமையுமே, 'ஏ. பெ' பிள்ளையிடம் இயற்கையாகக் குடிகொண்டிருந்த கவி அமைப்பினை வெளிப்படுத்திக் காட்டிட உதவியாயிருந்ததென 'ஏ.பெ' பிள்ளை நன்றியறிதலோடு குறிப்பிடுகிறார்.

யாழ்ப்பாணத்தில் மாணவராயிருந்த காலத்திலே இவர் தனது கன்னி முயற்சியாக, 'மண்டூர்ப்பதிக'த்தைப் பாடியுள்ளார். இப்பதிகமானது, பண்டிதர் மயில்வாகனனார் அவர்களது பாராட்டுதலைப் பெற்றதோடு, அவர்களின் சாற்று கவியையும் கொண்டதாயிருக்கிறது. மண்டூர்ப் பதிகம் 'ஏ.பெ'பிள்ளையின் இளமைப் பிராயத்தில் பாடப்பட்ட போதிலும், அஃது அருமையான படைப்பாகவே அமைந்துள்ளது. அச்செய்யுள்களில் காணப்படும் சொல்லாட்சிக்கும், பொருள் வைப்புமுறைக்கும், பின்வரும் உதாரணத்தைக் காட்டலாம்:

செந்தமிழ்க் கன்பனுய்த் தென்பொதிய மலையுற்ற
  தெய்வ முனி யாசிரியன் நீ
தேடிமா லயனிருவர் காணாத வடிமுகத்
  தேவனின் ஞானகுரு நீ
பந்தமரு மெல்விரற் கிள்ளைமொழி வள்ளியாம்
  பக்குவியை யாள வேடர்
பலரையு மிரட்சித்த பரமகரு ணாநிதிப்
  பாலசுப்பிர மண்யன் நீ

சந்துயர்ந் தோங்கோங்க லருணையனு தினமுமுறை
தருமருண கிரிநாத னின்
சந்தமிகு மதுரஞ் செறிந்தபாக் கேட்டகம்
தகுகளிகொள் மிகுபுலவ னீ
வந்தெனது மனவிருளை மாற்றியொளி நல்குவாய்
மன்றலங் கொன்றை யோடு
மதியேறு நதியேறு பணியேறு வேணியன்
மைந்த மண்டூர்க் கந்தனே.

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் முதற் தமிழ்ப் பேராசிரியராய்க் கடமையாற்றிக்கொண்டிருந்த விபுலாநந்த அடிகளார் நெருப்புக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு கொழும்பு அரசினர் வைத்தியசாலையிலே வைக்கப்பட்டிருந்தார்கள். இச்செய்தியானது, அப்போது வாத நோயினுல் பீடிக்கப்பட்டு படுத்த படுக்கையிலிருந்த பெரியதம்பிப்பிள்ளையவர்களைப் பெரிதும் கலங்கச்செய்தது. அடிகளார் எவ்வித ஆபத்துமின்றிக் குணமடைய வேண்டுமேயெனும் கவலை அடிகளாரின் மாணவரான 'ஏ.பெ'பிள்ளையினை வருத்தியது. தமது குருவைச்சென்று பார்த்திட முடியாத நிலை; எழுதவும் இயலாதபடி கையும் வாத நோயினுல் செயலற்றிருந்தது. தமது மாணவரொருவரை வரவழைத்து, 'மீட்சிப்பத்து' என்னும் தலைப்பில் பத்துப்பாடல்களைத் தாம் பாடியபோது எழுதுவித்து, அதனை வைத்தியசாலையிலிருந்த அடிகளாருக்கு அனுப்பிவைத்தார். அடிகளார் சுகமே மீழ்வார்களாக எனக் கூறுமாறு பைங்குயிலை இரக்கும் இப்பாடல்கள், முத்தமிழ் விற்பனரான அடிகளாரைப் பெரிதும் குழைந்துருகச் செய்து விட்டனவாம். அடிகளார் இப்பாடல்களைப் படித்து மன அமைதியும் ஆறுதலுமடைந்ததாக, அவர்கள் 'ஏ.பெ'பிள்ளைக்கு கடிதமெழுதினுர்களாம். பின்வரும் பாடல் மீட்சிப்பத்திலிருந்து எடுக்கப்

பட்டதர்கும்:

காரே றுந்திரு மூதூர்த் தாய்தரு கடவுட் காதல் மகன்
கருவிற் திருவுள கலைஞன் பெற்றோர் கண்ணிறை திரு மயிலோன்
ஏரே றும்படி கீழ்பால் மேல்பா லாக்கிநல் லிசை நட்டோன்
இமயத் தலையிற் தமிழ்முத் திரைவரை ஈழக் கரிகாலன்
சீரே றுந்தமி ழறிவர்க் காங்கில நூற்சுவை யினிதூட்டித்
தெருட்டும் புதுமைக் கபிலன் கலியுக தெய்வ அகத்தியனும்
பாரே றும்புக ழாளன் மீள்கெனக் கூவாய் பைங்குயிலே
பன்மொழி விபுலா னந்தன் வாழ்கெனக் கூவாய் பைங் குயிலே

இதன்பொருள்: *காரைதீவிலே பிறந்த அடிகளார், தெய்வக்காதல்கொண்டவர். தாயின்வயிற்றிலிருக்கும் போதே, கல்லாமற் பாதியறிவு கைவந்தவர். மயில்வாகனமென்னும் பிள்ளைப்பெயர் பெற்றவர். கிழக்கு மாகாணம் மேன்மையடையச் செய்தவர். இமயத்தில் தனது முத்திரையைப் பதித்த கரிகாற் சோழனைப் போன்று, தமிழின் இனிமையை நிலை நாட்டியவர். ஆரியமன்னனை பிருகத்தனுக்கு தமிழ்மொழியின் சிறப்பினை உணர்த்திய சங்கப் புலவரான கபிலரைப் போன்று ஆங்கிலமொழி யறிவினைப் பெற்றுக்கொள்ள, வாய்ப்பின்றியிருந்த, அடிகளார் காலத்துத் தமிழ்ப்புலவர்களுக்கு ஆங்கில கவிகளின் சிறப்புகளை விரித்துரைத்தவர். முத்தமிழுக்கு இலக்கணம் செய்த அகத்திய முனிவரைப் போன்று முத்தமிழிலும் வல்லவராயிருந்ததோடு, நூல்களுமியற்றியவர். வடமொழி, ஆங்கிலம், இலத்தீன், பிரஞ்சு முதலிய பன்மொழிகளில் பாண்டித்தியம் உடையவர்.*

சங்கச் சான்றோர் நடையிலும் பாக்கள் பாடியுள்ள பெரியதம்பிப்பிள்ளையவர்கள், சேரநாட்டின் நாநில மயக்கத்தினை, பொய்கையார் என்னும் புலவர் தாம் பாடிய புறநானூற்றுச் செய்யுளொன்றிலே,

நாடனென் கோ ஊரனென் கோ
பாடிமிழ் பனிக்கடற் சேர்ப்பனென் கோ
யாங்கனம் மொழிமோ ஓங்குவாட் கோதையைப்
புனவர் தட்டை புடைப்பின் அயலது
இறங்கு கதிர் அலமரு கழனியும்
பிறங்கு நீர்ச் சேர்ப்பினும் புள்ளொருங் கெழுமே,

என்று அழகுபடக் காட்டியமை போன்று, மட்டக் களப்புத் தமிழகத்தின் நாநிலமயக்கினையிட்டு கவிநயம் புலப்படுமாறு சிறப்புடன் பாடியுள்ளார். அப்பாடல் பின்வருமாறு:

திருவளர் தாமரைத் தெண்ணீர்ப் பொய்கைவாய்
உருவ ஒண்சிறைஅர் மலராய்ந் துழக்கலின்
செழுநீர்ப் பறவைத் தொழுதி ஆர்த் தெழுந்தே
கொழுமடற் றெங்கிற் குயிலொடு பயிலும்
தாட்டுணை ஆடவர் சதங்கைக் கூத்தொலி
சூட்டுமிசை மயிலந் தோகைதுயி லெழுப்பும்
மங்கையர் வள்ளைப் பாட்டிசை யமுதம்
கொம்பிடைக் கிள்ளையும் பூவையும் கூட்டுணும்
பால்மலி எருமைப் பகட்டொடு மயங்கி
மால்மருப் பியானை வனந்தொறுந் திரியும்

குடம்பொழி பசுவினம் கண்துயி லிடந்தொறும்
மடம்பயில் மான்களும் வண்புல் கறிக்கும்
இயற்கை யன்னை இனிது நடம்பயிலும்
நயத்தகு நலம்பொலி மட்டுநன் னாடே.

1943-ஆம் ஆண்டிலே, நோய்வாய்ப்பட்டிருந்த தமது துணைவியாரையும் அழைத்துக்கொண்டு, கொழும்பு அரசினர் வைத்தியசாலைக்குச் சென்ற 'ஏ.பெ' பிள்ளையவர்கள், மனைவியை வைத்தியசாலையில் சேர்த்தபின், ஒருமாதம் வரை அங்கு நிற்கவேண்டிய வரானார். தமது நண்பரொருவரின் வீட்டிலே நின்று கொண்டு, மனைவியாரைப் பார்த்து வந்தார். இந்நாட் களிலே, நண்பரது வீட்டில் காணப்பட்ட, பகவத் கீதைச் சுலோகங்களடங்கிய சிறிய புத்தகமானது, துணைவியாரின் நோய்நிலையினால் கவலையடைந்திருந்த 'ஏ.பெ' பிள்ளையவர்களுக்கு ஆறுதலையும் சமாதானத் தையும் கொடுத்தது; மனஅமைதியையும் ஏற்படுத்திற்று. தாம் இளமையிலிருந்து கடைப் பிடித்துவரும் சமரச, சமத்துவ, சன்மார்க்கத்தை அடிப்படையாகக்கொண்ட பகவத் கீதையானது 'ஏ.பெ' பிள்ளையின் உள்ளத்தைத் தொட்டது. கீதையின் சுலோகங்களை ஒவ்வொரு வெண்பாவாகப் பாடவேண்டுமென்னும் உணர்ச்சி அன்றுருக்கேற்பட்டது. கொழும்பில் நின்ற ஒருமாத காலத்தினுள், நாலு அத்தியாயங்களுக்கும் சற்று அதிக மாகப் பாடிமுடித்தார்.

பகவத் கீதைவெண்பாக்களைத் தற்செயலாகக் காணக்கிடைத்த வீரகேசரியின் முன்னாள் ஆசிரியரான கே. பி. ஹரன் அவர்கள் அவ்வெண்பாக்களை 1944-ஆம் ஆண்டிலே வீரகேசரியில் தொடர்ச்சியாக பிரிசுரிக்க ஏற்ற ஒழுங்குகளைச் செய்தார்.

வீரகேசரியில் பகவத் கீதை வெண்பாக்கள் வெளி வரக்கண்ட சுவாமி விபுலாநந்த அடிகளார், 'ஏ. பெ' பிள்ளையினைப்பாராட்டியதோடு அவரைக் கொழும்புக்கு அழைத்து, வெள்ளவத்தை இராமகிருஷ்ண மடத்திலே, தமது தலைமையில் பகவத் கீதையையிட்டு விரிவுரை களும் ஆற்றுவித்தார்கள்.

பலவகைச் சுவைகளும், நிகழ்ச்சிகளும் நிறைந்த நளன் கதையை, வரையறுக்கப்பட்ட இலக்கணத்தையுடைய வெண் பாயாப்பு முறையிலே விரித்துக் கூறுவதில் ஈடுபட்டு, அதனை ஓசைச் சிறப்பும் கற்பனைத் திறமும் வெளிப்படுமாறு சிறப்புடன் பாடி, 'வெண்பாவிற் புகழேந்தி' என்னும் பெருமையினைத் தம தாக்கிக்கொண்ட புகழேந்திப் புலவரைப்போன்று, பக்திச்சுவை யும் சமத்துவ உணர்வும், சம்பவ நிறைவும் கொண்ட பகவத் கீதையை, கற்போர் உள்ளத்தைக் கவரும் வண்ணமும், உணர்ச்சியோட்டமானது உயிர்த் துடிப்போடி நக்கத்தக்கதாயும் பாடிய பெரியதம்பிப் பிள்ளை யவர்கள், புலவருலகிலே நிலையான புகழினைப் பெற்றுக் கொண்டார்

'ஏ. பெ.' பிள்ளையின் பகவத்கீதை வெண்பாக்கள் வெளிவந்துகொண்டிருந்த காலத்திலே, இலங்கை வானொலியினர் நடாத்திவந்த 'புத்திமண்டல'*த்திலே இலங் கையில் வெண்பாப்பாடுவதில் 'மிகச் சிறந்தவர் யார்?' என்னும் வினாபற்றி அறிஞர்கள் ஆராய்ந்து ஈற்றிலே* 'வெண்பாவிற் பெரியதம்பி' *என்னும் ஒருமனதான முடி வினையே அடைந்தனர்.*

இவ்வாறான புகழினை 'ஏ பெ' பிள்ளையவர்களுக்கு ஈட்டிக்கொடுக்கக் காரணமாயமைந்த, ★ பகவத்கீதை வெண்பாக்கள், யாழ்ப்பாணம் ஆரிய திராவிடா பாஷா பிவிருத்திச் சங்கத்தின், இருபத்தெட்டாவது ஆண்டு விழாவிலே, கையெழுத்துப் பிரதி ரூபத்தில் அரங்

★ "பகவத்கீதை" (அரசு வெளியீடு)

கேற்றப்பட்டது. அப்போது பெரியதம்பிப்பிள்ளையவர்களின் உற்ற நண்பரான 'சி. க' பிள்ளையவர்கள்,

கீதை கவிசெய்து கீர்த்தி மிகப்பெற்ருன்
ஏபெரிய தம்பி எனதன்பன்-ஓதக்கேள்
பாட்டுக் கொருபுலவன் பாரதியென் ருரொருவர்
பாட்டுக் கிவனென்பன் யான்.,

எனப்பாடி சாற்றுகவி அளித்தனர். தமிழன்னைக்கு 'ஏ. பெ' பிள்ளையவர்கள் செய்த இத்தொண்டினை விழாவிலே பங்குகொண்ட டாக்டர் இராசமாணிக்கனுர், திரு. சு. நடேசபிள்ளை முதலிய அறிஞர்கள் விதந்தேற்றினர். தமிழ்பேசும் மக்களனைவரும் ஒரு முகமாகப் பாராட்டினர்.

பின்வரும் வெண்பாக்கள் பகவத்கீதைவெண்பாக்களிலிருந்து எடுக்கப்பட்டவையாம்:

ஆரியர்க்கா காதுகாண் அம்மை வழியடைக்கும்
பாரிற் பெரும்பழியும் பாரிக்கும்-காரியத்தே
கைகலந்த காலைக் கலங்குவை நீ யிக்கலக்கம்
எய்தியதுன் பாலெங் கிருந்து.

இல்லை பிறத்த லிறத்தல் பழம்பொருளீ
தில்லா திருந்திடையி லெய்தலிலை
பிறப்பற் றழிவற்ற பேரான்மா தேகம்
இறப்ப வழி யாதுநிற்கு மே.

ஐந்துள் அடக்குமொரு ஆமையெனப் புறத்தே
சிந்தும் விடயத்திற் செல்புலன்கள்-ஐந்தும்
இசையாமை யப்பொருளி னீர்த்தடர்ப்பான் கட்டே
அசையாமை கொண்ட அறிவு.

பெரியதம்பிப் பிள்ளையவர்கள் சிலேடைப் பாக்கள் பாடுவதிலும் புகழ்பெற்றவராயிருக்கிறார்.

பிரபல கல்விமானும், தற்போதய இலங்கைச் செனட் சபை உறுப்பினருமான ஜனாப் ஏ. எம். ஏ. அசீஸ் அவர்கள் 1942-ஆம் ஆண்டில் கல்முனையிலே உதவி மாகாண அதிபராகக் கடமையாற்றியபோது, அன்னாரது சிறந்த நிர்வாகத் திறமையினை நேரடியாகக் கண்டறிந்த 'ஏ. பெ' பிள்ளையவர்கள்,

புலத்துயர்ந்து வண்மைப் புகழ்க்கதிர்கள் வீசி
நிலத்ததிகா ரஞ்செய்து நின்று—பலத்தினிறை
நல்ல களம் பொழிந்து நாடு புரத்தலால்
நெல்லும் அசீஸ் துரைக்கு நேர்.,

என்னும் சிலேடைக்கவி மூலம் சிறந்த முறையிலே போற்றியுள்ளார்.

இதன் சிலேடைப் பொருள்: புலம்: நெல்லுக்கு வயல்; அசீஸ் அவர்களுக்கு அறிவு. கதிர்: நெற்கதிர் அசீஸ் அவர்களின் புகழ் ஒளி. அதிகாரம்: நெல் அதிகரித்தல்; அசீஸ் அவர்கள் அதிகாரம் செய்தல். களம்: நெற்களம்; கற்றோர் அவை. நாடுபுரத்தல்: நெல் மக்களின் உணவாயிருந்து மக்களைக்காப் பாற்றுதல்; அசீஸ் அவர்கள் தமது பகுதியினை நிர்வகித்தல்

பண்டிதர் மகாலிங்க சிவமவர்கள், இயற்கையெய்திய ஞான்று, 'ஏ பெ' பிள்ளை பாடிய இரங்கற் பாக்களுள் ஒன்று சிலேடையாக அமைந்து, பொருள்நிறைந்து போற்றப்படத்தக்க வகையில் இருக்கிறது. அப்பாடல் பின்வருமாறு:

தண்முகம் சேர்ந் தொழுகிவிளை புலம்நிரப்பச்
சமத்துவமாய்ச் சார்வோர் கொள்ள
உண்முகம் சேர் அகம்புறமாம் ஒண்பொருளின்
வளம் பெருக்கும் உபகாரத்தால்
மண்முகம் சேர் மகாவலிகங் கைக்கிணையாம்
மகாலிங்க சிவனு ரின்று
விண்முகம் சேர்ந் திடுதுயரம் தமிழுலகம்
தாங்கிடுமோ விதியி தாமோ.

இதன் சிலேடைப்பொருள்: தண்முகம்: *ஆற்றினது குளிர்ச்சியான மேற்பரப்பு; சிவத்தாரது குளிர்ந்த முகம்.* ஒழுகுதல்: *ஆற்றினது ஓட்டம்; சிவத்தாரது வாழ்க்கை ஒழுங்கு.* விளைநிலம் நிரப்பல்: *ஆற்றுனது வயல் நிலத்தை நிரப்புதல்; சிவத்தார் மாணவர்களது அறிவினை நிறைவாக்குதல்.* சமத்துவம்: *எல்லா நிலமும் எல்லா மக்களும் சமம்; எல்லா மாணவர்களும் சமம்.* உள்முகம்: *ஆற்றினதுஉள்ளிடம்; சிவத்தாரது உள்ளம்.* அகம்புறமாய்: *ஆற்றுனது கீழே உள்ளதை மேலே கொண்டுவருதல்; சிவத்தார் அகப் புறப் பொருள்களைக் கற்பித்தல்.* ஒண்பொருளின்வளம்: *பொருளாதாரத்திற்குரிய நிலவளம்; அறிவிற்குரிய மனவளம்*

தமிழ்மொழியின் சிறப்பினையும், அம்மொழியினை நாம் பேணிக்காக்கவேண்டிய கடப்பாடுடையோம் என்பதையும்,

மன்னர் வளர்த்தமொழி மாநில மாண்டமொழி
பன்மொழி வாணர்களும் பாலித்துக் காத்த மொழி
உண்ணு முணவில் நீரில் உயிரில் இனிய மொழி
கண்ணிற் சிறந்திடுநம் கன்னித் தமிழ் மொழியைக்காப்போம்,

என்னும் கவிதைமூலம் பெரியதம்பிப்பிள்ளையவர்கள் காட்டியுள்ளார்.

பணம், பட்டம், பவிசு யாவும் பெற்றிருந்தும், மன அமைதி கிடையாதோராய், இன்பமெங்கே என்று தேடியலேபவர்களைப்பார்த்து 'ஏ.பெ' பிள்ளையவர்கள்,

மாட மாளிகை மாமனை நன்மக்கள்
மாசில் சுற்றம் மனமொத்த நண்பர்கள்
தேடு கல்விசீர் செல்வ மதிகாரம்
தேக நற்சுகம் யாவையும் சேர்த்துமென்
நாடு முற்றும் வறுமை சிறுமையும்
நலியும் தீப்பிணி யுங்குடி கொண்டிடில்
கூடுமோ நமக்கின்பம் நம் சோதரர்
குறைகள் தீர்த்திடில் இன்பம் குலாவுமே.

என்று சமூகப் புரட்சி செய்பவராகப் பாடுகின்றார்.

'ஏ. பெ' பிள்ளையவர்கள் நினைத்த மாத்திரத்தே பாடல்களைப் பாடக்கூடிய ஆசுகவியாகவும் இருக்கிறார். உணர்ச்சி தூண்டப்படும் சந்தர்ப்பங்களில் அழகான கவிதைகள் பல வெளிப்பட்டிருக்கின்றன.

ஒருநாள் பயணம் செய்வதற்காக 'ஏ. பெ' பிள்ளை மட்டக்களப்பு வசுநிலையத்தை அடைந்தார். வண்டியில் இருப்பதற்கு இடமில்லை. முன்னுலிருந்த ஆசனத்தில் மட்டும் இரண்டு பேருக்குடைய இடமிருந்தது. அங்கு சென்றிருக்கலாமெனப் போன பெரியதம்பிப்பிள்ளை அவர்களை, கண்டக்டர் விடவில்லை. அந்தஇடம் இரண்டு ஐயாமாருக்கென வைக்கப்பட்டிருப்பதாக அவன் கூறினுன். காற்சட்டை அணிந்து, ஆங்கிலம் பேசுவதற்காக

மட்டும் ஐயாமாரென உயர்த்திக் கூறப்படும் பிரிவின ருக்கு சமுதாயம் கொடுக்கும் மதிப்பையும் மரியாதை யையும் கண்ட 'ஏ.பெ' பிள்ளை உணர்ச்சியால் உந்தப் பட்டார். அதன் விளைவே பின்வரும் பாட்டாகும்:

முன்னே வழக்கால் முளைத்தநாற் சாதிபோய்ப்
பின்னை யிருசாதி பிறந்ததுகாண்—அன்னியர்தம்
ஆங்கிலத்தால் மேல்சாதி ஆயிற்றே தாய்மொழிகற்
றேங்கிநிற்கும் கீழ்சாதியே.

'ஏ. பெ' பிள்ளையுடன் பிரயாணம்செய்த எனது நண்பரொருவர் மூலம் கிடைத்த இப்பாடலுடன் சேர்த்து, 'ஏ.பெ' பிள்ளை பாடிய பிறிதோர் பாடலான,

இந்து மகா சமுத்திரத்தின் நடுவி லிங்கோர்
இங்கிலாந் தமைந்துகிடந் ததுவே வென்ன
முந்து சீர் நாகரிகம் பழக்கம் வாழ்வு
மொழிப் பயிற்சி கலையுணர்ச்சி முழுதும் மாறப்
பந்த முறு வெறும் போலிப் பகட்டில் மோகப்
பட்டுப் பாழ்பட்டாவி பதைத்து வீழ்ந்து
சிந்தனையற் றிடுமாலங்கா தேவி யுள்ளம்
தேசீய மயமாகத் திகழ்வ தென்றே,

என்பதையும் 'சி.க' பிள்ளையவர்கள் 'தமிழல்லாத்தமிழ்' என்னும் கட்டுரையின் முடிவிலே எழுதியுள்ள,

இருள் தரும் உலகத்தே இங்கிலி சுருவாகி
மருள்தரு கலிகாலம் மயல்செயு மதனாலே
அருமறை நெறிபோக அறமது புறமாகக்
குருடொரு குருடுக்குக் குழிவழி செயுமன்றே.

என்னும் பாடலையும் சேர்த்துப் படிப்பவர்கள் பெரியார்களிருவரதும் கருத்து ஒருமைப் பாட்டினையும், ஒத்த நோக்கினையும் கண்டு கொள்வர்.

எமது தாய் நாடாம் ஈழநாட்டினைப் பற்றி பெரிய தம்பிப் பிள்ளையவர்கள் பாடியுள்ள,

இலங்கை மணித்திருநா டெங்கள் நாடே — இந்த
இனிய உணர்ச்சி பெற்றால் இன்ப வீடே.

என்று தொடங்கும் புகழ்பெற்ற பாடலை பாரதியாரின்,

செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே.

என்னும் பாடலுடன் இணைத்துப் பார்ப்பவர்கள், இரு பெரும் புலவர் பெருமக்களதும், நாட்டுப் பற்றினைக் கண்டுகொள்வதோடு, இருவர்தம் கவித்துவ ஆற்றலையும் அறிந்து கொள்வர். 'ஏ. பெ.' அவர்களது மேற்படி பாடலிற் காணப்படும் தேசீய ஒருமைப்பாடும், சமரச நோக்கும் அப் பாடலை, இலங்கையின் தேசீயகீதமாகக் கொள்ளவே செய்கிறது.

மட்டக்களப்பு அரசினர் கல்லூரியிலே குறைந்த வேதனம் பெற்றுக்கொண்டு தமிழாசானாய் இருந்த போது, அக்காலத்தில் வித்தியாதிபதியாகக் கடமை பார்த்த திரு. கே. எஸ். அருள்நந்தி அவர்கள், இக்கல்லூரியினைப் பார்ப்பதற்காக வந்திருந்தார். அப்போது,

தாப்பில லூச லெனத்தடு மாறும் தனித்துயர் யான்
நீப்பியலாது தமிழா சிரிய நிலையி லிங்கே
யாப்பியல் மெய்போல் மதிப்பிலனுகி யிருத்தல் நன்றோ
காப்பியம் வல்ல அருணந்தி செந்தமிழ் காவலனே,

என்று பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பாடிய பாட்டானது அருள்நந்தி அவர்களைப் பெரிதும் கவர்ந்து விட்டதாம்.

சமத்துவ, சமரச நோக்குடையவரான 'ஏ. பெ.' அவர்கள், புத்த பெருமானையிட்டுப்பாடிய பின் வரும் பாடலானது அவரின் மனநிலையை வெளிப்படுத்திக் காட்டுகிறது:

மண்ணுலகிற் பிணிமுப்புச் சாக்காடு
வருவதன் முன் மக்கள் வாழ்விற்
தண்ணளி சேர்ந் துயிர்க் கொலையும் தீமைகளுந்
தவிர்த்துமனச் சாந்தி கண்டு
பண்ணுபவ வினைத்துயரம் பற்றுமல்
அருள் நெறியே பாலித் தாண்டு
புண்ணியமே வடிவான புதுவாழ்விற்
புகுத்துமகான் புத்தர் கோமான்.

தமிழ்பேசும் மக்களாகிய இந்துக்களினதும் முஸ்லீம்களினதும் ஒற்றுமையை விழைபவரான 'ஏ.பெ' பிள்ளை,

இருதயத்தின் ஈரிதழ்போல் இந்துமுசி லீம்கள்
ஒருவயிற்றுப் பாலகர்போ லுள்ளோம்—அரசியலில்
பேராசை கொண்டோர் பிரித்துநமை வேருக்க
ஆராயார் செய்வார் அழிவு.

என வெகு அழகாக எடுத்தியம்பியுள்ளார். மொழியால் இணைந்துள்ளவர்களைப் பிரிக்க முயல்வதானது அழிவுப்பாதையிற் கொண்டுபோய் விட ஏதுவாயமையுமென்பதே 'ஏ.பெ' பிள்ளையவர்களது நம்பிக்கையாம்.

உரைநடை இலக்கியத்தில் அதிகமாக ஈடுபட்டு, எவ்வாறு கணபதிப்பிள்ளையவர்கள் தமிழ்ப்பணியாற்றி வருகிறரோ, அவ்வாறுன பணியினைச் செய்யுள் இலக்கியத்தின் மூலம் பெரிய தம்பிப்பிள்ளையவர்கள் செய்து வருகிறர்.

அதற்கு அவர்; இதற்கு இவர்.

பிறதொண்டுகள்

பண்டிதர்களென்போர், சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழ்பவர்களென்றும், தாமுண்டு தமது நூல்களுண்டு எனும் நோக்குடையவர்களென்றும் அபிப்பிராயம் நிலவிய காலத்திலே பண்டிதர் கணபதிப்பிள்ளையவர்களும், பெரியதம்பிப்பிள்ளைப் பண்டிதரும் பொதுப்பணிகள் பலவற்றிலே பொதுமக்களுடன் சேர்ந்து பெரும்பணியாற்றியுள்ளார்கள். இதன்மூலம் தமிழ்ப்பண்டித வர்க்கமும், தமிழாசிரிய உலகமும் தலை நிமிர்ந்தன.

'சி.க' பிள்ளையும் 'ஏ.பெ' பிள்ளையும் தங்கள் காலத்து அரசியல், சமயம், சமூகம் ஆகியவற்ருேடு தொடர்புடைய இயக்கங்களிலெல்லாம், பங்குகொண்டுழைத்துள்ளார்கள்.

அரசியல்

இலங்கைக்குப் பூரண சுதந்திரம் வேண்டுமென்னும் நோக்கத்தோடு, 1924-ஆம் ஆண்டில் திருவாளர்கள் ஹண்டி பேரின்பநாயகம், பாலசுந்தரம், நடேசன்

முதலியோரால் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் வாலிபர் காங்கிரசிலே, கணபதிப்பிள்ளைப் பண்டிதர் முக்கிய பங்கு கொண்டிருந்ததோடு, பல சொற்பொழிவுகளையும் ஆற்றியுள்ளார். சமசமாசத்தலைவர்கள் முதன்முறையாக யாழ்ப்பாணம் வந்திருந்தபோது, அவர்களை வரவேற்பதற்கென ஒழுங்கு செய்யப்பட்ட வரவேற்புக் கூட்டத்திலே, வரவேற்புரை நிகழ்த்தியவர் 'சி.க' பிள்ளை அவர்களே.

சிறந்த திட்டங்களையும், நோக்கங்களையும் கொண்டியங்கிவந்த இலங்கை அரசியலானது, காலஞ் செல்லச் செல்ல, முறைகேடும், சுயநலமும், குழப்பமும் சேர்ந்த ஓர் இழிநிலை அடைவதாக அவருக்குத்தோன்றியது. இக்காரணத்தினுலே 'சி.க' பிள்ளை தாம் அரசியலில் கொண்டிருந்த தொடர்பினைத் துண்டித்துக் கொண்டார்.

பெரியதம்பிப் பண்டிதர், மட்டக்களப்பு அரசியல் வரலாற்றிலே பெரும் பங்கு கொண்டு வந்திருக்கிருர். அக்காலத்திலே அரசியற் செல்வாக்குப் பெற்று விளங்கியவரும், மட்டக்களப்புச் சரித்திரம் (Monograph of Batticaloa District) என்னும் ஆங்கில நூலின் ஆசிரியரும், கல்லோயாத் திட்டத்தின் ஆரம்பகால ஆலோசகர்களில் ஒருவருமான, திரு. எஸ். ஓ. கனகரத்தினம் அவர்களோடு, 1935-ஆம் ஆண்டிலிருந்தே 'ஏ. பெ' பிள்ளை தொடர்புகொண்டு அரசியலில் பணிபுரிந்துள்ளார்.

சமீபகாலத்தில் குழப்பமான இயக்கமாய்மாறி, கீழ்நிலைக்குச் சென்றுகொண்டிருந்த அரசியலினும் 'ஏ.பெ' பிள்ளை தீவிர பங்குகொண்டிருந்தமை, அன்னுரின் மதிப்பினை மாசு படுத்தத் தொடங்கியது. இஃது அவரது ஆற்றலை, தமிழ்ப்புலமையினைக்கூட—கபளீகரம் செய்யத்தொடங்கி விட்டதென்றே கூறவேண்டும். நிலை

முற்றுமே மோசமாகிட முன்னர் 'ஏ.பெ' பிள்ளை இதனைப் புரிந்துகொண்டார். தமது நண்பரான 'சி. க' பிள்ளை அவர்களைப் பின்பற்றி இவரும் அரசியலில்தாம் கொண்டிருந்த தொடர்பினை நீக்கிக்கொண்டார்.

சமயம்

இவர்களிருவரும் சமயப்பணியில் முன்னணித்தொண்டர்களாக இருந்துவருகிறார்கள். திருவிழாக்களிலே சிறப்புச் சொற்பொழிவுகளாற்றியும், புராணங்களுக்குப் பயன் சொல்லியும், தம்மால் முடிந்த வரையும் பணியாற்றுகின்றனர்.

அரசினர் நியமித்துள்ள சிவாலய பரிபாலன சபைகளிலும், இந்துசமய விசாரணைச் சபைகளிலும் முக்கிய பங்கு கொண்டுள்ள இவர்கள், தங்கள் பகுதிகளிலுள்ள இந்துபரிபாலன சபைகளிலும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

தங்கள் பகுதிகளில் இவர்களிருவரும் சைவ சமய நூல்களைப் படிக்கவிரும்புவோருக்கு இலவசமாகப் போதித்தும் வருகிறார்கள்.

சமூகம்

மக்களின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட சங்கங்கள், இயக்கங்கள் முதலியவற்றிலும் இவர்கள் பங்குகொண்டுள்ளனர். இவர்களிருவரும் பங்குகொண்டுழையாத முக்கிய சங்கங்களோ, கழகங்களோ, ஆலோசனைச் சபைகளோ எமது நாட்டில் இல்லையெனலாம். இவர்கள்தம் அறிவும், அனுபவமும் சிறந்த முறையிலே பயன்கொள்ளப் பட்டிருப்பதை நாம் கண்டு கொள்ளலாம்.

கணபதிப்பிள்ளையவர்கள் தொடர்பு கொண்டிருந்த சங்கங்களுள், யாழ்ப்பாணம் ஆரிய திராவிடா பாஷா பிவிருத்திச் சங்கம், யாழ்ப்பாணம் கலாநிலையம், சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலைக் கழகம் முதலியவற்றை யும், பெரியதம்பிபிள்ளையவர்கள் தொடர்புகொண்டி ருந்தவற்றுள், மட்டக்களப்பு இந்து பரிபாலன சபை, யாழ்ப்பாணம் ஆரிய திராவிடா பாஷாபிவிருத்திச் சங் கம், கலைக் கழகம் முதலியவற்றையும் குறிப்பிடலாம்.

காவிய பாடசாலை

உண்மையான சமயக் கல்வியையும், ஆழமான தமிழ்ப் புலமையினையும், இலவசமாகப் பரப்பவேண்டு மென்று நாவலரையா அவர்கள் விரும்பினார்கள். அவர் களின் தமையனார் புத்திரராகிய கைலாசபிள்ளையவர் கள், இந்த நோக்கினை மனதிற் கொண்டே காவிய வகுப்பொன்றை, நாவலர் சைவப் பிரகாச வித்தியா சாலையில் ஆரம்பித்தனர். இக்காவிய வகுப்புத்தான் 'சி. க.' பிள்ளையவர்களையும், 'ஏ. பெ.' பிள்ளையவர்களை யும் இணைத்ததோடு, அவர்கள் தமிழறிஞர்களாய் விளங் கிட உதவியாயும் அமைந்தது.

நாவலர் பாடசாலையின் காவிய வகுப்பிலே, நாவ லரவர்களின் தருமப்பணத்திலே தாம்படித்ததை ஞாபகத் திற் கொண்டு, நாவலரவர்களின் இலட்சியத்தை நிறை வேற்றிடும் நோக்கமுடன் கணபதிப்பிள்ளையவர்கள், சைவாசிரியர் கலாசாலையிலே பேராசிரியராய்ப் பதவி ஏற்ற ஒரு சில வருடங்களுள், காவிய பாடசாலையொன் றினைத் தொடங்கினார். ஆரம்பத்தில் ஆசிரியர் கலாசாலை யில் பயிற்சிபெறும் மாணவர்களுக்கு மட்டுமேயென இருந்த வகுப்பானது, காலஞ்செல்லச் செல்ல விரிவு

படுத்தப்பட்டு பிறரும் பயனடைய வழிவகுத்துக் கொடுக்கக்கூடிய நிலையினையடைந்தது.

இந்து சாதனப் பத்திரிகையில் 1917ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட விளம்பரத்தைப் போன்ற ஒரு விளம்பரமானது, 1935ஆம் ஆண்டு ஈழகேசரியில் வெளிவந்தது. முன்னைய விளம்பரம் 'சி. க.' பிள்ளையவர்கள் கல்வி கற்ற காவிய வகுப்பினைப் பற்றியது; பின்னைய விளம்பரம் 'சி க.'பிள்ளையவர்கள் ஆரம்பித்த காவிய பாடசாலையினைப் பற்றியது.

வேதனமின்றிக் கற்பிக்கப்படுவதோடு, போசன வசதியும் செய்துதரப்படுமென்று, ஈழகேசரியில் வெளியான விளம்பரத்தைக் கண்ட மாணவர்கள், பல ஊர்களிலுமிருந்து வந்து சேர்ந்தார்கள். மாணவர்களின் தொகை அதிகரித்ததனால், 1938ஆம் ஆண்டிலிருந்து சமஸ்கிருதமும் சிங்களமும் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இதனால் மாணவர்கள் நிறைந்த அறிவினைப்பெற்றுக்கொள்ள வாய்ப்பேற்படலாயிற்று. இக்காவிய பாடசாலையானது பண்டிதர்களையும், பாலபண்டிதர்களையும் உருவாக்கிடப் பெரிதும் உதவியுள்ளது.

கணபதிப்பிள்ளையவர்கள் செய்த பலவகையான பணிகளுள்ளும், அவருக்குப் பெரும் புகழைத் தேடிக் கொடுத்ததும், தமிழுலகம் சிறந்த பயனடைந்ததுமான பணி இந்தக் காவிய பாடசாலையே என்று கூறுவதில் நிறைந்த உண்மையிருக்கிறது.

பண்டித வகுப்பு

பெரியதம்பிப் பிள்ளையவர்களும், தாம் நாவலரவர்களின் காவியவகுப்பிலே இலவசமாகப் பெற்றுக் கொண்ட கல்விச் செல்வத்தை, மற்றவர்களும் பெற்றுப் பயனடையவேண்டுமென விரும்பினர். குருசீட

முறையிலமைந்த கல்வி முறையே, நிறைவான புலமையைப் பெற்றுக் கொள்ளுவதற்கேற்றதென்பதைத் தமது அனுபவமூலம் அறிந்திருந்த 'ஏ. பெ' பிள்ளையவர்கள் மட்டக்களப்பின் பல இடங்களிலே பண்டித வகுப்புகளை ஆரம்பித்துப் பாடஞ் சொல்லிக் கொடுத்து வந்தார்.

கணபதிப்பிள்ளையவர்கள், காவிய பாடசாலையமைத்து தொடர்ச்சியான பணியினைச் செய்வதற்கு உதவியாக அமைந்த சூழ்நிலையும் வசதியும் பெரியதம்பிள்ளையவர்களுக்குக் கிடைக்கவில்லை. பல இடங்களில் கடமையாற்ற வேண்டியிருந்தமையால் 'ஏ. பெ.' பிள்ளையவர்கள் தொடர்ச்சியான பணியில் நிலையாக ஈடுபடமுடியாத நிலையிலிருந்தார்.

இவ்வித சூழ்நிலையிலும் பெரியதம்பிப்பிள்ளையவர்கள் ஆரம்பித்த பண்டித வகுப்புகள், தமிழ்க் கல்வியைப் பரப்புவதில் பெரும்பங்குகொண்டிருக்கின்றன. இவ்வகுப்புகள், பண்டிதர்களையும், பாலபாண்டிதர்களையும் உருவாக்கியிருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் இன்று வாழ்ந்துவரும் பண்டிதர், பாலபாண்டிதர்களுள் பெரும்பாலானோர் எவ்வாறு, 'சி. க.' பிள்ளையவர்களது மாணவர்களாக இருக்கிறார்களோ, அவ்வாறே மட்டக்களப்பின், பண்டிதர்-பாலபாண்டிதர்களுள் பெரும்பாலானோர் 'ஏ. பெ.' பிள்ளையவர்களது மாணவர்களாயிருக்கிறார்கள்.

பாராட்டுப்பெறுதல்

பண்டிதர் கணபதிப்பிள்ளையும், பெரியதம்பிப் பண்டிதரும் மரபுபேணி மொழிவளர்த்துவரும் சிறப்பினைத் தமிழறிஞர்களனைவரும் காலத்துக்குக்காலம் பாராட்டி வந்துள்ளனர். தென்னகத்திலிருந்து

ஈழநாட்டிற்கு வந்துபோகும் தமிழறிஞர்கள், இவ்விரு பெரியார்களையும் சந்தித்துத் தங்கள் பாராட்டுகளைத் தெரிவித்துச் சென்றுள்ளனர்.

'இருபதாம் நூற்றுண்டின் இருபெரும் புலவர்களைக் குறித்துப் பேசினுல் சோமசுந்தரப்புலவரும், சுவாமி விபுலாநந்தர் அவர்களுந்தான் எஞ்சுவார்கள்' என்று, சமீபகாலத்திலே நவாலியூரில் நடைபெற்ற சோமசுந்தரப்புலவர் நினைவு விழாவில் பேசும்போது பண்டிதர் கணபதிப்பிள்ளையவர்கள் குறிப்பிட்டார்கள். இவ்விரு புலவர் பெருமக்களுள் சோமசுந்தரப்புலவரவர்கள் 'சி.க' பிள்ளையுடனும், விபுலாநந்த அடிகளார் 'ஏ.பெ' பிள்ளையுடனும் நெருங்கிய தொடர்புடையவர்களாயிருந்தார்கள். 'கற்றுரைக் கற்றுரே காமுறுவர்' என்னும் வாக்கிற்கு இவர்களது தொடர்பானது வகையாயமைந்த உதாரணமாம்.

தங்கத்தாத்தா அவர்களது பாடல்களில் ஈடுபாடு கொண்ட 'சி.க' பிள்ளையவர்கள், அப்பாடல்களை விமர்சனக் கண்ணேட்டத்தோடு அணுகி, அவற்றின் உயிர்த் துடிப்புகளையும், பொருளாழத்தத்துவங்களையும் தொட்டுக்காட்டிய சந்தர்ப்பங்கள்யாவும் புலவரவர்களின் புகழை வெளியுலகிற்பரப்பிட உதவி செய்வனவாய் அமைந்தன. ஒருவரிலொருவர் அன்பும் மதிப்பும் கொண்டிருந்த இவர்களது தொடர்பினுல் இனிய பல பாடல்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

புலவரவர்களது துணைவியார் சிறந்த பண்பு நிறைந்தவர். வள்ளுவர்பெருமானுக்கு வாய்த்த வாசுகி அம்மையாரைப்போன்று இவர் இருந்துகொண்டு புலவரவர்களைப் பேணி அவர்களுக்கு வேண்டிய பணிகளை இன்முகத்துடன் புரிந்து வந்தார். இதனை அறிந்து

கொள்ளும் சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெற்ற 'சி. க' பிள்ளையவர்கள் பெருமகிழ்ச்சியினராய், "பின்தூங்கி முன்னெழூஉம்" என்னும் செய்யுளைப்பாடி புலவரவர்களுக்கு அனுப்பி வைத்தார். அச்செய்யுளில் "கண்ணுக்கு வேண்டுங் கவி" என்று கணபதிப்பிள்ளையவர்கள் கேட்டுக்கொண்டதற்கு விடையாக, பின்வரும் பாடலைப் புலவரவர்கள் பாடி அனுப்பினார்கள். இப்பாடலானது 'சி. க.' பிள்ளை அவர்களது சிறந்த பல அம்சங்களைத் தொட்டுக்காட்டிப் பாராட்டுவதாக அமையலாயிற்று. அப்பாடல் பின் வருமாறு:

அண்டர்கள் விழையு மமுதினு மினிக்குந்
தண்டமி ழுணர்ந்த பண்டித மணியே!
இலக்கியக் கலைக்கடன் முழுகி நிலைப்படு
நால்வகைச் செஞ்சொல் வால்வளை யீன்ற
மாமணிக் குவைகள் வாரித் தூநகை
இன்புடன் கேட்குந ரன்பொடு மகிழத்
தூக்கிவிலை யுரைக்கும் வாக்கினில் வல்லோய்!
எல்லாம் வல்ல இறைவ னருளாற்
பல்லாண்டு வாழ்வும் உடனலப் பாடும்
எண்ணிய வெய்தலும் ஞானமுங் கல்வியும்
திருவுஞ் சிறப்பு மருவியெஞ் ஞான்றும்
ஐம்முக னருளிய கைம்முகன் றெய்வப்
பெரும்பெயர் கொண்ட வரும்புகழ்க் குரிசில்!!
கைக்கவி யிருக்கக் கட்கவி வேண்டிய
அற்புத நுண்மதிப் பொற்புயர் செல்வ!!
வாழிய பெரும நீயே
ஆழிசூ ழுலகி லடைவன வடைந்தே.

விபுலாநந்த அடிகளாரில் இயல்பாகவே ஈடுபாடு கொண்டு குருசீட அடிப்படையில் பிணைக்கப்பட்டவரான 'ஏ. பெ' பிள்ளையவர்கள், அடிகளாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதில் விருப்புடையவராவர். பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் தமது கன்னிப் படைப்பான 'மண்டூர்ப் பதிக'த்தைப்பாடிமுடித்து, அடிகளாரிடம் கொடுத்து அபிப்பிராயம் கேட்டார். 'ஏ. பெ' பிள்ளையின் பாடல்களில் காணப்பட்ட முதிர்ந்த அனுபவத்தினையும், சிறந்த சொல்லாட்சியினையும் பார்த்த அடிகளார் பெரிதும் மகிழ்ந்தார்கள்; 'ஏ.பெ' பிள்ளையவர்களை வெகுவாகப் பாராட்டினார்கள். பாராட்டியதோடமையாது, மண்டூர்ப் பதிகத்துக்குத் தாமாகவே ஒரு சாற்றுகவியையும் பாடிக்கொடுத்தார்கள். அடிகளார் அளித்த அச்சாற்றுகவியானது பெரியதம்பிள்ளையவர்களது ஆற்றலைப் பாராட்டிய பாட்டாகவே அமைந்திருக்கிறது. அப்பாடல் பின்வருமாறு:

பண்டுரு முகிற்குலங்க ளெமதிறைவர்
மருகர்திருப் பதியி தென்ன
விண்டுர மழைபொழியுஞ் சிறப்பதனல்
வளமலிந்து மிகுந்து தோன்றும்
மண்டூரி லுறைமுருகன் மலரடிக்கோர்
திருப்பதிகம் மரபிற் சொற்றுன்
கண்டுரு மினியமொழிப் பெரியதம்பிப்
பிள்ளையெனும் கலைவ லோனே.

பண்டிதமணி - புலவர்மணிப் பட்டங்கள்

தனது சமூகத்தின் ஆக்கங்கருதி ஒருவர் செய்த-செய்கின்ற பணியினைப் போற்றி, அன்னாரைக் கௌரவிக்கும் முகமாகப் பட்டங்கள் சூட்டுதல் பழந்தமிழர் மரபாகும். இதற்கமையவே, சீரிய தமிழ்த் தொண்டாற்றி மொழி வளர்க்கும் பணியிலே முன் அணியில் திகழும் பெரியார்களான கணபதிப்பிள்ளையவர்களும், பெரியதம்பிப் பிள்ளையவர்களும் பொருத்தமான பட்டங்கள் சூட்டப் பட்டு தமிழ் பேசும் மக்களனைவராலும் பாராட்டப் பட்டனர்.

முன்பு தினகரன் பத்திராதிபராயிருந்தவரும், தமிழபிமானமுள்ளவருமான வி. கே. பி. நாதன் அவர்கள் 1951-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலே நடைபெற்ற தமிழ் விழாவினையொட்டி, 'தினகரன்'னிலே எழுதிய ஆசிரியர் தலையங்கத்திலே பண்டிதர் கணபதிப் பிள்ளை அவர்களைப் 'பண்டிதமணி' என்று குறிப் பிட்டு எழுதினார். மேற்படி தமிழ் விழாவில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் வந்தவரும், கணபதிப் பிள்ளையவர்களது அருமை பெருமைகளை நேரில் அறிந்தவரும், தமிழ் வரலாற்று நாவல்களின் 'பிதாமகன்' என அழைக்கப்படுபவருமான திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) அவர்கள், தமது பத்திரிகையிலே தமிழ் விழாவினைப் பற்றி எழுதியபோது, வி. கே. பி. நாதன் 'சி. க.' பிள்ளைக்குச் சூட்டி அழைத்த பண்டிதமணி என்னும் சொல்லை அநுவதிப்பவர்போன்று, பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை என எழுதினார். இப்பட்டமானது பல்லாற்

ருனும் பொருத்தமாயிருக்கக் கண்ட 'சி. க.'வின் மாண வர்களும், நண்பர்களும், ஈழத்தறிஞர்களும் 'பண்டித மணி' என்னும் பட்டத்தினுலேயே 'சி. க.' பிள்ளை அவர் களை அழைக்கத் தொடங்கினுர்கள். அப் பட்டம் 'சி. க' பிள்ளை அவர்களின் பெயரோடிணைந்து நிலைத்து நிற்கத் தொடங்கியது. பண்டிதர் கணபதிப்பிள்ளை என அழைக் கப்பட்ட 'சி. க' பிள்ளை பண்டிதமணி என அழைக்கப் படலானுர். **ஈழத்தின் பண்டிதமணி அவரே.**

பெரியதம்பிப்பிள்ளையவர்களின் புலமையினையும் ஆற்றலையும் அறிந்து அனுபவித்த,மட்டக்களப்புத்தமிழ்க் கலைமன்றத்தினர், 1951-ஆம் ஆண்டிலே மட்டக்களப் பில் நடத்திய மாபெரும் பொதுக்கூட்டமொன்றிலே 'ஏ.பெ' அவர்களுக்கு **'புலவர்மணி'** என்னும் பட்டத்தினை வழங்கி அன்னுரைக் கௌரவித்ததனுல், தங்கள் மன்றத் திற்குக் கௌரவத்தைத் தேடிக்கொண்டனர். பொருத் தமாக வழங்கப்பட்ட இப்பட்டமானது, தமிழ்பேசும் மக்களனைவரதும் வரவேற்பினைப் பெற்றுக்கொண்டது. பெரியதம்பிப்பிள்ளைப் பண்டிதர் என அழைக்கப்பட்டு வந்த 'ஏ. பெ.' பிள்ளையவர்கள், புலவர்மணி என அழைக்கப்படலானுர். **ஈழத்தின் புலவர்மணி அவரே.**

'சி. க.' பிள்ளையவர்களுக்கும், 'ஏ. பெ.' பிள்ளை யவர்களுக்கும் முறையே பண்டிதமணி, புலவர்மணிப் பட்டங்கள் ஒரே ஆண்டிலேதான்-அதாவது 1951ஆம் ஆண்டிலேதான் - வழங்கப்பட்டதென்பதையும், அப்பட் டங்கள் இன்றுவரை நின்று நிலவுகின்றனவென்பதையும் நோக்கும்போது, பெரியார்களிருவரதும் ஒருமைப் பாடான வாழ்க்கையின் பெருமையினைக் காண முடி கிறது.

புலவர்மணிக்குப் பண்டிதமணிப்பட்டம்

யாழ்ப்பாணம் ஆரிய திராவிடா பாஷாபிவிருத்திச் சங்கத்தார், தங்கள் சங்கத்தின் இருபத்தொன்பதாவது ஆண்டு விழாவினைக்கொண்டாடியபோது, அவ்விழாவோடிணைத்து விசேட பட்டமளிப்பு விழாவொன்றனையும் நடாத்தினர். 1952ஆம் ஆண்டு நடந்தேறிய இப்பட்டமளிப்பு விழாவின்போது பகவத்கீதையை வெண்பாவாகப் பாடிய பெரும்புலவரான புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளையவர்களுக்கு 'பண்டிதமணி' என்னும் பட்டம் வழங்கப்பட்டது. புலவர்மணிக்குப் பட்டம் வழங்கப்பட்ட அதே விழாவிலே, மகா வித்துவான் கணேசையா அவர்களுக்கு, வித்துவ சிரோமணிப் பட்டமும், பண்டிதமணி நவநீதகிருஷ்ணபாரதியார் அவர்களுக்குப் புலவர்மணிப்பட்டமும்; வித்துவான் சுப்பையா பிள்ளை அவர்களுக்கு பண்டிதமணிப்பட்டமும் வழங்கப்பட்டன.

அப்பட்டமளிப்பு விழாவினைப்பற்றி எழுதிய கல்கிப் பத்திரிகையானது, புலவர்மணியவர்கள் பட்டம் பெற்றமையைப் பற்றிக்குறிப்பிடுமிடத்தில்,

'சுன்னாகம் ஸ்ரீ குமாரசுவாமிப் புலவர், முத்தமிழ்ப் பேராசிரியர் விபுலாநந்த அடிகளார் ஆகிய இரு பெரும் புலவர்களிடம் பாடங்கேட்டுப் பண்டிதராய் விளங்கும் திரு. ஏ. பெரியதம்பிப்பிள்ளையவர்கள், மட்டக்களப்புத் தமிழகத்தைத் தாயகமாகக் கொண்டவர்கள். செந்தமிழ்ச்சுவை நனி சொட்டச்

சொட்டத் தேனினுமினிய பாடல்களைப் பொழியுந் திறன் இவருக்கு இயற்கையாகவே உண்டு.'

என மிக அழகாக எழுதியுள்ளது.

'சி.க'பிள்ளையும், யா. ஆ. தி. பா. சங்கமும்

யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினரின் ஒருசில செயல்கள் தவறுடையனவாயமை வதைக் கண்ணுற்ற 'சி.க' பிள்ளையவர்கள், அவற்றைச் சுட்டிக்காட்டித் திருத்திடும்படி கேட்டுக்கொண்டார். பிழை நடப்பதைப் பார்த்துக்கொண்டு அறிந்தும் அறியாதவர்களாயும், 'நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத்திறனு' மற்றவர்களாயும் வாழும் மக்கள் கூட்டத்தினரைச் சேராதவரான பண்டிதமணியவர்கள் பிழையைக் கண்டித்த போதிலும், அவர் தம் கருத்தினை ஏற்றிட சங்கத்தினர் மறுத்துவிட்டனர். இதனுல் பண்டிதமணியவர்கள் சங்கத்திலிருந்து ஒதுங்கி வாழலானுர். 1952ஆம் ஆண்டிலே சங்கத்தினர் நடத்திய விசேட பட்டமளிப்பின் போது, 'சி க' பிள்ளைக்கும் பட்டமளித்து கௌரவிக்க முன்வந்தனர். தமது கருத்திலிருந்து மாறுபட்ட கருத்தினைக் கொண்டிருந்த சங்கத்தவரின் பட்டத்தினைப் பண்டிதமணியவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

ஓய்வு பெறுதல்

இருபெரும் 'மணி'களும் தாங்கள்வகித்த தமிழ்ப் பேராசிரியர்ப் பதவிகளினின்றும் 1959-ம் ஆண்டிலே ஓய்வு பெற்றுக்கொண்டார்கள். இஃது அவர்களிருவரதும் உத்தியோகத்தைப் பொறுத்த அளவில் ஓய்வாக அமையுமேதவிர, தமிழ்ப் பணியினின்றும் அவர்களாய்ப் பெற்றுக்கொண்ட ஒய்வல்ல. சிந்தனையாளர்களும், தமிழ்ப்பணிக்கென்றே தங்கள் வாழ்க்கை ஒழுங்குடன் ஒரு வழிப்படுத்தியவர்களுமான பெரியார்களிருவருக்கும் ஓய்வுதான் ஏது? அறிஞர்களென்போர் என்றும் தங்களை மாணவர்களாகவே கருதிக்கொள்ளும் சீரியமரபிற்கேற்ப, "கற்றது கை மண்ணளவு கல்லாததுலகளவு" என்று கூறிக் கொண்டு, வாழ்நாள் பூராவும் கற்கவேண்டுமென்னும் தீராத அவாவுடன் தமிழாராய்ச்சியிலும், தமிழ்த் தொண்டிலும் ஈடுபட்டுவரும் இப்பெரியார்களிருவருக் கும் ஓய்வேது?

பண்டிதமணி ஐயாவும், புலவர்மணி ஐயாவும் ஓய்வு பெற்றபோது அவர்களிருவரதும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களும் அன்பர்களுமாகச் சேர்ந்து விழாவெடுத் துப் பெரியார்களிருவரையும் பாராட்டியதன் மூலம் தங் களது நன்றிக்கடனில் ஒரு சிறு பகுதியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

'சி.க' பிள்ளை ஐயா அவர்களின் பாராட்டு விழாவா னது யாழ்ப்பாணத்திலே இரண்டு தினங்களாக வெகு கோலாகலமாக நடைபெற்றது. ஐயா அவர்களது உரு வப் படத்தினையும், ஐயா அவர்களால் போற்றப்படும்

கலாயோகி பொ. கைலாசபதி அவர்களின் உருவப்படத்தை யும் நீதிபதி சி. தம்பித்துரை அவர்கள் தலைமையில் ஊர்வல மாக எடுத்துச்சென்று பழம்பெருமைவாய்ந்த திருநெல் வேலி இந்து வாலிபர் சங்கமண்டபத்தில் வைத்ததோடு, மாபெரும் கூட்டமொன்றும் அங்கு நடைபெற்றது, கூட் டத்திலே பண்டிதமணி அவர்களது சேவையைப் பாராட் டிப் பெரியார்கள் பலர் சொற்பொழிவாற்றினார்கள். இவ்விழாவுக்குச் சிகரம் வைத்தாற்போல, ஐயா அவர் களைக் கௌரவிக்கும் முகமாக சிறப்பான மலரொன்றை யும் வெளியிட்டார்கள். அறிஞர்கள் பலரது கட்டுரை களையும், சிறந்தபல கவிதைகளையும் கொண்ட அம்மல ரானது, ஐயா அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. ஐயா அவர்களின் பல்வேறு அம்சங்களையும், பல்வேறு கோணங் களிலிருந்து காட்டி நிற்கும் அம்மலரானது, தமிழ்மக்கள னைவரதும் பாராட்டைப் பெற்றுவிட்டது.

பண்டிதமணி அவர்களின் சொந்த ஊராகிய மட்டு விலிலும், அவர்களுக்கு விழா எடுக்கப்பட்டது. அவர் களது பெயரில் மண்டபமொன்று கட்டப்பட்டு அஃது ஒரு நூல் நிலையமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பண் ணாகம் மெய்கண்டான் பாடசாலையில் நடைபெற்ற பிறி தோர் விழாவிலே, குன்றக்குடி அடிகளார் தலைமை வகித் துப் பண்டிதமணி அவர்களைப் பாராட்டியதோடு, பொன் னாடை போர்த்தியும் கௌரவித்தார்கள். நாவலப்பிட் டியில், அரிஞர் தனிநாயக அடிகளாரின் தலைமையில் நடை பெற்ற விழாவொன்றிலும் 'சி.க' பிள்ளை அவர்கள் கௌரவிக்கப்பட்டார்.

புலவர்மணி ஐயாவின் பாராட்டு விழாவானது மட் டக்களப்பு அரசினர் கல்லூரியிலே சிறந்தமுறையில் நடை பெற்றது. புலவர்மணி அவர்களது உடனாசிரியர்களும் மா ணவர்களும் பொதுமக்களும் நிறைந்திருந்தகூட்டத்திற்கு

இலங்கையிலுள்ள இராமகிருஷ்ண சங்கத்தின் பாடசாலை களது பொதுமுகாமையாளராக கடமையாற்றியவரும், விபுலாநந்த அடிகளாரோடு நெருங்கிப் பழகியவருமான சுவாமி நடராஜானந்தா அவர்கள் தலைமை தாங்கினார்கள். இவ்விழாவிலே புலவர்மணி ஐயா அவர்களது உருவப்படமொன்று சுவாமி அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. விழாவில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றிய பெரியார்களெல்லோரும் 'ஏ. பெ' பிள்ளை அவர்கள் செய்த—செய்கின்ற சீரிய பணிகளையெல்லாம் குறிப்பிட்டார்கள். விழா நிறைவுடன் நடைபெற்றது.

புலவர்மணி ஐயா அவர்களது அறுபது வருடப் பூர்த்தியையும், அவர்கள் ஓய்வு பெற்றமையையும், அன்னார் தமிழ் மொழிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் செய்து வரும் தொண்டுகளை நினைவு கூறுவதையும் மனதிற் கொண்டு, கிழக்கிலங்கைத் தமிழ் பேசும் மக்களனைவரும் பங்குகொள்ளத்தக்க மகத்தான விழாவொன்றனை நடத்திடப் பலர் முயன்றார்கள். இதற்கான ஆரம்ப நிகழ்ச்சிகள் பல நடைபெற்றன. பணம் சேர்க்கும் முயற்சியும் இடம் பெற்றது. சுயநலமிகள் சிலரது சில பல சம்பவங்கள் விழாவினை நடைபெறச் செய்யாமலாக்கிவிட்டன. விழா நடைபெறும் திகதியை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மக்கள் ஏமாற்றமடைந்தார்கள். மக்களது ஏமாற்றத்தைத் தற்போது மட்டக்களப்பில் இயங்கிவரும் சங்கங்கள், ஐயா அவர்களைக் கௌரவித்து வருவதன் மூலம் போக்கி வருவதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

ஐயா அவர்கள் இருவரும் ஓய்வு பெற்றுத் தங்கள் தங்கள் இல்லங்களில் வதிந்து கொண்டு, தமிழ் வகுப்புகளில் பங்குகொண்டும், சமயவகுப்புகளில் ஈடுபட்டும் வருவதை நாம் இன்றும் காணக் கூடியவர்களாய் இருக்கிறோம்.

வேண்டுதல்

ஈழத்தமிழகத்தில் இன்று உயர் நிலையினை அடைந்துள்ள 'சி.க' பிள்ளை ஐயா அவர்களும், 'ஏ.பெ' பிள்ளை ஐயா அவர்களும் எமது மொழிக்கும், கலைக்கும், மதத்திற்கும், நாட்டிற்கும் நல்லபல தொண்டுகளைத்தொடர்ந்தும் செய்துவருவார்களென்பதில் சந்தேகம் கொள்ளுவதற்கே இடமில்லை. தமிழன்னையானவள் இவர்களிருவராலும் பெரிதும் மகிழ்வடைகிருள்; இனியும் மகிழ்வடைவாள்.

''சுயசரிதம்'' எழுதுவது ஈழநாட்டிலே இடம்பெறவில்லையென்றே கூறவேண்டும். பண்டிதமணி ஐயாவும் புலவர்மணி ஐயாவும் தங்களது சுய சரிதங்களை எழுதுதல் வேண்டும். இவர்களது வாழ்க்கையானது, இலங்கையிலே தமிழ்மொழியானது இக்காலகட்டத்திலே வளர்ந்து வந்த வரலாற்ருேடு தொடர்புடையதாயிருப்பதனுல், இவர்களிருவரதும் விளக்கமான சுயசரிதங்களை அறிவது பயனுடையதாகவே இருக்கும். தமிழ்பேசும் மக்களனைவரும் இதனை மனமகிழ்ச்சியுடன் வரவேற்றுப் பயனடைவார்கள். இவ்வாருன சுயசரிதங்கள், மொழிப்பற்றின்றி வாளாவிருப்போரைத் தட்டியெழுப்பக் கூடிய வலிமையைப் பெற்றிருக்கின்றன. மரபுபேணி, வழிமுறையாக மொழியறிவு பெற்றுக்கொண்ட பெரியார்கள் இருவரும் இந்தப்பணியில் ஈடுபடல்வேண்டும். இந்தப் பணியின் மூலம் தமிழ் பேசும் மக்கள் நிறைவான பயனடைவார்களென்பதும் தமிழ் மொழியானது வளமடையுமென்பதும் எமது உறுதி.

எமது மத்தியில் வாழ்ந்து வரும் பெரியார்களான பண்டிதமணி ஐயாவும், புலவர்மணி ஐயாவும் தாங்கள் செய்துவரும் பணிகளைத் தொடர்ந்து செய்யவும், தமிழ் பேசும் மக்கள் இவர்களிடம் எதிர்பார்க்கும் காரியங்களைச்செய்து முடிக்கவும், இவர்களிருவருக்கும் வேண்டிய நிறைவான ஆயுளையும் ஆரோக்கிய வாழ்வையும் அளித்திடும் வண்ணம், எல்லாம் வல்ல இறைவனது திருவடிகளைச் சிந்தித்து இறைஞ்சுவோமாக!

* * *

முடிவுரை

அருமை பெருமையாக நாம் பெற்றுக்கொண்ட 'மணி'களிருவருக்கும் தமிழுலகும், தமிழ் பேசும் மக்களாகிய நாமும் நிறைந்த கடமைப்பாடு கொண்டிருக்கிறோம். நமக்காகவும் நமது வருங்காலச் சந்ததிக்காகவும் இம்பெரியார்களிருவரும் தங்களால் முடிந்தவரையும் நிறையச் செய்துள்ளார்கள்; செய்தும் வருகிறார்கள்.

"நன்றி மறப்பது நன்றன்று"

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந் நன்றி கொன்ற மகற்கு",

என்பவற்றை நன்கறிந்து, நன்றிக்கடன் செய்வதை வாழ்க்கையின் இலக்கணமாக்கிக்கொண்டு வழிமுறையாக வாழ்ந்துவரும் தமிழ் பேசும் மக்களாகிய நாம் இப்பெரியார்களிருவரையும் சிறந்த முறையில் கௌரவித்திட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பண்டிதமணி அவர்களது கட்டுரைகளில் ஒரு சில நூல்வடிவு பெற்றுவிட்டபோதிலும், நூல்வடிவு பெறாமல் இருக்கும் கட்டுரைகளோ பல.

புலவர்மணி அவர்களது செய்யுள்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. கட்டுரைகளும் பல. இவையாவும் நூல்வடிவு பெறாமலே இருக்கின்றன.

தமிழ் பேசும் மக்களாகிய நாம் இவற்றினை நூல் வடிவு பெறச்செய்வதன் மூலம் எமது நன்றிக்கடனின் ஒரு பகுதியைத் தீர்த்துக் கொள்ளலாம்.

ஐயாமார் இருவரதும் வசதியினை மனதிற்கொண்டு அவர்கள் கலந்து கொள்ளக் கூடியவகுப்புகளை நடத்தி, அவர்களது பேரறிவினைப் பயன்கொள்ளலாம்.

ஐயாமார் பங்கு கொள்ளக்கூடிய விழாக்களை ஏற்படுத்தி அவற்றின் மூலம் அவர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஐயா அவர்களது புத்தகங்களை வாங்கிப்படித்து அவர்களுக்கு வேண்டிய ஊக்கங்களைக் கொடுக்கலாம்.

பெரியார்களிருவரதும் வாழ்க்கையைப் பின்பற்றி, அவர்களது அடிச்சுவட்டில் நடந்து, அவர்கள் செய்து வரும் பணிகளில் நாமும் பங்குகொண்டு அவர்களுக்கு ஒத்தாசை செய்யலாம். வழிமுறையாக மரபு பிறழாது வளர்ந்துவரும் தமிழ் மொழியின் பணியிலே, அவர்களுக்குப் பின் நாமும் கலந்துகொள்ள நமக்கு வேண்டிய பயிற்சியினை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கைப் பல்கலைக்கழகமும், வித்தியாலங்கார—வித்தியோதய பல்கலைக்கழகங்களும் சிங்கள மொழிக்குத் தொண்டாற்றும் பெரியார்களை உயர்ந்த முறையில் கௌரவித்து வருகின்றன; கலாநிதிப்பட்டங்களை வழங்கிப் போற்றுகின்றன. இப்பல்கலைக் கழகங்கள் தமிழ் மொழிக்குத் தொண்டாற்றிய—தொண்டாற்றும் பெரியார்களை நினைத்துப்பார்ப்பது கூட இல்லை. இவற்றுள் குறிப்பாக இலங்கைப் பல்கலைக்கழகமானது பண்டிதமணி ஐயாவையும், புலவர்மணி ஐயாவையும் கௌரவிப்பதற்கு இனியேனும் முன்வரவேண்டும். இவ்வாறு கௌரவிப்பதன் மூலம் இலங்கையின் தேசிய ஒற்றுமையானது நிச்சயம் இறுக்கமடையும். பல்கலைக்கழகங்களோடு தொடர்புடைய தமிழறிஞர்கள் இவ்விடயத்தில் ஊக்கம் கொண்டு, இப்பெரியார்களிருவரையும் கௌரவிப்பதற்குரிய வழிவகைகளைச் செய்திடல் வேண்டும்.

தமிழ் நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் தாமும், ஈழத்தறிஞர்களைப் போற்றுவதில் தற்போது சிரத்தை கொண்டனவாய்த் தெரியவில்லை. இது தமிழர்தம் பாரம் பரியத்திற்கும், பண்பாட்டிற்கும் பொருந்தாத நிலையே யாகும். நம்மை நாமே உதாசீனஞ் செய்தால் எம்மைப் பார்த்து உலகம் சிரிக்காதா? இப்பெரியார்களிருவரை யும் கௌரவிப்பதன் மூலம், நமது இணைப்பை இன்னமும் இறுக்கமாக்கலாமல்லவா? மனமிருந்தால் இடமுண்டு.

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித்தமராய்க் கொளல்.

(தமிழ்மறை)

அரசு வெளியீடுகள்

தோணி

எழுதியவர் :

வ. அ. இராசரத்தினம்

ஈழத்துச் சிறந்த சிறுகதையாசிரியரான திரு. வ. அ. இராசரத்தினம் அவர்களின் ஆரம்பகாலச் சிறுகதைகள் பதினொன்றைக் கொண்டுள்ள இத்தொகுதியில், கிழக்கு மாகாண மக்களின் சம்பிரதாயங்களையும் அபிலாஷைகளையும் நேரடியாகக் காணலாம்.

விலை ரூ. 2-00

வாழையடி வாழை

எழுதியவர் :

க. செபரெத்தினம்

ஈழத்துப் பெரியார்களான பண்டிதமணி கணபதிப் பிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை ஆகிய இரு புலவர்களின் வரலாற்றோடு, ஈழத்து இலக்கிய வளர்ச்சிச் சுருக்கத்தையும் ஆசிரியர் கூறுகிறார்.

விலை ரூ. 2-00

எமது அடுத்த வெளியீடு!

புலவர்மணி

ஏ. பெரியதம்பிப்பிள்ளை

அவர்கள் எழுதிய

பகவத் கீதை வெண்பா

VALAIYADI VALAI

- K. SEBARATNAM

'இரட்சணிய அம்மானை' என்னும் நூலினை இயற்றிய திரு. அ. ப. கனகரெத்தினம் அவர்களது இளைய மகனாக, மட்டக்களப்பைச் சேர்ந்த தம்பிலுவில் என்னும் கிராமத்திலே பிறந்த இவர், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் ஆங்கிலம் கற்றதன் பின்னர், நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று ஒரு தமிழாசிரியனாய் வெளி வந்தார். இலங்கைப் பல்கலைக் கழக **வித்துவான்** பட்டமும் பெற்றுள்ள இவர் தற்போது, தாம்படித்த மெதடிஸ்த மத்திய கல்லூரியின், தலைமைத் தமிழாசிரியராய்ப் பணி புரிகிறார்.

நீண்டகாலமாய் வாசகனா
டுமே இருந்துவந்த இவர், 1
ஆண்டில் **அன்ரன் செக்கோவின்'**
என்னும் ஓரங்க நாடகத்தைத்
ழில் மொழிபெயர்த்ததைத்
ந்து, எழுத்துத்துறையில் இ
யுள்ளார். பலவகைப்பட்ட கட்
களை எழுதி கட்டுரையாசிரி
விளங்கும் இவர், சமீபகால
சிறுகதைகளும் எழுதி வருகி

COVER PRINTED AT THE RAINBOW PR

231, WOLFENDHAL STREET, COLOMBO.